Gulliver's Travels — No. II

A

# Voyage to Brobdingnag

TAMIL

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1914 [Price As. 6

Rights Reserved]

கலிவர் கடற்பிரயாணங்கள் — II

# பிராப்டிங்நாக் யாத்திரை

மணி - திருஞானசம்பந்த முதலியார்

எழுதியது

சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

[ரிஜிஸ்தர் செய்தது]     1914     [விலை 6 அணா]

Printed at
the Chandra Press,
Madras.

# முன்னுரை

'தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு' (செந்நாப் போதார்)

'கலிவர் பிராப்டிங்னுக் யாத்திரை' என்னும் இது, கலிவர் செய்த நான்குபுறத்தும் கடற் பிரயாணங்களுள் இரண்டாவது. இதன்கண் கதை ஒழுங்காக நடைபெறுகின்றது. கதைப் போக்கினால் இது லிலிபுட்யாத்திரையினும் சிறந்தது. ஆனால், இது அதனைப்போல் அத்துணை ஆவாவுடன் படிக்கப்பட்டு வரவில்லை.

இதன்கண் இதன் ஆக்கியோனாகிய ஜோனாதன் சுவிப்ட் (Jonathan Swift) என்னும் நுண்ணறிவுடைய இசைப்புலவனின் கருத்துக்கள் சில புலப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, மக்கள் படைப்புக் காலத்து இப்பொழுது காணப்படும் இச் சிற்றுருவுடலின்றிப் பேருருவினராக இருந்திருக்க வேண்டு மென்பதாம். அதற்குக் காரணம் உலகப் பொருள்களின் ஒழுங்கே என்று கூறுகிறார்.

இன்னோரன்ன நூல்களைப் படிப்பதனால் அறிவு வளரும் என்பது திண்ணம். 'உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்று சான்றோரும் பணித்தார். முடிவாக, இக்கதையினைப் படிக்குநர், மனமகிழ்ச்சியும், மனோபாவிக சக்தியும், பல்வகை உணர்ச்சிகளும், மெய்ப்பாடுகளும் பெற்று இன்புறுவர்.

இதனை எழுதுமாறு என்னை ஊக்கி யுதவிபுரிந்த சென்னை, முத்தியாலுப் பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப் புலவராகிய என் அரிய சகோதரர் ஸ்ரீமாந். மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் அவர்கட்கு எழுமையுங் கடமைப் பட்டுள்ளேன்.

இச்சிறு மொழிபெயர்ப்பைச் சிவபெருமான் திருவடியின்பம் பெற்ற அன்பிற் சிறந்த என் அன்னையார் ஸ்ரீமதி, வேதவல்லி அம்மையவர்கள் ஞாபகக் குறியாக உரிமையாக்குகின்றேன்.

'எனைத்தானுந் தாயிற்சிறந்த தமரில்லை'
(விளம்பி நாகனார்)

'கடனீர்ப் பரப்பி னிடைசீர்த் திவலைக
ளெண்ணமை கால மண்ணிடை வைகி
நின்போ லோருநீ பொன்னிறச் செய்தே
யாலய மமைத்துக் காலையு மாலையு
முச்சி முதலா வுள்ளங் கால்வரை
யழலிடைப் பட்ட விழுதி னுருகி
யெங்குங் கண்களா வெங்கும் வாய்களா
வெங்குங் கைகளா வெழில்பெறப் பெற்று
நோக்கி நோக்கித் தூக்கிற் பைந்தமிழ்ப்
பல்வகை மாலை நல்வகைப் புனைந்து
குடந்தம் பட்டுத் தடங்கை கூப்பித்
தொழுதும் வாழ்த்தியுங் கொழுமலர் சிதறியு
மாடியும் பாடியு மரற்றினு மதுதா
னொருநா ணீபெறு பெருநவை யதனிற்
கால்கூறுக்குங் கைம்மா றன்றே'

(மணி. திருநாவுக்கரசு முதலியார்.)

இங்ஙனம்,
மணி. திருஞான சம்பந்தன்.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# கலிவர் பிராப்டிங்னுக் யாத்திரை

## முதல் அத்தியாயம்

4189

நான் லிலிபுட் நாட்டை விட்டு என் சுயதேசம் வந்த இரண்டு மாதத்திற்குள் மறுமுறையும் தேகப்பிரயாசமும் மேன்மையும் பெற்ற வாழ்க்கையை வாழ எனக்கு விருப்பம் மிகுதியாயிருந்தது. ஆதலால் நான் என் மனைவி மக்களைவிட்டு மீண்டும் வெளிநாடுகளுக்குச் செல்லும் சிந்தை கொள்ளலானேன். பின்னர் 1702 - ஆம் வருஷம் ஜூன் மாதம் 20 - ஆந் தேதி **சூரத்** பட்டணம் செல்லும் ஓர் கப்பலில் எனக்கு வேண்டிய சாமான்களுடன் நான் ஏறிச் சென்றேன். அக் கப்பலுக்குத் தலைமை வகித்திருந்தவர் பெயர் **ஜான் நிகோலஸ்** எனப்படும். பிறகு எங்கள் கப்பல் **குட்ஹோப்முனை** அடையும் வரையில், இறைவனருளால் இடையூறு யாதுமின்றி நாங்கள் சென்று கொண்டிருந்தோம். அவ்விடம் வந்ததும் எங்களுக்கு நல்ல ஜலம் அத்தியாவசியமா யிருந்தமையால் அங்கே நாங்கள் எங்கள் கப்பலைச் சிறிது காலம் நிறுத்தினோம். மேலும் அப்போது கப்பலில் ஓரிடத்தில் பொத்தல் விழுந்திருந்ததையும் நாங்கள் காணலுற்றோம். ஆதலால் கப்பலிலிருந்த சாமான்களை யெல்லாம் நாங்கள் பத்திரமாய்க் கீழே யிறக்கிக் கப்பலைச் சரிப்படுத்துவோ மாயினோம். அவ் வேலை முடிவு பெற்றதும் கப்பற்றலைவர் தமக்குக் குளிர் காய்ச்

சல் வரப்பெற்று மிகத் துன்புறுவாராயினர். அதைக் கண்டு நான் அவர் தேகசுகமடையும் வரையில் நாங்கள் அவ் விடத்தை விட்டுப் பெயரக்கூடாமையை நினைந்து பெரிதும் மனம் வருந்தினேன்.

பின்னர் ஆண்டவன் அருளின் நோக்கால் அந்தத் தலைவர் தேகம் வல்லே சுகமடைந்தது. அதைக் கண்டு நான் அளவில்லா வானந்தம் பெற்றேன். பின்னர் அதிவிரைவில் கப்பல் ஆண்டிருந்து பெயர்ந்து **மடகாஸ்கர்** ஜலசந்தியை வந்தெய்தியது. நான் அதுகாறும் எங்கள் கப்பலுக்கு எத்தகைய தீமையும் வரக் காணவில்லை. அதன் பின்னர் எங்கள் கப்பல் மேற் கூறப்பட்ட **மடகாஸ்கர்** என்னும் பெயரையே பெற்ற தீவின் வடதிசையாய்ச் செல்லுகையில் பெருங்காற்று ஏப்ரல் மாதம் 19 - ஆந் தேதி துவங்கி இருபது தினங்களாக நாளுக்குநாள் அதிக வலிவாக அடித்தது; அன்றியும் அது வழக்க விரோதமாக பெரும்பாலும் மேற்றிசையை நோக்கியே அடிக்க வாரம்பித்தது. அவ்வமயந்தான், அப் பக்கங்களி லெல்லாம் பெருங்காற்று டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரையில் ஓரே நிலையாய் அடித்தல் வழக்க மென்ற விஷயம் எங்கள் கவனத்திற்கு வரலாயிற்று.

அத் தினங்களில் எங்கள் கப்பல் **மோலுக்கா** தீவுகளுக்குச் சற்று வடக்கே அடித்துக்கொண்டு போகப்பட்டது. அவ்வாறே அத் தினங்களி லெல்லாம் அக் கப்பல் கடலிலேயே பற்பல இடங்களுக்கு அடித்துக்கொண்டு போவதும் மீளவும் முன்னிருந்த இடங்களுக்கு அடித்துக்கொண்டு வருவதுமான நிலையைப் பெற்றிருந்தது. பிறகு மே மாதம் 2 - ஆந் தேதி காற்று முற்றி

லுங் குறைந்து எங்குப் பார்த்தாலும் ஒரே தன்மையாக அரவமின்றி இருந்தது. அத் தருணந்தான் என் கலங்கிய சிந்தை ஒருவாறு தேறுதலை யடைந்தது. ஆயினும், அக் கப்பற் றலைவர் அத்துறையில் நன்கு பயின்று மிகத்திறமை தமக்குக் கைவரப்பெற் றிருந்தமையால், "நீங்கள் இது போழ்தே களிப்படைதல் பேதமையாகும். ஏனெனில், நாளையதினம் ஓர் பெரும் புசற்காற்று அடிக்கு மென்பது திண்ணம்" என்று எங்களிடம் கூறுவாராயினர். அன்னவர் கூறியவாறே மறுதினம் ஓர் பெரும் புசற்காற்று அடிக்க வாரம்பித்தது. அச் சமயந்தான் அப் பக்கங்களில் தெற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று அடித்தல் வழக்கம்.

கப்பல் நிச்சயமாய் கடலில் மூழ்கிவிடு மென்றே எங்களுக்குத் தோன்றிற்று. ஆதலால், எங்களா லியன்ற வரையில் நாங்கள் பற்பல முயற்சிகள் இயற்றிப் பார்த்தோம். ஆனல் அவற்றாலெல்லாம் எவ்வித பயனும் விளையாதொழியினும் ஏதோ எங்கள் கப்பல் கடலில் மூழ்காமல் அங்கு மிங்கும் அலைந்து கொண்டேனும் இருந்தது. பிறகு சற்று நேரத்திற்குள் எங்கள் கப்பல் சுமார் 500 - மைல் தூரம் கிழக்குப் பக்கம் போய்விட்டது. அங்கிருந்து நாங்கள் எவ்விடம் வந்தோமென்று அனைவரும் சிந்திக்கும் வழி, எங்கள் ஒருவருக்காயினும் அஃது எந்தவிடமென்று சிறிதும் புலப்படவே யில்லை. மிக்க அனுபவமுற்ற மிகப் பழைய மாலுமிகளும் அதனை ஒரு சிறிதாயினும் அறிந்தாரில்லை.

எங்களிடம் உணவிற்கு வேண்டிய சாமான்கள் மாத்திரம் குறைவின்றி யிருந்தன. கப்பலும் எத்தகைய பழுதை

யும் அடையாமல் தனது பாகங்கள் அனைத்தும் செவ்வனே அமைக்கப்பெற்றிருந்தது. ஆயினும் நல்ல ஜலம் கிடைக்காத ஓர் குறையே எங்கள் மனதைப் பெரிதும் வருத்தியது. அதன்பொருட்டு நாங்கள் கப்பலை வேறிடத்திற்குச் செலுத்த நினைத்துணையும் எண்ணவேயில்லை. ஏனெனில் நாங்கள் அங்ஙனம் செய்யலுற்றால் எங்கள் கப்பல் அடிக்குங் காற்றால் அவசியம் மூழ்கிவிடுமென்று மிகுந்த பயமடையலானோம்

1703 - ஆம் வருஷம் ஜூன் மாதம் 16 - ஆந் தேதி கப்பலின் உச்சியிலேறி யிருந்த இளைஞனொருவன் அருகே பூமி யிருந்ததைக் கண்டு பிடித்தான். 17 -ஆந் தேதி நாங்கள் ஓர் பெரிய நிலப்பாகத்தைக் காணலுற்றோம். அஃது ஓர் பெரிய தீவென்றேனும் அல்லது ஓர் கண்டமென்றேனும் எங்களால் நிச்சயிக்க முடியவில்லை. அதன் தென்திசையில் அப் பூமியின் சிறுபாகம் கடலுக்குள் வந்திருந்தது. அன்றியும் அங்கே ஓர் சிறிய வாய்க்காலுமிருந்தது அவ் வாய்க்கால் நூறு டன் எடையுள்ள ஓர் கப்பல் நிற்கத்தக்க ஆழத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆதலால் அதற்கு ஒரு மைல் தூரத்திற் கப்பால் நாங்கள் எங்கள் கப்பலை நிறுத்தி நங்கூரம் போட்டோம். கப்பற்றலைவர் தம் மனிதர்களில் பன்னிரண்டு பேரை நல்ல ஜலம் கொண்டுவரும்படி ஓர் பெரிய படகில் அந் நிலப்பாகத்திற்கு அனுப்பினர். அச்சமயம் அவர், அவர்களிடம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டுச் சில தக்க ஆயுதங்களையும் ஜலம் கொண்டுவருதற் பொருட்டுச் சில பாத்திரங்களையும் கொடுத்தனுப்பினர். அதைக் கண்டு நானும் அம் மனிதர்களுடன் செல்லுதற்கு அதிக விருப்

புற்றேன். ஏனெனில், அந் நிலப்பாகத்தைக் கண்டு களித்தல் வேண்டுமென்றும், அதன்கண் பற்பல புதிய பொருள்களைக் கண்டு பிடித்தல் வேண்டுமென்றும் எனக்கு எண்ணமுண்டாயிற்று. ஆதலால், நான் என் விருப்பத்தைக் கப்பற் றலைவருக்கு அறிவித்து அவர் அனுமதி பெற்று நானும் அம் மனிதர்களுடன் சென்றேன்.

நாங்கள் அந் நிலப்பாகத்திற்குச் சென்றதும் ஆங்கு எந்த ஆறும், ஊற்றும், மனிதர் தோற்றமும் எங்களுக்குக் காணப்படவில்லை. ஆதலால் நல்ல ஜலமுள்ள இடத்தை நாடி என்னுடன் வந்தவர்கள் கடலோரமே சென்று கொண்டிருந்தார்கள். நான் தனியே வேறு வழியில் சுமார் ஒரு மைல் தூரம் சந்தோஷமாக நடந்துகொண்டிருந்தேன். அவ்வளவு தூரமும் அத் தேசம் பயனற்ற நிலங்களையும் கற்பாறைகளையுமே வுடைத்தா யிருந்தது. ஆதலால், நான் உணர்வு சலித்து மனவூக்கத்தை இழந்து சற்று நேரம் நாலாதிக்கும் உற்று நோக்குவே னுயினேன். அத் தருணம் என் மனதைக் கவரக்கூடிய காட்சியொன்றேனும் என் கண்களுக்குத் தோன்றவில்லை. ஆதலால், நான் முன் வந்த வழியே மீளவும் செல்லுவே னுயினேன். நான் பின்னர் கடற்கரை யோரம் வந்ததும், ஆங்கு என்னுடன் வந்த மனித ரெல்லோரும் தாங்கள் பிழைத்துக் கொள்ளும் நிமித்தம் படகிலேறிக் கொண்டு அதனைக் கப்பலின் பக்கம் விரைவாகச் செலுத்திக்கொண்டிருந்ததைக் கண்டேன். நானும் அவர்களுடன் செல்லலா மென்று அவர்களை உரத்த குரலில் கூப்பிட்டேன். பின்னர் நான் என் கரங்களையும் பன்முறை தட்டிப் பார்த்தேன். ஆனல் அவர்கள் அவற்றை யெல்லாம் ஒரு சிறிதாயினும் கவனிக்

கவேயில்லே. ஏனெனில் அவர்கள் பின்புறத்தில் ஓர் பிர மாண்டமான மனிதன் அவர்களைத் துரத்திக்கொண்டு சென்றனன். அம் மனிதன் தன்னுலியன்ற வரையில் தண்ணீரில் விரைவாக நடந்துகொண்டிருந்தான். அவ னைக் கண்டதும் நான் எவ்வளவு பயமடைந்தேனென்று நான் ஈண்டு வரைய இயலாது. "ஆ! கடவுளே! இதுவும் உலகமா?" என்று பின்னர் அப் புதுமையை வியந்து ஆழ்ந்து சிந்திக்கலானேன்.

மேற்கூறப்பட்ட அப் பிரமாண்டமான மனிதன் கட லின்கண் நடந்து செல்லுகையில் ஜலம் எங்கும் அவன் முழங்காலுக்குமேல் வரவேயில்லே. அவன் தன் காலடி களை மிகவும் நீண்ட தூரத்தில் வைத்துச் சென்றுகொண் டிருந்தான். ஆனுலும், தெய்வச் செயலாய் படகிற் சென்ற மனிதர்கள் அப் பிரமாண்டமான மனிதன் தங் களைப் பின் தொடர்ந்தபோது அரை மைல் தூரத்திற்கு மேல் சென்றிருந்தார்கள். அஃதன்றியும் கடலின்கண் ஆங்காங்கு மிகக் கூர்மையான கற்பாறைகள் நிறைந்திருந் தன. ஆகலால், அப் பிரமாண்டமான மனிதனுல் தன் முன் சென்றுகொண்டிருந்த படகைப் பிடிக்கச் சாத்தியப் படவில்லே. அவ் விஷயத்தை நான் பின்னர் தான் அறிய லானேன். ஏனெனில், நான் அத்தகைய மனிதனைக் கண் டதும் பெரிதும பயமுற்று என்னுலியன்ற வரையில் வெகு விரைவாக வந்த வழியே திரும்பி வோடினேன். பிறகு அங்கே தோன்றிய ஒரு செங்குத்தான குன்றின்மேல் நான் ஏறிக்கொண்டேன். அக் குன்றின் மீதிருந்து நான் நாலா திக்குகளேயும் உற்று நோக்குகையில் சமீபத்தில் மனிதர் வாசமுள்ள ஓர் நாடு இருந்ததை நான் அறிவேனுயினேன்.

நான் அந் நாட்டில் பயிர் பச்சைகள் நிறைந்திருந்ததைக் கண்டேன். அவற்றைக் கண்டதும் எனக்கு எல்லாவற்றினும் அதிக வியப்பை விளைவித்தது அங்கே தோன்றிய புற்களின் நீளமேயாம். அந் நாட்டுப்புற்களே அங்கேயுள்ள ஆடுமாடுகளுக்கு முக்கிய வுணவாக இருத்தல் வேண்டுமென்று நான் எண்ணினேன். அப்புற்கள் சற்றேறக் குறைய இருபதடி உயரம் வளர்ந்திருந்தன.

பின்னர் நான் அகன்ற ஓர் பெரிய சாலையின் வழியே நடந்து செல்லுவே ளையினேன். அது எனக்கு மாத்திரம் அவ்வளவு பெரியதாகக் காணப்பட்டதே யன்றி மற்றைய அந் நாட்டிலுள்ள மாந்தர்க்கு அது வயல்களினிடையே செல்லும் ஓர் சிறு குறுகிய வழியாகத்தான் இருக்கவேண்டுமென்று நான் தீர்மானித்தேன். ஏனெனில், நான் மேற்கூறிய பெரியசாலை, கோதுமைப் பயிர் செய்யப்படும் நிலங்களின் மத்தியில் சென்று கொண்டிருந்தது. ஆதலால் அக் குறுகிய வழி நிலங்களின் மத்தியில் மனிதர்கள் பன்முறை நடந்து சென்றதால் உண்டா யிருக்கவேண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்வழியில் நான் சற்று நேரம் நடந்து கொண்டிருந்தேன். ஆனால் அதன் இரு பக்கங்களிலும் எவ்வித தோற்றத்தையும் என்னால் காண முடியவில்லை. ஏனெனில், அத் தருணம் அந் நாட்டில் அறுவடை சமயம் நெருங்கி யிருந்ததால் அச் சாலையின் பக்கங்களிலுள்ள கோதுமைப் பயிர்களெல்லாம் சுமார் நாற்பதடி உயரம் வளர்ந்திருந்தன. நான் சுமார் ஒரு மணிநேரம் வரையில் ஒரு வயலிலேயே செல்ல வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அத் தேசத்திலுள்ள ஒவ்வொரு நிலமும் அவ்வளவு பெரியதா யிருந்தது. பிறகு ஒரு

டணி நேரங் கழிந்ததும் நான் மேற்கூறிய வயலின் முடிவில் வந்து சேர்ந்தேன். அங்கே அதற்கு வேலிபோட்டிருந்ததை நான் காணலுற்றேன். அவ்வேலி சற்றேறக்குறைய நூற்றிருபதடி உயரமிருந்தது. நிற்க, அத்தேசத்திலுள்ள மரங்களின் உயரத்தைக் குறித்து என்னால் ஒன்றும் சொல்லுதற் கியலாது. ஏனெனில், அவை வானத்தையளாவி யிருந்தமையால் அவற்றின் உச்சியின் முடிவு என் கண்களுக்குத் தோன்றவில்லை. அவ்வேலியைக் கடந்து அடுத்த வயலுக்குச் செல்லுதற்காக அதன் இரு பக்கங்களிலும் நன்னான்கு படிகள் வைக்கப்பட்டிருந்தன. அப்படிகளின்மேல் என்னாலேறச் சாத்தியப்படவில்லை. ஏனெனில், அவை ஒவ்வொன்றும் ஏறக்குறைய ஆறடி வுயரமிருந்தன. ஆதலால் அவ்வேலியின் கீழ் எங்கேயாகிலும் நானுழைந்து செல்லுதற்குத் துவாரம் இருக்கிறதாவென்று அதைச் சுற்றிலும் நன்றாகக் கவனித்துப் பார்த்தேன். நான் அவ்வாறு செய்து கொண்டிருக்கையில் அத்தேசத்து மனிதனொருவன் நானிருந்த நிலத்தை நோக்கி வந்துகொண் டிருந்தான். அவனும் நான் முற்கூறிய மனிதன் உயரமும் பருமனுமே யிருந்தான். அவன் உயரம் சாதாரண ஒரு பெரிய கோபுரத்தி னுயரத்திற்குச் சரியாயிருக்கும். அம்மனிதன் தன் காலடி ஒவ்வொன்றும் சுமார் பத்துக் கஜதூரம் வைத்து என் பக்கமாக வந்துகொண்டிருந்தான்.

நான் அத்தருணம் அவனைக் கண்டு அளவில்லா வியப்பும் விசனமுங் கொண்டேன். பின்னர் நான் பயிர்களுக்குள் நுழைந்து ஓரிடத்தில் சென்று ஒளித்துக் கொண்டேன். நான் அவ்விடத்தி லிருந்து அம்மனிதனை உற்றுப்

பார்த்தேன். அப்போது அவன் நான் மேற்கூறிய வேலி யின்மேல் நின்று கொண்டு தான் வந்த வழியினையே ஏதோ கவனமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தான். சற்று நேரங் கழிந்ததும் அவன் ஒரு பெரிய கூச்சலிட்டான். அக்கூச் சல் மிகுந்த உரத்த குரலில் கேட்டதால் நான் அதனை முதலில் இடியின் முழக்கமென்றே எண்ணினேன். அச் சப்தத்தைக் கேட்டு அவனைப் போன்ற ஏழு மனிதர்கள் அவனருகே வந்தார்கள். அவர்கள் நமது தேசத்து அரி வாளைக் காட்டினும் ஆறு பங்கு பெரிதான அரிவாள்களைத் தங்கள் கரங்களில் வைத்துக்கொண் டிருந்தார்கள். அவர் கள் வேலியின்மே லிருந்த மனிதனைப் போல் அவ்வளவு நன்றாக வுடை யணிந்திருக்கவில்லை. ஆதலால், அவர்க ளெல்லோரும் அவனிடம் வேலை செய்பவாகளாக இருக் கவேண்டுமென்று நான் நினைத்தேன். அன்றியும் அவனு ரைத்த சில வார்த்தைகளால் அவர்க ளெல்லோரும் நான் ஒளித்திருந்த நிலத்தை அறுவடை செய்யத் தொடங்கினார் கள். அச்சமயம் அவர்க ளென்னை யணுகாமற்படி நான் என்னால் கூடியவரையில் பின்புறமே சென்று கொண்டி ருந்தேன்.

ஆனாலும், நான் அதிக கஷ்டத்துடன்தான் அவ் வாறு செய்யவேண்டியதா யிருந்தது. ஏனெனில், பயிர் களின் தாள்கள் சில இடங்களில் மிக்க அடர்ந்திருந்ததால் ஒவ்வொன்றின் இடையிலும் ஒரு அடிக்கு மேல்தூரமில்லை. ஆதலால், நான் என் தேகத்தை அப்பயிர்களுக்குள் நுழைக்க என்னால் சாத்தியப்படவில்லை. எவ்வாறிருப் பினும், மழையினாலும் காற்றினாலும் அடிபட்டுப் பயிர்கள் கீழே விழுந்திருந்த ஓரிடத்தை நான் அதிக கஷ்டத்

துடன் வந்தடைந்தேன். அவ்விடத்திலிருந்து நான் ஓர் அடியேனும் மேல் செல்லுதற்கு என்னால் முடியவில்லை. ஏனெனில், அங்கே பயிர்களின் தாள்கள் ஒன்றோடொன்று இணைந்து கொண்டிருந்ததால் நான் என் தேகத்தை எவ் விதத்திலாயினும் எவ்வழியிலும் நுழைத்தற்கு என்னா லியலவில்லை. அஃதன்றியும் கீழே வீழ்ந்திருந்த பயிர்களி லுள்ள தானியங்களின் வால்கள் மிகக் கூர்மையாகவும் வலி மையாகவு மிருந்ததால் அவைகள் என் சட்டைக்குள் நுழைந்து எனக்கு அதிக நோயை யுண்டுபண்ணிற்று. நான் அவ்விடத்தி லிருந்தபோது அறுவடை செய்யும் வேலைக் காரர்க ளெல்லோரும் எனக்குப் பின் நூறு கஜ தூரத்தில்தா னிருந்தார்கள். அப்போது எனக்கிருந்த கஷ்டத்தினாலும் மனவருத்தத்தினாலும் அச்சத்தினாலும் நான் மிகக் களைப் புற்று இரண்டு பயிர்களினிடையே சோர்ந்து பதுங்கிக் கொண்டேன். அவ்விடத்திலேயே நான் என் பிராணனை இழந்துவிடலாமென்று மனப்பூர்வமாக எண்ணிக்கொண் டேன். அச்சமயந்தான் நான் என் திக்கற்ற மனைவியையும் தந்தையற்ற என் குழந்தைகளையும் நினைந்து நினைந்து உள்ளமுடைந்து தேகம் நடுக்கமுற்று எக்காலத்திலும் நினைத்தும் அறியாத பெரிய கொடிய துன்பத்தை எய்துவே னாயினேன்.

பிறகு, நான் செய்த பிழையையும் எனக்கு நிகழ்ந்த விருப்பத்தையும், என் உற்றார், நட்டார் முதலாயினோர் எனக் குரைத்த புத்தியைக் கேளாமல் நான் மறுமுறையும் பிரயாணஞ் செய்ததையும் நான் நினைக்க நினைக்க என் மனம் மேலும் மேலும் வருந்திக்கொண்டே யிருந்தது. நான் அவ்வாறு மனம் வருந்திக் கொண்டிருக்கையில் லிலிபுட்

தேசத்து மாந்தரின் உருவமும், அவர்களென்னை மலைமனித னென்று கூறியதும், பின்னர் அவர்களென்னை வையகத்தி லிராத ஒரு மனிதனுகக் கருதியதும், அத்தேசத்திலுள்ள ஒரு பெரிய கப்பலை மிகச் சுலபமாக நான் என் கையால் இழுத்ததும், இன்னும் அவர்கள் வியக்கத்தக்க பல காரி யங்கள் நான் நிகழ்த்தியதும், அவற்றை அவர்கள் பின் வரும் சந்ததியார் வாய்மையாக எண்ணுரென்று அழி வில்லாத தங்கள் தேச சரித்திரத்தில் அவர்கள் ஆயிரக் கணக்காகக் கையொப்பமிட்டதும்,முதலான இவ்விஷயங்க ளெல்லாம் என் ஞாபகத்திற்கு வரலாயின. லிலிபுட் தேச த்து மனிதனொருவன் நம்மிடம் அகப்பட்டுக் கொள்வானு யின் அவன் எவ்வளவு தீமையை யடைவானே அதனையே நானும் அத்தேசத்திலுள்ளான் ஒருவனிடம் அகப்பட நேரிடின் அடைதல் திண்ணம். அவ்விஷயத்தை நான் நினைத்தபோது எனக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. அத் தருணம் எனக்கு மற்றொரு விஷயம் கவனத்திற்கு வரலா யிற்று. அஃதாவது மக்களனைவோரும் தங்கள் தேகத்தின் உயரம், பருமன் இவற்றிற் கேற்பத் தீமை செய்வோரா யிருப்பர் என்பதாம் மக்களின் தேகம் எத்துணை பருமனும் உயரமும் மிகுதியாயுளதோ அவ்வளவும் அத்தகைய தேகத்தைப் பெற்றோர் தீயராயிருத்தல் பெரும்பாலும் உண்மையே.

ஆதலால், நான் அச்சமயம் வந்திருந்த நாட்டி லுள்ள சண்டாளர்களில் எவனுகிலும் ஒருவன் என் னைப் பிடிக்க நேர்ந்தால் அவன் என்னை ஓர் பிடி அன்னம் உண்ணுவது போலன்றோ புசித்து விடுவானென்று மிக்க பயமடைந்தேன். வாய்மையாகவே, ஏதேனும் ஓர்

பொருளை ஒருவன் பெருத்ததென்றாயினும் சிறத்ததென்றாயினும் கூறவேண்டுமானால் அவன் யாவரும் செவ்வனே யறிந்த மற்றொரு பொருளை உதாரணமுகமாக வெடுத்து அப்பொருளை விளக்குதல் வேண்டுமென்னும் அரும் பெருங் கருத்துக்களையும் நுண்ணியவறிவையும் தம்மாட்டுள்ள பெருஞ்சிறப்பினை யெய்திய தத்துவ சாஸ்திரிகளின் கூற்று மிக்க பொருளுடைத் தென்றே நான் சிந்திக்கலானேன். ஏ! கருணைசொரூபியான முழுமுதற் கடவுளே! லிலிபுட் நாட்டுமக்களுக்கு நான் எவ்வாறு தோன்றினேனோ அவ்வாறே வேறெந்நாட்டார்க் காயினும் அவர்கள் தோன்றுவாரானால் இப்பூவுலகம் என்ன வனப்புடைத்தாயிருக்கும்! அஃதாவது லிலிபுட் நாட்டாரும் வேறெந் நாட்டார்க்காயினும் மலைமனிதர்களாயிருத்தல் வேண்டுமென்பதாம்.

நான் அப்போது போயுள்ள தேசத்தின் பிரமாண்டமான மனிதர்களும் வேறெந் நாட்டிலாயினும் தங்களைக் காட்டிலும் பன்மடங்கு பெருத்த வுயரமுள்ள தேகத்தைப் பெற்ற மனிதர்களை ஏன் காணலாகாது? நாம் இதுகாறும் கண்டு பிடியாத தேசங்களில் அவ்வித தேசமுமொன்றென்ற ஏன் மொழியலாகாது? அத்தருணம் என் மனம் மிகக்கலக்க முற்றிருந்ததால் இன்ன காரியந் தான் செய்யவேண்டுமென்று எனக்கு விளங்கவில்லை. ஆதலால், நான் மேற்கூறிய எண்ணங்களை யெல்லாம் எண்ணுவேனாயினேன். நான் அவ்வாறெல்லாம் சிந்திக்கையில் அறுவடையாட்களி லொருவன் நான் படுத்திருந்த இடத்திற்குப் பத்துக் கஜ தூரத்தில் வந்திருந்தான். அச்சமயம் அம்மனிதன் மற்றொரு அடி என்பக்கம் வைப்பானா

ணல் நான் சாவது நிச்சயமேயென்றும், அது தவறின் அவன் கை யரிவாளால் இருதுண்டுகளாகத் துணிக்கப் படுதல் திண்ணமே யென்றும் சொல்லுதற்கரிய துயருடன் நான் படுத்துக்கொண்டிருந்தேன். பின்னர் அவ்வேலை யாளனொருவன் தான் அடுத்த அடி வைக்கத் தொடங்கிய போது நான் என்னாலியன்ற வரையில் மிக உரத்த குரலில் கூச்சலிட்டேன். அப்போது அப் பிரமிக்கத்தக்க மனிதன் தன்னிடத்தை விட்டுப் பெயர தனது வலது காலைத் தூக் கியபோது ஏதோ என் நல்வினைப்பயன் அவன் நாலாபக்க மும் சற்று நேரம் சுற்றிப் பார்த்தான்.

கடைசியாக, அவன் நான் படுத்திருந்த நிலையிலேயே என்னைக் கண்டான். கண்டதும், நாம் ஆபத்தை விளைவிக் கும் ஓர் சிறிய ஜெந்துவை எடுப்பதா யிருந்தால் எவ்வாறு சற்று நேரம் நிதானிக்கிறோமோ அவ்வாறே அம் மனித னும் சற்று நேரம் நிதானமாயிருந்தான். பிறகு அவன் என்னை என முதுகின் பக்கமாய் எடுக்கத் துணிந்தான். அதன் பிறகு அவன் என்னைத் தன் சுட்டு விரலாலும் பெரு விரலாலும் மிக்க வச்சத்துடன் எடுத்தான். எடுத்து, என் னுருவத்தின் அமைப்பை நன்குய்ப் பார்ப்பதற்காக அவன் என்னைத் தன் கண்களுக்கு மூன்று கஜதூரத்தில் கொண்டு போனான். அப்போது அவன் கருத்து என்ன வென்பதை நான் நன்கு அறிந்துகொண்டேன். என் நல்ல காலம் அப் போது என் புத்தி என் சுவாதீனத்திலிருந்ததால் அவன் என்னை ஆகாயத்தில் அறுபதடி உயரத்திற்கு மேல் பிடித் துக் கொண்டிருந்தும் நான் அவனிட மிருந்து தப்பித்துக் கொள்ள எத்தகைய முயற்சியும் செய்யவில்லை. ஏனென் றால், நான் என் தேகத்தை எவ்வழியிலாகிலும் சற்று

அசைத்திருப்பேனுனல் அம்மனிதன் என்னைத் தன்கையி லிருந்து நழுவ விட்டுவிட்டிருப்பான். அப்போது நான் அவசியம் பூமியில் விழுந்து மாண்டிருப்பே னென்பதில் சந்தேகமில்லை.

நான் ஒரு கால் பூமியில் விழுந்து விடப் போகிறே னென்று அவன் என் தேகத்தை மிக வலிவாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அப்போது எனக்கு என் தேகத்தில் சொல்லக் கூடாத நோயுண்டானது. ஆதலால் நான் அச சமயம் செய்யத் துணிந்த காரியம் யாதெனில், நான் என் கண்களைச் சூரிய னிருக்கும் பக்கம் திருப்பி என் கைகளை அதிக வணக்கத்துடன் ஒன்ருகக் கூப்பி என் பரிதபிக்கத் தக்க நிலைக்குத் தக்கவாறு அவனிடம் சில வார்த்தைகள் நான் மிக அடக்கமாய்க் கூறினதேயாம். மேலும், நாம் விரும் பாத ஓர் சிறிய ஜெந்துவை நாம் கொல்லவேண்டுமானுல் அப்போது நாம் அதை எவ்வாறு பூமியிலெறிந்து விடுகி ருேமோ அவ்வாறே அம்மனிதன் ஒருகால் என்னை எறிந்து விடுவானே என்னமோ வென்று நான் பெரிதும் பயமடைந் தேன். ஆனுல், என் நல்ல காலம் அவன் என்னுருவத்தையுங் குரலையுங் கண்டு களிப்புற்றவனுய் நான் ஏதோ பொரு ளுள்ள வார்த்தைகளையும் உச்சரிக்கிறேனென்று அதிக வியப்புற்று தான் எனக்கு எவ்வித தீமையும் செய்ய நினைக்கவில்லை.

அப்போது நான் கதறி யழுது கண்ணீர் விட்டேன். பிறகு அவன் என்னைப் பிடித்திருக்கும் நிலையில் எனக்கு அதிக நோவுண்டாகிற தென்று அவன் அறியுமாறு நான் என் பக்கங்களை யெல்லாம் திரும்பித்திரும்பிப் பார்த்தேன். அவனும் அக்குறிப்பை நன்கறிந்தவனுய் என்னைத் தன்

மேற்சட்டையின் முன்றுனையில் மெதுவாக வைத்துக் கொண்டு தன் எஜமானரிடம் மிக விரைவாக வோடினான். அந்த எஜமானன் ஓர் பெரிய வேளாண்மைக்காரனாக எனக்குத் தோன்றினான். நான் அப்போது அம்மனிதனைத் தான் நான் முதலில் வயலில் கண்டேனென்று அறிந்து கொண்டேன்.

அவ்வேளாண்மைக்காரன் தன் வேலைக் காரனிடமிருந்து என்னைப் பற்றி எவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவும் அறிந்தானென்று நான் அவர்கள் செய்த சம்பாஷணையால் உணர்ந்துகொண்டேன். பிறகு அந்த எஜமானன் ஓர் சிறிய துண்டு வைக்கோலை யெடுத்து அதனால் என் மேற் சட்டையின் முன்றுனைகளைத் தூக்கினான். அவ் வைக்கோல் துண்டு நாம் உலாவப் போகையில் எடுத்துச் செல்லும் கைத்தடி (Walking Stick) யின் பருமனும் உயரமுமிருந்தது. அவன் அம்முன்றுனைகளை என் தேகத்திலேயே இயற்கையாயுள்ள ஓர்வித போர்வை யென்றும், அவ்வித போர்வை என்னைப் போன்ற ஜெந்துக்களுக்கெல்லாம் கடவுளால் இயற்கையாக அளிக்கப்பட்டுள்ளதென்றும் கருதினான். பிறகு அவன் என் முகத்தினிடத்தே வந்திருந்த மயிர்களை யெல்லாம் தன் வாயால் ஊதி விலக்கி, என்னைச் சற்று நேரம் சாலவும் கவனித்தான். அதன் பிறகு அவன் தன் வேலைக்காரர்களைத் தங்களில் யாராகிலுமொருவன் என்னைப் போன்ற ஓர் ஜெந்துவை வயல்களில் அதற்கு முன்னர் எத்தருணமேனும் கண்டதுண்டா வென்று வினவினான். நிற்க, இவ்விஷயத்தை நான் பிறகு தான் அறிந்து கொண்டேன். வினவியதும், அவன் என்னை மிக்க ஜாக்கிரதையாக வெடுத்துப் பூமியில் மெதுவாகப் படுக்கவைத்தான்.

ஆனால் நான் உடனே அவ்விடத்தை விட்டெழுந்து எனக்கு அம்மனிதர்களை விட்டு ஓடிப் போய் விடவேண்டு மென்னுங் கருத்துச் சிறிதுமில்லை யென்று அவர்கள் அறியு மாறு நான் அவர்களெதிரிலேயே முன்னும் பின்னும் மெது வாகச் சிறிதுபோது உலாவிக் கொண்டிருந்தேன். அதைக் கண்டு அவர்களெல்லோரும் மிகக் களிப்புற்றவர்களாய் நான் என்னென்ன காரியங்கள் செய்கின்றேனோ அவற்றை யெல் லாம் தாங்கள் செவ்வனே காணுதல் வேண்டு மென்னும் ஆர்வத்தால் என்னைச் சுற்றிலும் ஓர் வட்டமாய் அமர்ந்து கொண்டார்கள். அத்தருணம் நான் என் சென்னியிலிருந்த தொப்பியை யெடுத்து மிக்க மரியாதையும் தாழ்மையும் பெற அவ்வேளாண்மைக்காரனுக்கு வந்தனம் புரிந்தேன். அஃதன்றியும் நான் முழங்காலிட்டு என் கண்களையும் கரங் களையும் மேலே தூக்கி என்னாலியன்ற வரையில் உரத்த குரலினால் அநேக வார்த்தைகள் அவனிடம் கூறினேன். அவற்றோடு நில்லாது நான் பிறகு என் ஜேபியிலிருந்து பொன் நாணயங்கள் நிரம்பப் பெற்றுள்ள ஓர் பையை யெடுத்து அவனுக்குப் பரிசளித்தேன். அவன் அதனைத் தன் உள்ளங்கையினால் பெற்றுக் கொண்டு தன் கண்களி னருகே கொண்டுபோய் அஃதென்ன பொருளென்று உற்று நோக்கினான். பிறகு அவன் தன் சட்டையிலிருந்து ஓர் குண்டூசியை யெடுத்து அதனால் அப் பையைப் பன் முறை திருப்பிப் பார்த்தான். அவன் அவ்வாறு திருப்பியும் அஃதின்ன பொருளென்று அவனுக்குச் சிறிதும் புலப் படவே யில்லை. அதன் பின்னர் நான் அவனைத் தன்கை யைக் கீழே வைக்குமாறு அவனுக்கு ஓர் குறிப்புக் காட்டி னேன்.

அவன் அக்குறிப்பை யறிந்து அவ்வாறே தன்கையைத் தரையில் வைத்தான். அத்தருணம் நான் அவன் கையிலிருந்த பையை யெடுத்துத் திறந்து அதன்கண்ணிருந்த பொன் நாணயங்களை யெல்லாம் அவன் உள்ளங்கையினில் கொட்டினேன். அப்பையில் ஆறு **ஸ்பெயின்** (Spain) தேசத்து நாணயங்களும் மற்றும் முப்பது நாற்பது சிறிய நாணயங்களுமிருந்தன. அவ்வேளாண்மைக்காரன் தன் சுண்டு விரலின் நுனியில் எச்சில் தொட்டு அந்நாணயங்களில் பெரிய தொன்றை எடுத்தான். பின்னர் அவன் அவ்வாறே மற்றொன்றை யெடுத்தான். ஆனால் அவைகள் இன்னபொருளென்று அவனுக்குச் சிறிதும் தோன்றவேயில்லை. அவன் என் நாணயங்களை யெல்லாம் என்னை என் பையில் போட்டு அப்பையினை என் ஜேபியில் வைத்துக் கொள்ளுமாறு எனக்கு ஒருவித குறிப்புக் காட்டினான். அச்சமயம் நான் அந்நாணயங்களை யெல்லாம் அவனையே யெடுத்துக்கொள்ளும்படி அவனிடம் பன்முறை கூறினேன். அவன் அவைகளைப் பற்றி யொன்றும் அறிய முடியாததால் ஓரே முடிவாகத் தனக்கு அவை யொன்றும் வேண்டியதேயில்லை யென்று ஒரு குறிப்புக் காட்டினான். அதன் பின்னர் எல்லா நாணயங்களையும் பையில் போட்டு அந்தப் பையை வெகு ஜாக்கிரதையாக என் ஜேபியில் வைத்துக் கொண்டேன்.

அத்தருணத்தில் அவ் வேளாண்மைக்காரன் நான் பகுத்தறிவுள்ள ஓர் ஜந்துவாகத்தான் இருத்தல் வேண்டுமென்று நிச்சயித்தான். ஆதலால் அவன் என்னிடம் பன்முறை பேசிப் பார்த்தான். அப்போது அவன் குரலின் சப்தம் ஓர் ஜலயந்திரம் செய்யும் சப்தத்தைப்போல என்

செவிகளில் கேட்டது. ஆனாலும் அவன் பொருளுள்ள வார்த்தைகள்தான் கூறினானென்று நான் அறிந்து கொண்டேன். நான் எனக்குத் தெரிந்த பாஷைகளிலெல்லாம் அவனுக்கு மறுமொழி சொல்லிப் பார்த்தேன். அவன் அப்போது நான் கூறியவற்றையெல்லாம் தன் செவிகளை எனக்கு இரண்டு கஜதூரத்தில் கொண்டு வந்து மிகக் கவனமாய்க் கேட்டான். ஆனால், அவையெல்லாம் அவனுக்கு ஒரு பயனையும் விளைவிக்கவில்லை. ஏனென்றால், நாங்கள் இருவரும் ஒருவர் கூறியதை ஒருவர் அறிய முடியாமல் அதிக கவலையுற்றோம்.

பின்னர் அவன் தன் வேலைக்காரர்களையெல்லாம் தங்கள் தங்கள் வேலையைச் செய்யும்படி கட்டளையிட்டான். பிறகு அவன் தன் ஜேபியினின்று ஒரு கைக்குட்டையையெடுத்து அதனை இரண்டாய் மடித்துத் தரையில் வைத்தான். அதன் பிறகு அவன் தன் உள்ளங்கையை அக் கைக்குட்டை இருக்கும் இடத்திற்கு மேல் சிறிது உயரம் வைத்துக் கொண்டு என்னை அக் கைக் குட்டையின் மீது ஏறும்படி எனக்கு ஒரு குறிப்புக் காட்டினான். அக் கைக்குட்டை ஒரு அடி கனத்திற்கு மேலில்லாமையால் நான் அதன்மீது எளிதாக ஏறிவிடலாமென்று எண்ணிக் கொண்டேன். பிறகு நான் அவன் கட்டளையின்படியேதான் நடக்க வேண்டுமென்று என் மனதைத் தேற்றிக் கொண்டு நான் அக் கைக் குட்டையின் மீது ஏறினேன். ஏறியதும், நான் என் கால்களையும் கைகளையும் நன்றாக நீட்டிப் படுத்துக் கொண்டேன். பிறகு அவன் நான் படுத்திருந்தவிடம் நீங்கலாகக் கைக்குட்டையின் மிகுதிப் பாகத்தையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து என் கழுத்து வரை

யில் கட்டி ஒரு முடி போட்டுக் கொண்டு அம்முடியைத் தன் கையில் பிடித்தபடியே தன் வீட்டிற்குச் சென்றான். அங்கே சென்றதும் அவன் தன் மனைவியைப் பரிவுடன் அழைத்து என்னை அவளுக்குக் காட்டினான்.

அவள் என்னைக் கண்டதும் இங்கிலாந்தில் மங்கையர்கள் ஒரு சிலந்தியையாவது தேரையை யாவது சண்ட போது எவ்வாறு தேகம் கூசுதலடைந்து அச்சத்துடன் தொலைவாகச் சென்று விடுகின்றார்களோ அவ்வாறே அவள் அதிக கூச்சத்துடன் ஒருவித கூச்சல் போட்டுப் பின்னுக்கு ஓடினாள். எப்படியிருப்பினும் நான் அவள் கணவனிடம் நடந்துகொண்ட நடத்தையாலும், அவன் எனக்குக் காட்டிய சைகைகளை யெல்லாம் நான் நன்கு உணர்ந்தமையாலும், அவள் என்பாலிருந்த பயத்தை யொழித்து என்னை அதிக அன்புடன் பாதுகாப்பாளாயினாள். சுமார் பகல் பன்னிரண்டு மணியானதும் வேலைக்காரி ஒருத்தி போஜனம் கொண்டுவந்தாள். அப் போஜனம் சாதாரணமாக ஒரு கிருஷிகன் சாப்பிடும் உணவாகவே யிருந்தது. அவ் வேலைக்காரி போஜனங் கொண்டுவந்த தட்டு சுமார் இருபத்து நான்கடி நீளமிருந்தது. அவ் வேளாண்மைக்காரனுக்கு மூன்று குழந்தைகள் இருந்தன. அன்றியும் அவன் இல்லத்தில் அவன் பாட்டியார் வயோதிகப் பருவமடைந் திருந்தும் அதுகாறும் விண்ணுலகஞ் சேரா திருந்தனள். ஆகவே அவன் இல்லத்தில் மொத்தம் ஆறு பேர் இருந்தார்கள்.

அக்குடும்பத்தில் இருந்த ஆறு பேரும் தங்கள் போஜனத்தை முடித்துக் கொள்ளும் பொருட்டுத் தாங்கள் வெவ்வேறு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள்.

அப்போது வேளாண்மைக்காரன் என்னை எடுத்துத் தன் போஜனம் வைத்திருந்த மேஜையின்மேல் தனக்குச் சிறிது தூரத்தில் வைத்தான். அம் மேஜை முப்பதடி உயரமிருந்தது. அவ்வாறு அவன் என்னை மேஜையின்மேல் வைத்ததும், நான் அளவில்லாத அச்சங்கொண்டு பூமியில் ஒருகால் விழுந்து விடுவேனோவென்று பயந்து மேஜையின் ஓரத்திலில்லாமல் மத்தியிலேயே நின்று கொண்டிருந்தேன். அப்போது அவன் மனைவி ஒரு துண்டு மாமிசத்தை எடுத்து அதை அநேக சிறுதுண்டுகளாக்கிப் பிறகு கொஞ்சம் ரொட்டியை எடுத்து அதை நன்றாய்த் தூளாக்கி இவை இரண்டினையும் ஒரு மரத்தட்டில் என்னெதிரில் வைத்தாள். நான் அவளுக்குத் தாழ்மையுடன் தலையிறங்கி வந்தனமளித்து என் பேனுக்கத்தியையும் கவர் முட்கருவியையும் (fork) எடுத்து அவ் வுணவைப் புசிக்கத் தொடங்கினேன். அதைக்கண்டு அவர்களனைவரும் மிகவும் வியப்படைந்து இன்பமெய்தினார்கள். பிறகு அவள் தன்னில்லத்திலிருக்கும் ஒரு சிறிய டிராம் கோப்பையை (Drahm Cup) எடுத்து வரும்படி தன் வேலைக்காரிக்குக் கட்டளையிட்டாள். அக்கோப்பை சுமார் இரண்டு காலன் (gallon) ஒயின் பிடிப்பதாயிருந்தது. அவள் அக்கோப்பை நிறைய ஒயின் நிரப்பி மிக்க களிப்புடன் என்னருகில் வைத்தாள். நான் அக்கோப்பையை என் இரண்டு கைகளாலும் மிக கஷ்டத்துடன் எடுத்து அதிக மரியாதையுடன் ஆங்கிலத்தில் எனக்குத் தோன்றிய நன்மொழிகளையெல்லாம் என்னாலியன்ற வரையில் உரக்கச் சொல்லிக் கொண்டே அதிலிருந்த ஒயினையெல்லாம் பருகலானேன். நான் அங்ஙனம் நிகழ்த்தியதைக் கண்டு அவர்களனைவரும்

ஒருவரை யொருவர் பார்த்து விழுந்து விழுந்து நகைத் தார்கள். அவர்கள் நகைத்த சப்தம் என்னிரு செவிகளையும் முற்றிலும் செவிடாக்கி விட்டது அந்த ஓயின் சுவையில் தப்புவா பழரச பானத்தை (Cyder) ப் போன்றே இருந் தது. ஆயினும் அது குடிப்பதற்கு மிகவும் இனிப்பாகவே யிருந்தது.

பிறகு, அவ்வீட்டிற்கு எசமானனாகிய வேளாண்மைக் காரன் என்னை மரத்தட்டின் அருகே வரும்படி எனக்கு ஒருவித சைகை காட்டினான். அப்போது நான் அவ்வாறே செய்வதற்காக மேஜையின் மீது நடந்து செல்லுகையில் வழியிலிருந்த ஒரு துண்டு கடிதாசியினால் தடுக்கப்பட்டுக் கவிழ்ந்தபடியே அம்மேஜையில் விழுந்தேன். ஆயினும் எல்லாம் வல்ல இறைவன் செயலால் நான் எத்தகைய காய மும் அடையப் பெறவில்லை. நான் விழுந்தவுடனே துரித மாய் எழுந்திருந்து அங்குள்ள அனைவரையும் நோக்க, அந் நற்குணம் வாய்ந்த மனிதரெல்லோரும் எனக்கு நேர்ந்த சம் பவத்தைக் குறித்து மிகவுந் துன்புற்றாரென அறிந்து கொண்டேன் அப்போது நான் அடக்கமும் ஒழுக்கமும் மிகுதியாகப் பெற்றுள்ளவனென்று அறியுமாறு நான் தலை யில் தரித்துக் கொள்ளாமல் என் கரத்திலேயே வைத் திருந்த என் தொப்பியைத் தூக்கி "நான் ஒன்றும் காய மடையவில்லை. கடவுள் கருணையால் உய்ந்தேன், உய்ந்தேன், உய்ந்தேன்" என்று மும்முறை மிகுந்த களிப்புடன் கூச்ச லிட்டேன்.

பிறகு நான் என் எஜமானனிடம் வந்ததும் (இனி நான் அவ்வேளாண்மைக்காரனை என் எஜமான ரென்று தான் கூறல் வேண்டும்) அவர் அருகில் உட்காந்திருந்த

பத்துவயதுள்ள அவர் இளைய புதல்வன் என் இருகால்களை யும் பிடித்து நான் அஞ்சத்தக்க உயரத்தில் என்னைத் தூக்கி நிறுத்தினுன். அப்போது என் தேகம் முழுமையும் எவ்வித நடுக்கமுற்ற தென்பதை ஈண்டு எழுதுதலினும் உய்த்துணர்தலே மேன்மையாகும். எளியேன் மனம் ஏதே தோ நினைத்தது. ஆனால் அவன் தந்தை என்னை அவனிட மிருந்து சடுதியில் பக்குவமாய்ப் பிடுங்கிக்கொண்டு அவன் இடது தாடையில் தாம் ஒரு அறை அறைந்தார். அந்த அறையானது ஐரோப்பா கண்டத்துக் குதிரைப் போர்வீரர் கள் அடங்கியுள்ள ஒரு பெரிய சேனையை அடியோடே நிலத்தில் வீழ்த்தி நாசமடையச் செய்யு மென்பதில் சந் தேகமில்லை. அஃதன்றியும் அவர் தன் மகனை அத்தருணமே அவ்விடத்தைவிட்டு அகலும்படிக் கட்டளையிட்டார். ஆனால் அச்சிறுவன் எனக்கு எவ்விதத்திலாயினும் பிறகு தீமை செய்யக் கருதுவானென்று நான் மிகுந்த அச்ச மடைந்து என் இரண்டு கால்களையும் முட்டி போட்டுக் கொண்டு அச்சிறுவனைச் சுட்டிக் காட்டி, அவன் என் பொருட்டு எத்தகைய தண்டனையும் அடைதல் எனக்குச் சிறிதும் பிரியமில்லை என்றும், சிறுபிள்ளை அறியாமற் செய்த தப்பிதத்தை அவர் அம்முறை மன்னித்து விடுதல் சாலவும் நன்மையுடைத் தென்றும், நான் என்னுலியன்ற வரையில் அவர் அறியுமாறு செய்தேன். மேலும் நம் முடைய சிறுபிள்ளைகள் எப்போதாகிலும் கிளிப்பிள்ளைகள், முயல்கள், பூனைக்குட்டிகள், நாய்க்குட்டிகள் முதலியன தங்கள் அருகில் இருக்கக் காண்பாரானுல் அவைகளுக்கு இயற்கை யாகவே செய்யும் துன்பத்தைப் பற்றி நான் அத் தருணத்தில் சிந்திக்காமற் போகவில்லை. பிறகு நான் கூறி

யதை என் எஜமானர் ஒருவாறு அறிந்தவராய் தம் குமாரனை அங்ஙனமே மன்னித்து விட்டு மறுபடியும் அவனைத் தம் நாற்காலியில் முன்போலவே அமரும்படி கட்டளையிட்டார். அதன்மேல் நான் அச்சிறுவனிடம் சென்று அவன் கரத்தில் ஓர் முததமிட்டேன். பிறகு அவன் தந்தை அவன் கரத்தை எடுத்து அதனால் என்னைத் தடவிக் கொடுக்கும்படி அவனிடம் உரைத்தார்.

நாங்கள் அனைவரும் போஜனஞ் செய்துகொண்டிருக்கையில் என் எஜமானியினது செல்வப் பூனை அவள் மடியில் ஓடிவந்து உட்காந்தது. சட்டை நெய்யும் தொழிலாளிகள் பன்னிரண்டு பேர் ஒருங்கு கூடித் தங்கள் வேலையைச் செய்தால் உண்டாகிற அரவத்தைப் போன்ற ஓரரவம் எனக்குப் பின்னால் அப்போது கேட்டது. பின்னர் நான் திரும்பிப் பார்க்கையில் அந்த அரவம் மேற்கூறிய பூனை குறுகுறுத்ததால் உண்டாயதென்று நான் அறிந்து கொண்டேன். அப் பூனை நமது நாட்டு மூன்று எருதுகளைக் காட்டிலும் அதிக உயரமாகவும் பருமனாகவும் இருந்தது இந்த அளவை நான் அதன் தலையையும், நகங்களிலொன்றையும் பார்த்துக் கண்டு பிடிக்கலானேன். அப்போது என் எஜமானி அப் பூனையின் தேகத்தைத் தடவிக் கொண்டே அதற்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள். அம் மிருகத்தின் குரூர பார்வையைக் கண்டு நான் மிகுந்த பயத்தையடைந்தேன். ஆயினும் நான் அப்போது மேஜையின் மற்றொரு பக்கத்தின் முடிவில் சுமார் ஐம்பதடி தூரத்திலிருந்தேன். இருந்தாலும், எனக்கு அம் மிருகத்தினிடத்தில் வர வரப் பயம் அதிகரித்துக்கொண்டே வந்தது. என் எஜமானியும் அப் பூனை எங்கே என்மேல் பாய்ந்து என்னைத் தன்

நகங்களால் பிடித்துக் கொன்று விடுகிறதோ என்று மிகவும் அஞ்சினவளாக அதைத் தன்கையால் வலிவாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் என் நல்லகாலம் என் எஜமானர் என்னை அம் மிருகத்திற்கு மூன்று கஜதூரத்தில் வைத்திருந்தும் அது என்னைப் பற்றிச் சிறிதும கவனிக்கவில்லை. ஒரு கொடிய மிருகத்தைக் கண்டு நாம் பயந்தோடினாலும் அல்லது நமக்கு அதனிடத்தில் பயம் உண்டாயிருக்கிறதென்று அம்மிருகம் அறிந்து கொண்டாலும், அப்போது தான் அம் மிருகம் நம்மைப் பின்னே துரத்தி வருதலாவது மேற்பாய்தலாவது செய்தல் வழக்கமென்று நான் சிலர் சொல்லக் கேட்டிருந்ததோடு அம்மாதிரியாகவே நடைபெறுதலையும் என் அனுபவத்தில் கண்டிருந்தேன். ஆதலால் ஆபத்தை விளைவிக்கும் அவ்வேளையில் நான் அதைப் பன்முறை கண்டும், காணாமலிருந்தால் எங்ஙனம் இருப்பேனோ அத்தன்மையாகவே இருந்தேன்.

நான் அம்மிருகத்தின் தலையினருகே ஐந்தாறு முறைப் பயமின்றி நடந்து சென்றேன். அன்றியும் நான் அதற்கு அரை கஜதூரத்திலும் இரண்டு மூன்று முறை சென்றேன். நான் அங்ஙனம் செல்லுகையில் அம்மிருகம் என்னைக் கண்டு பயந்தாற்போல் சிறிது சிறிதாகப் பின்னுக்குப் போய்க் கொண்டிருந்தது. நான் நாய்களைக் குறித்து அவ்வளவு அச்சங் கொள்ளவில்லை. அவ்விடத்திலும் வேளாண்மைக்காரர்கள் வீடுகளில் சாதாரணமாக இருப்பது போலவே மூன்று நான்கு நாய்கள் இருந்தன. அந் நாய்களில் ஒன்று வீரநாயாகக் காணப்பட்டது. அது பருமனில் நான்கு யானைகளுக்குச் சமமாக விருந்தது. வேறொன்று வேட்டை நாயாகக் காணப்பட்டது. ஆனால் வீர நாயைப்

போல அவ்வளவு பருமனாக இல்லையாயினும் அதைக் காட்டினும் உயரமாக விருந்தது.

பிறகு போஜனம் முடிவு பெற்றதும் ஒரு வேலைக்காரி தன் கரத்தில் ஒரு வயது பிராயமுள்ள ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தனள். அக்குழந்தை உடனே என்னைக் கண்டு சந்தோஷத்துடன் தனக்கு என்னை விளையாட்டுப் பொருளாகத் தரும்படி புலம்பிற்று. தாயானவள் அதனிஷ்டப்படியே செய்பவளாதலால் அவள் என்னை எடுத்துத் தன்குழந்தையின் அருகில் கொண்டு போய்க் காண்பித்தாள். உடனே அக் குழந்தை என்னை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டு தன் வாய்க்குள் நுழைத்துக் கொண்டது.

அப்போது நான் நடுநடுங்கி மனங்கலங்கி அறிவிழந்து ஒன்றும் தோன்றப் பெறாமல், "ஐயோ! தெய்வமே! தெய்வமே" என்று கூக்குரலிட்டுப் புலம்பலுற்றேன். அக் குரலைக் கேட்டு அக் குழந்தைத் திடுக்கென பயந்து தேகம் நடுக்கமுற்று என்னைப் பூமியில் தன் கையினின்றும் அதிவிரைவாக எறிந்து விட்டது. அச்சமயம் என் சிரசு பத்துச் சுக்கலாக வுடைந்து போயிருக்கும். ஆனால் இறைவனருளால் அதன் அன்னையானவள் என்னை உடனே தன் கைக்குட்டையில் தாங்கிக் கொண்டனள். அவள் அக்குழந்தையின் அழுகையை நிறுத்தும்பொருட்டு ஆட்டினால் சலசலவென்னும் சப்தத்தைக் கொடுக்கும் ஒரு வித விளையாட்டுக் கருவியை அதற்குக் கொண்டு வந்து கொடுத்தாள். அவ் விளையாட்டுக் கருவி கடுதாசியினால் ஒரு குழாயைப் போல் இயற்றப்பட்டு இருபக்கங்களிலும் மூடிகள் அமைக்கப் பெற்று உட்பாகத்தில் பல

கற்களை யுடையதாய் ஒரு முனையில் கயிறு கட்டி குழந்தைகளின் இடுப்பில் தொங்க விடப்படும் ஓர்வித விளையாட்டுக் கருவியாகும். அவ்வித விளையாட்டுக் கருவியை தாயானவள் அக்குழந்தைக்குக் கொண்டு வந்து கொடுத்தும் அது அழுத வண்ணமாகவே யிருந்தது. ஆதலால் அவள் கடைசியாகத் தன் குழந்தைக்கு மிக்க அன்புடன் பாலூட்டி அதனை அயர்ந்து துயிலும்படி செய்தனள்.

அச்சமயந்தான் நமது கண்களுக்கு மிக்க வனப்புடையவர்களாகத் தோன்றும் இங்கிலாந்து தேசத்தின் மங்கையர்கள் அழகைக் குறித்து நான் ஆழ்ந்து சிந்திக்கலானேன். அவாகள் நம்முடைய அளவினையே உடையவராயிருத்தலினாலும் அவர்கள் தேகத்திலுள்ள அவலக்ஷணங்க ளெல்லாம் நம் கண்களுக்குத் தோன்றாமையினாலும் அவர்கள் நமக்கு அவ்விதமாகத் தோன்றுகிறார்களே யொழிய வேறல்ல. நாம் ஒரு பூதக்கண்ணாடி கொண்டு அவர்கள் தேகத்தை உற்று நோக்குவோமானால் மிக்க வழவழப்பாயும் வெண்மையாயும் காணப்படுகிற அத்தேகம் அதிக முருடாயும் பல நிறமுடையதாயும் காணப்படு மென்பதில் ஒன்றும் சந்தேகமில்லை. நான் லிலிபுட் நாட்டிலிருந்தபோது அந்நாட்டார் மிக்க சிறிய உருவத்தைப் பெற்றிருந்ததால் அவர்கள் எல்லா நாட்டாரைக் காட்டினும் அதிக அழகுடையவர்களாக எனக்குத் தோன்றினார்கள்.

நான் லிலிபுட் தேசத்தில் அவ்விஷயத்தைக் குறித்து அங்கே கல்விஞானம் அதிகமாகப் பெற்றிருந்த என் ஆப்த நண்பனொருவனிடம் பேசியபோது, அவன் தான் என்னைத் தூரத்தினின்று கண்டபோது நான் அதிக அழகுடையவனாகத் தோன்றினேனென்றும் பின்னர் சமீபத்தி

லிருந்து கண்டபோது நான் அவ்வித அழகுள்ளவனுகத் தோன்றவில்லையென்றும் என்னிடம் மொழிந்தான். அவன் அதற்கு உதாரணமாகக் கீழ்வரும் விஷயத்தை யெடுத்து விளக்கினுன். அதாவது, அவன் என்னைப் பூமியினின்று நோக்கியபோது நான் அதிக வனப்புடன் தோன்றியதும் பின்னர் அவனை நான் என் கையில் தூக்கி என் முகத்தி னருகே கொண்டு வந்தபோது அவன என் முகத்தோற்றத் தைக் கண்டு அதிக பயமடைந்ததுமாம். மேலும் அவன் என்னிடம் கீழ்வருமாறு மொழிந்தான். "நான் தங்கள் கையிலிருந்து கொண்டு தங்கள் முகத்தைப் பார்த்தபோது அதில் அநேக பெரிய துவாரங்கள் நிறைந்திருந்ததைக் கண்டேன். தங்கள் தாடிமயிர் ஒவ்வொன்றும் ஒருகாட்டுப் பன்றியின் மயிரைக் காட்டினும்பதின்மடங்கு வலிவுடைய தாகத்தோன்றியது. அன்றியும் தங்கள் முகம் முழுமையும் நான் அருவருக்கத் தக்க பலவித நிறங்கள் காணப்பட்டன" அவன் அவ்வாறு சொல்லியபோதிலும், நான் பலவித பிரயாணங்கள் செய்திருந்தாலும், என் தேசத்து ஆடவர் கள் பெரும்பான்மையோரைப்போல் அழகுடையவனே. வேருெரு சமயம் நான் மேற் கூறிய நண்பனிடம் லிலிபுட் நாட்டு அரண்மனையிலிருந்த மங்கையர்களைக் குறித்துப் பேசியபோது அவர்களில் ஒருத்திக்கு முகம் நிறைய மறுக் கள் இருந்தன வெனறும், ஒருத்திக்குப் பெரிய அகன்ற வாய் இருந்த தென்றும், ஒருத்திக்கு மிக நீண்ட மூக்கு இருந்த தென்றும் அவன் என்னிடம் உரைத்தான். ஆனல், அம்மங்கையரை யெல்லாம் நான் செவ்வனே பார்த்திருந் தும் அவ்வித குறைகள் அவர்களிடத்திருந்ததை நான் ஒரு சிறிதும் காணவேயில்லை. அவ்விஷயத்தைப் பற்றி நான்

ஈண்டெழுதாயலிருக்கவும் என் மனமிசைய வில்லே. ஆனு லும் நான் அப்போது வந்துள்ள பிராப்டிங்னுக் நாட்டு ஆடவரும் மகளிரும் அந்தக் கேடாக இருந்தார்களென்று ஒருவரும் எண்ணவேண்டியதில்லே. அவர்களே நான் அவ் வாறு கூறுதல் அந்த ஜனங்களுக்கு இழிவைத் தருமன்றோ?

நான் என் எஜமானரை அறுபதடி உயரத்தினின்று காண்கையில் அவர் ஒரு சாதாரண வேளாண்மைக்காரராக இருந்தும் தம் அவயவங்களெல்லாம் ஒன்றுக்கொன்று மிகுந்த பொருத்தமுடையனவாய் அழகுள்ள தோற்றத் தையே பெற்றவராக எனக்குக் காணப்பட்டார். எங்கள் பகற்போஜனம் முடிவுபெற்றதும் என் எஜமானர் தாம் வீட்டிற்குத் திரும்பிவரும் வரையில் என்னேச் சாலவும் ஜாக்கிரதையாக பாதுகாத்திருக்கும்படி தம் மனேவியி னிடம் மொழிந்து, பின்னர் தம் தொழிலே இயற்றும் பொருட்டு வயல்களுக்குச் செல்லுவாராயினுர். அவ்விஷ யத்தை நான் அவர் அச்சமடைம் பேசிய குரலின் அரவத் தாலும் அவர் தம் அவயங்கள் அசைந்த விதத்தாலும் அறியலானேன். நான் அதிக களேப்புற்றிருந்ததால் தூக் கம் என் கண்களேச் சுழற்றியது. அதை என் எஜமானி கவனித்துத் தன் படுக்கையிலேயே என்னேப் படுக்கவைத் தாள். பிறகு ஓர் பரிசுத்தமான வெள்ளேக்கைக்குட்டையால் என் முகம் நீங்கலாக என் தேகம் முழுமையும் மூடிவிட்டு எனக்குத் துயிலே வருவித்துப் பின்னர் தன் வீட்டு வேலே யைப் பார்க்கத் தொடங்கினுள். அக் கைக்குட்டை ஒரு பெரிய போர்க் கப்பலிலுள்ள பாய்மரத்தைக் காட்டிலும் பெரிதாகவும் முருடாகவும் இருந்தது.

நான் மேற்கூறிய படுக்கையில் சுமார் இரண்டு மணி நேரம் துயின்றேன். துயிலுகையில், என் சுதேயத்

தில் நான் என் மனைவி மக்களுடன் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தாற்போல் கனவுகண்டேன். பிறகு நான் விழித்துக் கொண்டதும் அங்கே என் மனைவி மக்கள் எவரும் காணப்படாமையினால், "கனவுதானு கண்டேன்," என்று சிந்தை ●ருந்தி ஒன்றும் செய்ய மாட்டாமல் நான்கு திக்குகளையும் மிகுந்த அச்சத்துடன் நோக்கினேன். அப்போது சுமார் இருநூறு முந்நூறு அடி அகலமும் இருநூறு அடி உயரமுமுள்ள ஒரு பெரிய அறையிலே நான் இருபது கஜ அகலமுள்ள ஒரு படுக்கையில் தன்னந்தனியனாய் இருந்ததைக் கண்டு அதிக மன வருத்தமும் பயமும் அடைந்தேன். அவ்வறையிலிருந்து என் எஜமானி வெளியே செல்லுகையில் அவ்வறையின் கதவைச் சாத்திப் பூட்டுப் போட்டுக் கொண்டு சென்றாள். அந்தப் படுக்கை பூமியிலிருந்து எட்டுக் கஜ வுயரமிருந்தது.

நான் என் காலக் கடமைகளை முடிக்கும் நிமித்தம் கீழே இறங்குவதற்கு நினைத்தேன். ஆதலால், அச்சமயம் நான் எஜமானியை அழைக்கலாமா வென்று யோசித்தேன். ஆனால் அதனால் ஒன்றும் பயனில்லையே யென்று பெரிதும் மனம் வருந்தினேன் ஏனெனில், நான் அவ்விடத்திலிருந்து பேசினால் சமையல் அறையிலிருக்கும் என் எஜமானிக்கு என் சிறிய குரல் எங்ஙனம் கேட்கும்? நான் அவ்வாறு கஷ்டங்களை யனுபவித்துக்கொண் டிருக்கையில் இரண்டு எலிகள் என் வாசனையை நுகர்ந்து கொண்டு என்னருகே வந்தன. அவைகளி லொன்று என் முகத்தினிடத்தே ஆவலாய் என்னை உண்ணுவதற்கு வந்தது. அப்போது நான் மிகவும் பயப்பட்டும், படுக்கையிலிருந்து சீக்கிர மெழுந்து என் உடைவாளை யெடுத்துத் தைரியமாய் அவைகளை

விறைத்துப் பார்த்த வண்ணமாய் நின்றேன். ஆனால் அந்தப் பயங்கரமான மிருகங்கள் இரண்டும், ஒன்று என் வலது பக்கமாகவும் மற்றொன்று என் இடது பக்கமாகவும் வந்து என் மீது பாயத்தொடங்கின. பிறகு ஒன்று தன் முன்னங் காலால் என் கழுத்துக் குட்டையைப் பற்றிக் கொண்டது. ஆயினும் அது எனக்கு ஏதேனும் தீமை செய்வதற்குள் நான் அதன் வயிற்றை என் உடைவாளால் கிழித்து விட்டேன். ஐயோ ! பாவம் அச்சமயம் அவ்வளவு கொடிய மிருகமும் என் காலண்டை மாண்டு விழுந்தது.

மற்றொன்று தன் நண்பனுக்கு நேரிட்ட கதியைக் கண்டு விரைவாக அவ்விடத்தை விட்டு ஓட வாரம்பித்தது. ஆயினும் அது ஓடுகையில் அதன் முதுகில் என் உடைவாளால் நான் ஒரு குத்துக் குத்தினேன். அப்போது அதன் முதுகிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கீழே ஒழுகிக்கொண்டே போயிற்று. அதைக்கண்டு நான் உள்ளமுவந்து உற்சாகமாக என்படுக்கையின் மேல் முன்னும் பின்னுமாகச் சிறுபோது உலாவிக் கொண்டிருந்தேன். அம் மிருகங்கள் பெரிய வீரநாய்கள் பருமன் இருந்தன. ஆனாலும் அவைகள் அவ் வீரநாய்களைக் காட்டினும் சுறுசுறுப்பும் குரூரமும் உள்ளனபோல் காணப்பட்டன. ஆதலால் நான் உறங்குவதற்கு முன்னர் என் அரைக் கச்சையைக் கழற்றிவிட்டு நான் நித்திரை புரிந்திருப்பேனாயின், அவைகள் என்னைத் தடையின்றித் துண்டு துண்டாகக் கடித்துப் புசித்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மாய்ந்து போன எலியின் வாலை நான் அளந்து பார்க்கையில் அதன் நீளம் இரண்டு கஜத்திற்கு ஒரு அங்குலம் குறைவாக விருந்தது. பிறகு இரத்தம் சொட்டுச் சொட்டாக ஒழு

கிக்கொண்டிருந்த அப்பிணத்தைப் படுக்கையினின்று நீக்கிவிடவேண்டு மென்னும் கருத்து எனக்கு உதித்தது. ஆனால் அதை நான் நெருங்கிப் பார்க்கையில் அட்போதும் சிறிது உயிர் இருந்தது. ஆதலால் நான் என் உடைவாளால் அதன் கழுத்தில் மற்றொரு வலிவான குத்துக்குத்தி அதன் உயிர் முழுமையும் போக்கடித்தேன்.

என் எஜமானி அறைக்குள் வந்ததும் தான் என் உடலனைத்தும் இரத்த மயமாயிருந்ததைக் கண்டு திடுக்கென ஓடி வந்து என்னைத் தன் கரத்தில் எடுத்துக் கொண்டாள். அப்போது நான் அவளுக்கு மாண்டுபோன எலியைக் காட்டிப் பின்னர் வாசனை நுகர்ந்தும் மற்றும் பலகுறிப்புக்கள் காட்டியும் நான் எவ்வித காயமும் அடையவில்லை யென்று அவள் அறியுமாறு செய்தேன். அதற்கு அவள் அதிக களிப்படைந்து தன் வேலைக்காரியை அழைத்து அவளை அந்த இறந்துபோன எலியை இரண்டு குறடுகளால் எடுத்துச் சாளர வழியாய் எறிந்து விடும்படி அவளுக்குக் கட்டளையிட்டாள். பிறகு அவள் என்னை ஒரு மேஜையின் மேல் கொண்டுபோய் வைத்தாள். அப்போது நான் இரத்தம் நிறைந்த என் உடைவாளை யெடுத்து அவளுக்குக் காண்பித்தேன். பிறகு நான் அதன் மீதிருந்த இரத்தத்தை யெல்லாம் என் மேற் சட்டையின் முன்றானையில் துடைத்து விட்டுப் பிறகு அதனை அதன் உறையில் போட்டுவிட்டேன். பிறகு நான் அத்தியாவசியகமான ஓர் காரியம் செய்ய வேண்டியவனாக இருந்தேன். ஆதலால் நான் தரையில் இறங்கவேண்டு மென்று என்னால் இயன்றவரையில் அவளுக்குப் பலவித குறிப்புகள் காட்டினேன். அவளும் என் கருத்தை யறிந்து தான்

என்னைக் கீழே எடுத்துவைத்தாள். அப்போது நான் மிகுந்த நாணத்துடன் கதவைக் காட்டிப் பன்முறை அவளுக்கு வணக்கஞ் செய்தேன். அப்போது நற்குண முள்ள அப் பெண்பிள்ளை அதிக கஷ்டத்துடன் என் கருத்தையறிந்து என்னைத் தோட்டத்திற்குள் எடுத்துக்கொண்டு சென்றாள் பிறகு அவள் என்னைத், தரையில் வைத்ததும் நான் சுமார் இருநூறு கஜ தூரஞ்சென்று அங்கிருந்து நான், அவள் என்னைப் பின் தொடர்ந்துவர வேண்டியதில்லை யென்று அவளுக்கு ஓர் குறிப்புக் காட்டினேன். அதன் பிறகு அவள் என்னைக் காணுவண்ணம் நான் ஒரு செடியின் இரண்டு இலைகளின் மத்தியில் மறைந்து கொண்டு அங்கே என் மல ஜலத்தைக் கழித்துக் கொண்டேன்.

நான் அத்தகைய அற்ப விஷயங்களைக் குறித்தெல்லாம் பேசுகின்றேனென்று அறிவீனர்கள் சிலர் கருதலாம். ஆனால் அவற்றால் பெரும் பயனெய்துதற்குரியார் நுண்ணறிவுள்ள தத்துவ சாஸ்திரிகளே யன்றி ஏனையோ ரல்லர். இருப்பினும் அத் தத்துவ சாஸ்திரிகளின் வாயிலாக மற்றைய மக்களும் பயனடைதல் கூடுமென்னுங் கருத்தினாலேயே நான் இந்தப் பிரயாணத்தின் வரலாற்றையும் மற்றைய பிரயாணங்களின் வரலாறுகளையும் வெளியிடுவேனாயினேன். இந்த பிரயாணங்களில் நான் கூறுபவை யனைத்தும் மெய்ம்மையே யன்றி, மற்று அவற்றில் இன்பத்தைப் பயக்கும் வேறு விஷயங்களை நான் வரைந்து வைக்கவில்லை. இப் பிரயாணத்தில் நான் கண்டு களிப்புற்ற காரியங்களை யெல்லாம் ஒன்றேனும் விடாமல் இந்த புத்தகத்தில் எழுதி யுள்ளேன். மற்றக் காரியங்களையும் நான் எழுதுவேனாயின் சிலர் நான் வெகு அற்ப விஷயங்

களைக் குறித்துப் பேசுகின்றேனென்று என்னைத் தாழ்வா யெண்ணி என்மீது குற்றம் சொல்லுவார்களென்று பயந்து நான் அங்ஙனம் செய்யவில்லை.

## இரண்டாம் அத்தியாயம்

என் எஜமானிக்கு ஒன்பது வயதுள்ள ஓர் பெண் இருந்தனள். அப் பெண் தன்வயதில் அறிய வேண்டிய விஷயங்களை யெல்லாம் மிக்க கவனமாய்க் கற்றுக் கொண்டு வந்தனள். அவள் பின்னல் வேலை செய்வதிலும் சிறு குழந்தைக்கு உடையணிவதிலும் மிக்க திறத்தினை வாய்ந்தவள். அவளும் அவள் அன்னையும் ஒன்று சேர்ந்து எனக்குத் தகுந்த ஓர் தொட்டில் செய்தார்கள். அவர்கள் எப்போதும் என்னை அத் தொட்டிலில் தான் படுக்க வைத்தல் வழக்கம். இராக்காலங்களில் அவர்கள் என்னை அத் தொட்டிலோடு கொண்டுபோய் ஓர் நகைப் பெட்டியின் அறையினில் அதிக பத்திரமாய் வைப்பார்கள். நான் அவர்களிடத்தில் இருந்தவரையில் அப் படுக்கையிலேதான் படுக்க வேண்டியதாயிருந்தது.

அவர்கள் பாஷையை நான் சிறிது சிறிதாக அறிந்து வரவர எனக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அவர்களிட மிருந்து நான் எளிதிற் பெறலானேன். நான் இரண்டொருமுறை என் உடைகளைக் கழற்றியதையும் தரித்ததையும் அச் சிறு பெண் கண்டு, பிறகு, தானே எனக்கு உடையணியவும் கழற்றவுமானாள். ஆனால் அப்பெண்ணுக்கு அவ்வித கஷ்டம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருப்பினும் அவளே தான் அத்தொழிலைச் செய்து வந்தனள்.

அவள் எனக்கு ஏழு சாதாரண உட்சட்டைகளும், இரண்டு மூன்று மேற்சட்டைகளும் தைத்துவைத்துக் கொண்டனள். அவையெல்லாம் மிகுந்த மிருதுவான சணல்நூலால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் அவைகளெல்லாம் நமது கோணிப் புடவையைக் காட்டினும் எவ்வளவோ முரடாயிருந்தன. என் உடைகளை யெல்லாம் அப்பெண் தானே தோய்த்து வந்தனள். மேலும் அவளே தங்கள் பாஷையை எனக்குக் கற்பித்து வந்தனள் நான் ஏறக் குறைய எல்லாப் பொருள்களின் பெயர்களையும் அவளிடம் அறிந்து கொண்டேன். அப் பெண் மிக நற்குணம் வாய்ந்தவள்.

அப் பெண் தன்வயதிற் கேற்ப உயரமில்லை யாயினும், தான் உயரத்தில் நாற்பதடிக்குக் குறைந்தில்லை அவள் எனக்குக் கிரில்ஜிரிக் என்னும் பெயர் வைத்தழைத்தாள். அப்பெயரையே அவள் குடும்ப முழுமையும் அங்கீகரிக்கலாயிற்று. பின்னர் அந்நாடு முழுமையும் அப்பெயரே எனக்கு வழங்கலாயிற்று.

அவள் தான் நான் அத் தேசத்திலிருந்த வரையில் என்னை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தாள். நாங்கள் இருவரும் எச்சமயமும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிதலே கிடையாது. நான் அவளை என் சிறிய செவிலித் தாயென்று கருதி வந்தேன். அவள் எனக்குச் செய்த நன்மைகளுக்காக நான் அவள்பால் மிக்க அன்பு பாராட்ட வேண்டியவனாயிருந்தேன். அவளுக்கு எவ்விதத்திலும் பிரதி நன்றி செய்ய வேண்டுமென்ற கருத்து எனக்கு எப்போதும் இருந்து வந்தது. நான் அப் பெண்ணை கிளம்டால் கிளிச் என்ற பெயர் வைத்து அழைப்பேனாயினேன்.

பின்னர் அண்டைப் பக்கத்திலுள்ளார் அனைவரும் என்னைப் பற்றி கீழ்வருமாறு அறியலானார்கள். அஃதாவது, என் எஜமானர் தம் வயலில் வியப்புறத்தக்க ஓர் ஜந்துவாகிய என்னைக் கண்டெடுத்ததாகவும், என் உருவம் மிகு சிறியதேயாயினும் என் தேகத்தின் பாகங்களெல்லாம் மனிதனுக்குள்ளவாறே இருப்பதாகவும், நான் மனிதன் செய்யுங் காரியங்களை யெல்லாம் செய்வதாகவும்,என் சிறிய பாஷையில் ஏதேதோ பேசுவதாகவும், அத் தேசத்துப் பாஷையில் சில வார்த்தைகள் கற்றுக் கொண்டதாவும், நான் என் சிறிய கால்களால் நிமிர்ந்து நடப்பதாகவும், என் எஜமானரால் நன்றாய்ப் பழக்கப் பட்டிருப்பதாகவும், என்னை எவரேனும் அழைத்தால் நான் அவர்களிடம் சாதுவாகச் செல்லுவதாகவும், அன்றியும் அவர்கள் என்னை யேதேனும் வேலை செய்யச் சொன்னால் நான் அதனைச் சீக்கிரத்தில் செய்வதாகவும்,என் அவயவங்களெல்லாம் மிக்கப் பொருத்த முள்ளனவாய் வனப்புப் பொருந்தி யிருப்பதாகவும், மூன்று வயதுள்ள ஓர் தனவந்தன் குழந்தையைக் காட்டினும் நான அழகுள்ளவனாய் இருப்பதாகவும், மேற் கூறியவர் என்னைப்பற்றி அறிந்ததேயாம்.

அருகிலிருந்த வேறொரு வேளாண்மைக்காரன் என் எஜமானருக்கு ஆப்த நண்பனா யிருந்ததால் என்னைக் காண வேண்டுமென்று ஓருநாள் எங்கள் வீட்டிற்கு வந்தான். அவனைக் கண்டதும் என் எஜமானர் அதிக சந்தோஷத்துடன் என்னைத் தூக்கி ஓர் மேஜையின்மேல் நிற்க வைத்து அதில் பலவாறு என்னை நடக்கும்படி எனக்குக் குறிப்புக் காட்டினார். நான் அவ்வாறே செய்தானதும், நான் என் கத்தியை யெடுத்து அவ் வேளாண்மைக்காரனுக்குக் காண்

பித்துப் பிறகு அதனை உறையில் போட்டுக்கொண்டேன். நான் பிறகு அவனுக்கு மரியாதைசெய்து, "தாங்கள் சௌக்கியந்தானா? தங்கள் நல்வரவு பெரிதும் வேண்டற்பாற்று," என்று என் செவிலித்தாய் எனக்குக் கற்பித்த வண்ணம் அவர்கள் பாஷையில் அவனிடம் கூறினேன். அவன் முதுமைப் பருவமடைந்திருந்ததால் என்னை நன்றாய்ப்பார்க்கும் பொருட்டுத் தன் மூக்குக் கண்ணாடியைத் தரித்துக்கொண்டான். அதனைக் கண்டதும் எனக்கு அதிக நகைப்புண்டாயிற்று. ஏனெனில், அவன் கண்களிரண்டும் பூரணச் சந்திரன் ஓர் அறைக்குள் இரண்டு சாளரங்களின் வழியாய்ப் பிரகாசிப்பதுபோல் தோன்றின. நான் நகைத்ததின் காரணத்தை மற்றையோரும் அறிந்து தாங்களும் ஒருங்கே நகைத்தார்கள். அதைக் கண்டு அக் கிழவன் பேதைத்தனமாய் ஒருவாறு தன் முகத்தைச் சுளித்து எங்களிடம் சினந்து பேசினான்.

நான் அக்கிழவனை ஓர் பெரிய உலோபியென்றே எண்ணினேன். அப்பெயர் அவனுக்கு அதிக பொருத்தமுடையதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏனென்றால், அவன் என்னை அடுத்த பட்டணத்திற்குச் சந்தை கூடும் தினத்தில் கொண்டுபோய் அங்கே வரும் ஜனங்களுக்கு என்னை வேடிக்கைக் காண்பித்து வேண்டிய பொருள் சம்பாதிக்கலாமென்று என் எஜமானனிடம் கூறினான் இதனோடு நில்லாமல் அவன், "என்ன யோசிக்கிறாய்? நம் ஊரிலிருந்து அப்பட்டணம் அரைமணி நேர நடைதானே? அவ்வாறு செய்வதால் உனக்கு என்ன கஷ்டம் வரும்? பொருள் சம்பாதிப்பதைத்தான் பொருட்டாய் மதிக்கவேண்டும்," என்று கூறினான். அப் பட்டணம் அக்கிராமத்திலிருந்து

22 மைல் தூரமிருந்தது. அவ்வளவு தூரத்தை அக்கிழவன் அரைமணிநேர நடைதானே யென்று வெகு எளிதாகக் கூறினன்.

பின்னர் அக்கிழவனும் என் எஜமானரும் என்னைச் சுட்டிப் பன்முறை ஏதேதோ இரகசியமாய் நெடுநேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்போது நான் அவர்கள் என்ன சதியாலோசனை செய்கிறார்களோவென்று மிக்க திகிலடைந்தேன். அவர்கள் பேசிய வார்த்தைகளில் இரண்டொன்றை யாகிலும் அறியலாமென்று நான் அவர்கள் சம்பாஷணையை அதிக கவனமாய்க் கேட்டேன். ஆனல் அவர்கள் பேசிய தின்னதென்று எனக்குச் சிறிதும் புலப்படவேயில்லை. மறுநாட் காலையில் என் செவிலித்தாய் (கிளம்டால்கிளிச்) எனக்கு நடந்த சங்கதிகள் அனைத்தையும் அறிவித்தாள். அவள் அவற்றை யெல்லாம் தன் தாயாரிடமிருந்து தந்திரமாய் அறிந்துகொண்டாள். மேன்மைக் குணம் பொருந்திய அப் பெண் என்னைத் தன் மார்பின் மேல் எடுத்துவைத்துக் கொண்டு, தான் வெட்கத்தினுலும் வருத்தத்தினுலும் கண்ணீர் விட்டுப் புலம்பலானுள். அவள் அத்தேசத்து முருட்டு ஜனங்கள் எனக்கு எவ்வித தீமை புரிவார்களோ வென்றும், அவர்கள் என்னை யெடுத்தால் என் அவயவங்களில் ஏதேனும் உடைந்து விடுமோ வென்றும் அதிக பயமடைந்தாள். உயர்ந்த குணமும் தகுந்த மரியாதையுமுடைய என்னை இழிவுள்ள மனிதர்கள் முன்னிலையில் வேடிக்கைக் காட்டிப் பொருளீட்டுதல் எனக்கு எத்துணை இழிவைத் தருமென்று அப்பெண் எண்ணி யெண்ணி ஏக்கமுற்றுள். என்னை அவளுக்கே கொடுத்து விடுவதாக தன் தாய் தந்தையர் தனக்கு வாக்களித்திருப்பதாக

அவள் என்னிடம் கூறினாள். ஆனால் அவர்கள் சென்ற வருடம் தனக்கு ஓர் ஆட்டுக் குட்டியைக் கொடுப்பதாக முதலில் வாக்களித்து விட்டுப் பிறகு அது நன்றாய்க் கொழுத்தானதும் அதனை ஓர் கசாப்புக்காரனுக்கு விற்பனை செய்து தன்னை ஏமாற்றியதுபோல இத்தருணமும் எப்படி ஏமாற்றி விடுவார்களோ வென்று அவள் அதிக சமுசயங் கொண்டாள்.

உண்மையாகவே, அப்பெண் என் நிலையைக் குறித்து எவ்வளவு துன்புற்றனளோ அவ்வளவு நான் என் கதியை எண்ணித் துயருறவில்லை. எவ்வாறாயினும் நான் ஓர்நாள் விடுதலையடைவது திண்ணமே யென்று நான் உறுதியாய் எண்ணியிருந்தேன். ஆனாலும் என் எஜமானர் என்னைச் சந்தைக்குக் கொண்டுபோய் வேடிக்கைக் காட்டப்போகும் விஷயத்தைப்பற்றி மாத்திரம் நான் சிந்தித்து ஒருவாறு மனம் வருந்தினேன். வருந்தினேனாயினும், என் எஜமானர் என்னை அவ்வாறு செய்தலால் எனக்குண்டாகும் இழிவை நான் ஒரு பொருட்படுத்தவில்லை. ஏனெனில், எத்துணைச் சிறப்புப்பெற்ற வேந்தனே யாயினும் நானிருந்த நிலையில் இருக்க நேர்ந்தால் அவனும் அத்தகைய இழிவினையே யடைதல் ஒருதலை யென்று யாவரும் அறிந்த விஷயமன்றோ?

என் எஜமானர் தம் நண்பர் கூறிய போதனையின்படி மறுசந்தை கூடும் தினத்தில் மேலுரைத்த பட்டணத்திற்கு என்னை ஒரு பெட்டியில் எடுத்துக்கொண்டு போனார். அப்போது அவருடன் அவர் குமாரத்தியாகிய என் செவிலித்தாயும் அப்பட்டணத்திற்கு வந்தாள். என்னை வைத்திருந்த பெட்டி ஒவ்வொரு பக்கத்திலும் நன்றாக மூடப்பட்டிருந்

தது. நான் உள்ளே போவதற்கும் வெளியே வருவதற்கும் மாத்திரம் அதில் ஒரு சிறிய கதவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் காற்று நுழைவதற்காக அதில் சில சிறிய துவாரங் களும் செய்யப்பட்டிருந்தன. என் செவிலித்தாய் என் சுகத்தைக் கருதி, தான் படுத்துக்கொண்டிருந்த மெத்தை யை மறவாமல் தன்னுடன் எடுத்துக்கொண்டு வந்தாள். அப்பிரயாணம் நாங்கள் அரைமணி நேரம் செய்தோம். அரைமணி நேரமாயிருந்தும் நான் அதிக கஷ்டத்தை யடைந்தேன். ஏனென்றால், என்னை அப் பெட்டியில் என் எஜமானர் எடுத்துக்கொண்டு போனபோது என் தேகம் அதிகமாய்க் குலுங்கிற்று. ஏனெனில், நாங்கள் ஏறிச்சென்ற குதிரை ஒவ்வொரு காலடியும் நாற்பதடிக்குக் குறையாமல் வைத்துச்சென்றது. ஒரு பெரும்புயலில் அகப்பட்டுக் கொண்ட கப்பல் எங்ஙனம் உயர்ந்தும் தாழ்ந்தும் ஒரு நிலையில் நில்லாமல் அதன் கண்ணிருக்கும் மனிதர்களுக்கு துன்பத்தைப் பயக்குமோ அவ்வளவு துன்பத்தை நான் அக்குதிரையின்மீது சென்றபோது அடையலானேன்.

என் எஜமானர் தாம் அடிக்கடி வழக்கமாய் வந்திறங் கும் சத்திரத்தினிட்த்தே வந்திறங்கினர். அங்கே அவர் சத்திரக்காரனிடத்தில் சிறிது நேரம் பேசி வேண்டிய ஏற் பாடுகள் செய்துவிட்டுப் பிறகு ஒரு வேலைக்காரனை அழை த்து அவனைக் கீழ்வருமாறு அப்பட்டணத்து ஜனங்களுக் கெல்லாம் சமாசாரம் தெரிவிக்கும்படி கட்டளையிட்டார். கூளிப்பட்சி எழுதப்பட்டுள்ள பச்சைக்கொடி போட்டிருக் கும் இடத்தண்டை, வியக்கத்தக்க ஒரு விசித்திரமான ஜந்துவைக் காணலாம். அது ஸ்பிளாக்னக் மிருகத்தைப் போன்ற அவ்வளவு பெரியதன்று. (ஸ்பிளாக்னக் என்னும்

மிருகம் அத்தேசத்தில் விசேஷமாகவுள்ளது; அஃது ஆறடி நீளமும் நேர்த்தியான உருவமும் உடையது. அதன் பாகங்கள் ஒவ்வொன்றும் மனிதனுக்கு இருப்பனபோலவே தோன்றும்.) ஆயினும் அஃது அநேக வார்த்தைகளைப்பேசவும் அறியவும் கற்றுக்கொண் டிருக்கிறது. அன்றியும், அது நூற்றுக் கணக்கான வேடிக்கைகள் தந்திரமாகச் செய்துகாட்டும் தன்மையைப் பெற்றிருக்கிறது.

என் எஜமானர் மேற்கூறிய சத்திரத்திலுள்ள ஒரு பெரிய அறையில் ஒரு மேஜைபோட்டு அதன்மேல் என்னை எடுத்து வைத்தார். அந்த அறை முந்நூறு அடி நீளம் இருந்தது. என் செவிலித்தாய் அம்மேஜையின் அருகில் ஒரு தாழ்ந்த பென்சு போட்டு அதன் மீதேறி நின்றுகொண்டாள். நான் என்னென்ன வேடிக்கைகள் செய்யவேண்டுமென்பதை அவள்தான் எனக்குச் சொல்லவேண்டியவள். ஜனங்கள் அதிக கூட்டமாக இருக்கக் கூடாதென்று என் எஜமானர் ஒரு முறையில் முப்பது மனிதர்களுக்குமேல் என்னைப் பார்க்க விடவில்லை. அவர் பெண் என்னை அம் மேஜையின்மேல் எவ்வெவ்விதமாக நடக்கும்படி எனக்குக் கட்டளையிட்டனளோ அவ்வவ்விதமாக நான் நடந்தேன். அவர்கள் பாஷையை நான் அறிந்திருக்கும் அளவுக்குத் தக்கவாறு அவள் என்னைச் சில கேள்விகள் கேட்டாள். அக்கேள்விகள் அனைத்திற்கும் நான் என்னாலியன்ற வரையில் உரத்த குரலுடன் தகுந்த விடைகள் அளித்தேன். நான் வந்திருந்த ஜனங்களைப் பன்முறை பார்த்து அவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்தேன்; அன்றியும் அந்த ஜனங்கள் என்னைக் காணவந்தது எனக்கு மிகுந்த சந்தோஷமென்றும் நான் அவர்களிடம் கூறினேன். அவையன்றியும்

நான் கற்றிருந்த வேறு சில வார்த்தைகளையும் கூறி, வந்த மனிதர்களைக் களிக்கச்செய்தேன். பிறகு அவள் ஒரு விரற் புட்டிலையெடுத்து அதில் நிறைய சாராயத்தை நிரப்பி அதனை என்னிடம் கொடுத்தாள். அஃது நமது சாதாரண ஒரு கோப்பையின் அளவினையுடையதா யிருந்தது. அதை நான் களிப்புடன் வாங்கி அதன்கண்ணிருந்த சாராயம் முழுமையும் பருகினேன். பிறகு நான் என் கத்தியை உறையிலிருந்தெடுத்து இங்கிலாந்தில் காவற்காரர்கள் கத்தி சுழற்றுதல்போலச் சுழற்றினேன். அதன் பின்னர் அவள் ஒரு வைக்கோல் துண்டை என்னிடம் கொடுத்தாள். நான் என் இளமைப் பருவத்தில் ஈட்டிவேலைசெய்யக் கற்றிருந்தமையால் அந்த வைக்கோல் துண்டை ஈட்டியாக உபயோகித்து அதற்குறிய வேலைகள் பல செய்து காட்டினேன்.

அன்றைய தினம் பன்னிரண்டுமுறை நான் மேற்கூறிய விளையாட்டுகளைச் செய்து காண்பித்தேன். ஏனெனில், ஜனங்கள் புதிது புதிதாக என்னைப் பார்ப்பதற்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆதலால், ஜனங்கள் கூட்டத்தின் மிகுதியை நோக்கி என் எஜமானர் மேற்கூறிய வேடிக்கையை அத்தனைமுறை வைத்தார் நான் வேடிக்கைக் காண்பித்ததால் மிகுந்த களைப்படைந்தேன். மேலும் சற்றுநேரம் இன்னும் அவ் விளையாட்டைச் செய்திருப்பேனாயின் நான் அவசியம் மரணமே அடைந்திருப்பேன். என்னை வந்து பார்த்துவிட்டுப் போன ஜனங்களெல்லாம் வெளியே என்னைப்பற்றி வெகுவியப்பாக பேசியதைக் கேட்டு இன்னும் அளவற்ற ஜனங்கள் என்னைக் காணவந்தார்கள். அவர்கள் உள்ளே வரக்கூடாமையால் வெளியிலிருந்தபடியே கதவை உடைத்துவிட்டு உள்ளே வந்து விடலாமென்று

எண்ணினார்கள். என் எஜமானர் சுய நன்மையைக் கருதியே என்னைத் தமது குமாரத்தியன்றி வேறெவரும் தொடாமலிருக்கும்படி பாதுகாத்துக்கொண்டிருந்தார். அதன் பொருட்டு அவர் செய்த காரியம் யாதெனில், பெண்களை யெல்லாம் நானிருக்கும் மேஜையைச் சுற்றிலும் ஜனங்கள் என்னைத் தொடக்கூடாத தூரத்தில் போடும்படி தாம் ஏற்பாடு செய்ததேயாம். எப்படி யிருப்பினும், ஒரு பள்ளிக்கூடத்துப் பையன் தனக்குக் கிடைத்த ஒரு சிறிய கொட்டையை எடுத்து என் தலைக்கு நேராக எறிந்தான். ஆனால் என் நல்ல காலம் அஃது என் மீது படாமற் போயிற்று. அக் கொட்டை மாத்திரம் என் தலையில் பட்டிருக்குமானால் நிச்சயமாய் என் மண்டை கிழிந்துபோயிருக்கும். ஏனென்றால், அக் கொட்டை நமது தேசத்திலுள்ள பூசணிக்காயினது பருமனிருந்தது. அந்தத் தீய செயலைச் செய்த அத் திருட்டுப் பையனை என் எஜமானர் நன்றாய் அடித்து அறையைவிட்டு வெளியே துரத்திவிட்டார். அதைக் கண்டு நான் ஒருவாறு ஆறுதலை யடைந்தேன்.

என் எஜமானர் மறுசந்தை கூடுந்தினத்திலும் மேற்செய்து காட்டிய வேடிக்கையை வைப்பதாக அனைவர்க்கும் விளம்பரஞ் செய்தார். மறு பிரயாணத்திற்கு அவர் எனக்குத் தகுந்த ஒரு வண்டி தயார்செய்தார். அவர் அங்ஙனம் செய்ததற்கும் காரணமுண்டு. என்னையெனின், நான் முதற் பிரயாணத்தில் மிக்க களைப்புற்றிருந்தமையாலும், ஒரே தினத்தில் எட்டுமணி நேரம் ஒன்றாக கஷ்டப்பட்டு நான் வேடிக்கைச் செய்து காட்டினமையாலும். பிறகு என்னால் எழுந்து நிற்கவும் சாத்தியப்படவில்லை;

ஒருவார்த்தை பேசவும் சாயவில்லை பிறகு என் தேகம் முன்போலாவதற்கு மூன்று தினங்களாயின. நான் வீட்டிலேயே யிருந்தும் எனக்குச் சிறிதும் ஓய்வென்பதில்லை. ஏனென்றால், சுற்றுப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து அனேக ஜனங்கள் என்னைப் பற்றிக் கேள்வியுற்று என்னைச் சதாகாலமும் வந்து பார்த்துக்கொண்டு போயிருந்தார்கள். அந் நாடு அதிக குடிவளமுடையதா யிருந்ததால் என்னைக் காணவந்த ஒவ்வொரு குடும்பத்திலும் முப்பது மனிதர்களுக்குக் குறையாமல் இருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் எஜமானர் பிரத்தியேகமாக ஒரு அறைவிட்டு அதற்குரிய குடிக்கூலியையும் தாம் பெற்றார். ஆதலால், ஒரு தினத்தில் சிறிது காலந்தான் எனக்கு ஓய்வு கிடைத்தது. அத் தேசத்தார் புதவாரந்தான் கடவுளைத் தொழுவதற்குத் தகுந்த தினமாகக் கருதிவந்தார். நான் ஒருவாரத்தில் புதன்கிழமைதான் தொல்லையின்றிச் சுகமாகக் காலத்தைக் கழித்துக்கொண் டிருப்பேன்.

என் எஜமானர் என்னால் தமக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கருதி என்னை அந் நாட்டின்கண்ணிருக்கும் சிறந்த நகரங்களுக்கெல்லாம் கொண்டுபோய் பொருளீட்டல்வேண்டுமென்று தமது சிந்தையைத் திடம செய்துகொண்டார். ஆதலால், அவர் நீண்ட பிரயாணத்திற்குத் தகுந்த முயற்சிகளெல்லாம் செய்துவிட்டுப் பிறகு தமது குடும்ப காரியங்கள் அனைத்தும் செவ்வனே நடைபெறுவதற்கு வேண்டிய பிரயத்தினங்களும் செய்துவிட்டு 1703 - ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 17 - ஆந் தேதி அந் நாட்டுத் தலைமைப்பட்டணத்திற்குப் பிரயாணப்பட்டார். அவர் பிரயாணப்படுவதற்கு முன் தம் மனைவி மக்களுக்கு வேண்டிய தேறு

தல் கூறினர். அச் சமயம் நான் அந் நாட்டிற்கு வந்து ஏறக்குறைய இரண்டு மாதங்களாயின. தலைமைப் பட்டணத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் மூவாயிர மைல் தூரமிருந்தது என் எஜமானர் தம் குமாரத்தி கிளம்டால் கிளிச் என்பவளையும் தன்னுடன் அழைத்து வந்தார். அவள் என்னை ஒரு பெட்டியில் வைத்து தன் இடுப்பில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டாள். அவள் அப் பெட்டிக்குள் எனக்கு வேண்டிய வுடைகளையும் வைத்திருந்தாள். நுண்ணறிவுள்ள அப் பெண்ணணவள் நான் ஒரு பெட்டிக்குள் எவ்வளவு சுகத்தைப் பெறக்கூடுமோ அதனை எனக்கு அமைத்து வைத்தாள். எங்கள் வீட்டிலிருந்த ஒரு வேலைக்காரப் பையன் மாத்திரம் எங்களுடன் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு வேறொரு குதிரையின் மேலேறி வந்தான். என் எஜமானர் வழியிலுள்ள பிரதான பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும், தனிமையாயுள்ள சில கனதனவான்கள் வீட்டிற்கும் செல்லவேண்டுமென்று தாம் திடஞ்செய்து கொண்டார்.

நாங்கள் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்யாமல் எங்கள் சௌகரியப்படி தினந்தோறும் நூறு மைல் நூற்று ஐம்பது மைல் சென்றுகொண் டிருந்தோம். ஏனெனில், என் செவிலித்தாய் என் சுகத்தைக் கருதி, தான் குதிரையின்மேல் வரும்போது தன் தேகம் அதிகமாகக் குலுங்குகிறதென்றும், அதனல் நீண்ட பிரயாணம் ஒவ்வொரு நாளும் செய்தல் தன்னல் இயலாதென்றும் உறுதியாகத் தன் தந்தையிடம் கூறிவிட்டாள். நான் விரும்பியதுபோல் அவள் என்னை அடிக்கடி பெட்டியி லிருந்தெடுத்து நான் நல்ல

காற்று உட்கொள்ளும்படி செய்தாள். அன்றியும், அவள் என்னை ஒவ்வொரு கிராமத்தையும் நன்றாய்ப் பார்க்கும்படி செய்தாள். ஆயினும் அவள் எனக்கு எந்தக் கிராமத்தைக் காட்டியபோதும் என்னை இடுப்பில் ஒரு வலிவான கயிறு கட்டி அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். வழியில் கங்கை நதியைக் காட்டினும் பன்மடங்கு அகலமும் ஆழமும் உள்ள ஐந்து ஆறு நதிகளை நாங்கள் கடந்து சென்றோம். ஆனால், லண்டன்மா நகரத்திலுள்ள தேம்ஸ் நதியைப்போன்ற சிறிய நதியை எங்கள் பிரயாணம் முழுமையிலும் நாங்கள் காணவில்லை. நாங்கள் அப்போது எங்கள் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டுப் பத்துவாரங்களாயின. அதற்குள் நாங்கள் பதினெட்டுப் பெரிய நகரங்களையும், அநேக கிராமங்களையும், பல தனவான்கள் வீடுகளையும் கண்ணுற்று ஆங்காங்கு எங்கள் அருமையான வேடிக்கைகளைச் செய்து காட்டிக்கொண்டு வந்தோம். நாங்கள் அக்டோபர் மாதம் 26 - ஆந் தேதி அத் தேசத்துத் தலைமைப் பட்டணத்தை வந்தடைந்தோம். அவர்கள் அப் பட்டணத்தின் பெயர் லார்பல்கிரட் என்று தங்கள் பாஷையில் சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் அப் பெயருக்குப் பொருள் உலகவொளி அல்லது ஜகத் ஜோதி என்று கூறினார்கள். அப் பட்டணத்தின் பிரதான வீதியிலுள்ள ஒரு வீட்டில் நாங்கள் வந்திறங்கினோம். அவ்வீதி அப் பட்டணத்தரசன் மாளிகைக்கு வெகு அருகாமையில் இருந்தது. என் எஜமானர் தமது வழக்கப்படி என் உருவத்தையும் அவயவங்களையுங் குறித்துச் சரியாக விளம்பரப் பத்திரங்களில் எழுதி அப் பட்டணம் முழுமையும் வெளிப்படுத்தினர். அவர் வேடிக்கை காட்டுவதற்

கென்று சுமார் முந்நூறு முந்நூற்றைம்பது அடி அகல முள்ள ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டார். நான் வேடிக்கை காட்டுவதற்காக அவர் அறுபதடி சதுர முள்ள ஒரு மேஜையை அதில் போட்டுவைத்தார். நான் வேடிக்கை செய்யும்போது தவறிக் கீழேவிழுந்து விடாமலி ருக்கும் பொருட்டு அவர் அம்மேஜையைச் சுற்றிலும் மூன்றடி உயரம் கிராதி அமைத்திருந்தார். கண்ணுறும் ஜனங்களெல்லாம் களிப்பையும் வியப்பையும் அடையும் படி அவர் ஒரு தினத்திற்குப் பத்துமுறை வேடிக்கை வைத் தார். நிற்க, நான் அப்போது அவர்கள் பாஷையை நன் ருய்ப் பேசும் திறமையைப் பெற்றேன். அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு அப்போது நன்ருய் விளங்கிற்று. அல்லாமலும், அவர்கள் பாஷையின் எழுத்துக்கள் அனைத்தையும் எழுதக் கற்றுக்கொண் டிருந் தேன். ஆதலால், ஒரு வாக்கியம் அவர்கள் பாஷையில் எழுதவேண்டுமானல் ஏதோ ஒருவிதமாக அங்குமிங்கும் ஒவ்வொரு எழுத்தை நான் எழுதி வைப்பேன். நான் வீட் டில் ஓய்வா யிருந்தபோ தெல்லாம் என் செவிலித்தாய் எனக்குக் கல்வி கற்றுக்கொடுத்து வந்தாள். அவள் தன் னுடன் ஒரு சிறிய புத்தகத்தைக்கொண்டு வந்திருந்தாள். அது ஒரு பெரிய தேசபடப் புத்தகத்தைக் (Atlas) காட்டி லும் பெரிதாக இருந்தது. அது சிறு பெண்கள் உபயோ கத்திற்காக அவர்கள் மதத்தின் கொள்கை சுருக்கமாக அடங்கப் பெற்றுள்ள சாதாரண ஒரு சிறிய கிரந்தம். அப் புத்தகத்திலிருந்துதான் என் செவிலித்தாய் எனக்கு எழுத்துக்களையும் சில சொற்களின் பொருள்களை யும் கற்பித்தாள்.

---

# மூன்றும் அத்தியாயம்

நான் தினந்தோறும் பன்முறை கஷ்டப்பட்டு வேடிக்கைச் செய்து காட்டியதால் என் தேகம் நாளுக்கு நாள் அதிக மெலிவடைந்துகொண்டு வந்தது. கடைசியில் அது ஒன்றுமில்லாமல் பாகுபோல் உருகிவிடும்போ லிருந்தது. நான் பசியையும் சுகத்தையும் இழந்தேன். ஆதலால் இன்னும் சில நாட்களுக்குள் நான் மாய்ந்துவிடுவே னென்று அச்சமும் கவலையும் கொண்டேன். நான் என் தேகத்தை நோக்க நோக்க என் மனம் தாமரை இலையில்விட்ட தண்ணீரைப்போலத் தத்தளித்தது. நான் என் மனைவி மக்களைப் பார்க்காமலேயே இறந்துவிட வேண்டுமே யென்று மிகுந்த மனக்கவலையுற்றேன். ஆனால், என் எஜமானர் மாத்திரம் எனக்கு நேரும் கதியைப் பற்றிச் சிறிதும் இரக்கம் கொள்ளவில்லை. ஆனால் அவர் நான் நெடுநாள் ஜீவித்திருக்கமாட்டே னென்று மாத்திரம் நன்றாய் அறிந்துகொண்டு, கிடைத்த வரையில் இலாபமென்று கருதி என்னை எவருக்கேனும் விற்றுவிடவேண்டு மென்று நிச்சயஞ் செய்து கொண்டார். என்னை எத்தகையோர்க்கு விற்பனை செய்தல் வேண்டுமென்றும், எவ்விதத்தால் அதிக தொகை பெறக்கூடு மென்றும் அவர் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அரசன் மாளிகையிலிருந்து ஒரு வேலைக்காரன் எங்களிடம் ஓட்டமாய் ஓடிவந்தான். பிறகு, அவன் என் எஜமானரை என்னை மாளிகைக்கு எடுத்துக்கொண்டு வரும்படி அரசன் கட்டளையிட்டதாக அவரிடம் மொழிந்தான். உடனே என் எஜமானர் மிகுந்த உவப்புடன் என்னை அங்கே எடுத்துக்கொண்டு போனார். அங்கே சென்றதும்,

அரசன் மாளிகையிலிருந்த சில மங்கையர்கள், முன்னர் என்னை வந்து கண்ணுற்றதாகவும், பின்னர் அவர்கள் மஹாராணிக்கு என்னைப் பற்றித் தெரிவித்ததாகவும், அதன்மேல் அம் மஹாராணி என்னைக் காண மிகுந்த விருப்பங்கொண்டதாகவும் நாங்கள் அறியலானேம். ஆதலால், என் எஜமானரை வரவழைத்தது மஹாராணியே யன்றி அரசரல்லவென்று நான் தெரிந்து கொண்டேன். மேற்கூறிய வேலைக்காரன் எங்களை நேராக மஹாராணியினிடம் கொண்டு போய்விட்டான். மஹாரார்ணி என் குணம், செய்கை, அறிவு முதலியவற்றைப் பற்றி முன்னதாகவே கேள்வியுற்றிருந்தாள். ஆதலால், அவள் என்னைக் கண்டதும் மனமகிழ்ச்சியுடன் என் அருகில் வந்தாள். உடனே நான் அவள் பாதத்தில் விழுந்து அதில் ஒரு முத்தமிட்டு அவளை மேலும் மனமகிழச் செய்தேன்.

பின்னர் நான் மஹாராணியைத் தனது கரத்தை என் அருகில் கொண்டுவரும்படி மிகவும் இரந்து வேண்டிக் கொண்டேன். அவள் தனது சுண்டுவிரலின் நுனியை என் அருகில் கொண்டு வந்து காட்டினாள். நான் உடனே முழங்கா லிட்டுக்கொண்டு அவ்விரலின் நுனியை என் இருகரங்களாலும் நன்றாய்ச் சேர்த்து, அதில் ஒரு முத்தமிட்டேன். அதைக் கண்ணுற்ற அங்கிருந்த மற்ற மங்கைமாரெல்லாம் என்றும் அனுபவித்தறியாத ஓர் பேரானந்தத்தை எய்தினார்கள். அன்றியும் என் குணமாட்சியையறிந்து அவர்கள் அனைவரும் கொண்ட வியப்பு இவ்வளவென்று எழுதக் கூடியதன்று. மஹாராணியவர்கள் சிறிது நேரங் கழிந்ததும், நான் எத்தேசத்தைச் சார்ந்தவனென்றும், எக் காரணத்தால் அப் பிரயாணம் செய்யலுற்றே

னென்றும், எவ்வுபாயத்தால் ஒரு வேளாண்மைக்காரன் என்னைக் கைப்பற்றினனென்றும், அதன் பின்னர் அவன் எவ்வாறு உணவு, உடை முதலியன அளித்து வருகின்றா னென்றும் வினவினள். நான் அவைகளுக்குத் தகுந்த மறுமொழிகள் என்னாலியன்ற வரையில் தெளிவாகக் கூறினேன். நான் சில வார்த்தைகளில் பதிலுரைத்த போதிலும் அவைகள் தம்மிடத்து எவ்வளவு பொருள்களை அடக்கியுள்ளனவென்று அவள் மிகவும் வியப்புற்று என்பால் அதிக அன்பு பாராட்டினள். பின்னர், அவள் நான் ஓர் அரசியின் அரண்மனையில் வசிப்பது எனக்குப் பிரியந்தானாவென்று என்னை வினவினள். நான் அதற்குத் தாழ்மையாகத் தலைகுனிந்து நான் ஒருவர் கையில் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் என்னிஷ்டப்படி எந்தக் காரியமும் செய்யமுடியாதே யென்றும், எனக்கு நானே எஜமானனாக இருப்பேனாயின் அத்தகைய வாழ்வைக் காட்டினும் சிறந்த வாழ்வு எனக்கு வேறில்லையே யென்றும், அதிக மரியாதையுடன் அவளுக்கு மறுமொழி பகர்ந்தேன். அதைக் கேட்டு அவள் என் எஜமானராகிய வேளாண்மைக்காரனைத் தனக்கு என்னை உயர்ந்த விலைக்கு விற்பனைசெய்ய விருப்பந்தானா என்று வினவினள். அவர் அக்கருத்தையே கொண்டிருந்தவ ராதலாலும், மேலும் அவர் நான் இன்னும் ஒரு மாதத்திற்குமேல் உயிர் பிழைத்திரே னென்று திடமாக எண்ணியிருந்ததாலும், மஹாராணி கூறியதைக் கேட்டுத் தமக்கு நல்ல சமயம் வாய்த்த தென்றுன்னி தமக்கு ஆயிரம் பவுன் கிடைப்பதா யிருந்தால் என்னைச் சந்தோஷமாக விற்று விடுவதாக மஹாராணி யவர்களிடம் கூறினர். உடனே அவர்கள் அத்தொகையை அவருக்குக் கொண்டுவந்து

கொடுக்கும்படி தம் தோழிக்குக் கட்டளையிட்டார்கள். அந்த நாணயங்கள் ஒவ்வொன்றும் எண்ணூறு மாயிடார் (Moidore) பருமன் பெரியதாக விருந்தது.

நான் மஹாராணியின் சுதந்தரமானதும் அவர்களைக் கீழ்வருமாறு கேட்டுக்கொண்டேன். "அம்மணி! நான் தங்களுக்கு அடிமையானதைக் குறித்து மிகுந்த இன்பமும் இறுமாப்பும் எய்துகின்றேன். நான் தங்களைக் கேட்டுக் கொள்ளும் ஒரு வேண்டுகோளுக்கு மாத்திரம் தாங்கள் மனமிசைய வேண்டும். அஃதென்னை யெனின், நான் இந் நாட்டிற்கு வந்ததிலிருந்து என்பால் அளவற்ற அன்பு பாராட்டி என்னை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்த 'கிளம்டால் கிளிச்' என்பவளையும் என்னுடன் தங்கள் அரண்மனையில் வைத்துக்கொள்ளவேண்டு மென்பதாம். அவள்தான் எனக் கியைந்த செவிலித்தாயாகவும், வேண் டியவற்றைக் கற்பிப்பவளாயும் இருப்பாள்."

அதைக்கேட்டு மஹாராணியவர்கள் அங்ஙனமே செய்யச் சம்மதித்தார்கள். ஆயினும் அதற்கு வேளாண் மைக்காரன் சம்மதி அத்தியாவசிய மாதலால் அம் மஹா ராணியவர்கள் அவனைத் தன் குமாரத்தியையும் என்னுடன் அரண்மனையில் விட்டு விட்டுப்போவதற்கு ஏதேனும் தனக் குத் தடையுண்டோ வென்றுகேட்டார்கள். ஓர் வேளாண் மைக்காரன் பெண் மஹாராணியின் மனையில் இருத்தலைக் காட்டினும் அவளுக்கு உயர்ந்த சிறப்பும் பயனும் வேறெங் குளது? அதை அவ் வேளாண்மைக்காரன் சாலவும் அறிந்தவனாதலால் மஹாராணியிடம் தன் குமாரத்தியை விட்டுவிட்டுப்போவதற்கு மனப்பூர்வமாகச் சம்மதங்கொண் டான். அவன் குமாரத்தி தான் இனி எய்தும் சிறப்பினைக்

குறித்து எவ்வளவு சந்தோஷங் கொண்டனளென்று ஈண்டு வரைய வேண்டுவதில்லை. அவளுக்குத் தன் அகத்தின்கண் உண்டாகிய வுவப்பை எளிதில் யாவரும் அறியக்கூடியதாக விருந்தது. பின்னர் என் பழைய எஜமானராகிய வேளாண்மைக்காரன் தன் குமாரத்தியையும் என்னையும் விட்டுப் பிரிந்து தன் கிராமத்திற்குச் செல்வானாயினான். அவன் போகும்போது தான் என்னை உயர்ந்த இடத்தில் விட்டு விட்டுப் போவதாகவும், இன்னும் எனக்கு அதிக பெருமையுண்டாகுமென்றும் கூறி, எனக்கு வந்தனம் அளித்துச் சென்றான். நான் அவனுக்கு ஒரு பதிலும் உரைக்காமல், அவன் போய் வருகிறேன் என்று சொன்னபோது மாத்திரம் அப்படியே செய்யலாமென்று பொருள்படும்படி என் தலையை ஒருசிறிது அசைத்தேன்.

மஹாராணியவர்கள் எனக்கு வேளாண்மைக்காரன் மேல் வெகுளி யுண்டாயிற்று என்று அறிந்துகொண்டார்கள். ஆகையால், அவன் வெளியே சென்றதும் அவர்கள் நான் ஏன் என் பழைய எஜமானனைப்பிரியும்போது ஒன்றும் பேசவில்லை என்றும், அவருக்குத் தக்க மரியாதை செய்யவில்லை என்றும் என்னைக் கேட்டார்கள். நான் தைரியமாக அவர்களுக்குக் கீழ்வருமாறு பதிலுரைத்தேன். "என் பழைய எஜமானன் தன் நிலத்தில் குற்றமற்ற ஒரு ஜந்துவைக் கண்டபோது அதைக் கொல்லாமலிருந்த ஒன்றிற்கே நான் அவனுக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருந்தேன். அதற்கீடாக அவன் என்னை அநேக பட்டணங்களுக்குக் கொண்டுபோய் வேடிக்கைக் காண்பித்து வேண்டியபொருள் சம்பாதித்துக்கொண்டான். அஃதன்றியும், என்னைத் தங்களுக்கு விற்பனைசெய்து பெருந்தொகை

பெற்றுக்கொண்டு போனுன். என் வலிமைக்குப் பதின் மடங்கு வலிமை பொருந்திய ஜந்துவாயிருந்தாலும் அது என்னைப்போல் அவனிடத்தில் இருந்திருந்தால் திடமாகத் தன்னுயிரை இழந்தேயிருக்கும். அவன் எனக்குத் தினந்தோறும் வேடிக்கை காட்டக் கொடுத்த கஷ்டத்தால் நான் மெலிவடைந்து என் தேகசுகத்தை இழந்தேன். அல்லாமலும், நான் விரைவில் இறந்து விடுவேனென்று அவன் கருதாமலிருந்தால் என்னை ஆயிரம் பவுனுக்கு இப்போது தங்களுக்கு விற்றிருக்கவே மாட்டான். இருப்பினும், பெருஞ்சிறப்பும் பெருந்தன்மையும் பேரழகும் வாய்ந்தவர்களும், உலகமெல்லாம் கண்டு பொறுமை கொள்ளும் உருவத்தினைப்பெற்றவர்களும், குடிகளுக்கெல்லாம் சதா சந்தோஷத்தையே விளைவிக்கும் தன்மையை உடையவர்களுமாயிராநின்ற மகாமகிமையினையுடைய மஹாராணியவர்களிடம் நான் வசித்திருந்தால் எனக்கு எவ்வித தீமையும் வாராமல் அவர்கள் என்னைப் பாதுகாப்பார்களென்று எண்ணியே நான் என் பழைய எஜமானனுகிய வேளாண்மைக்காரன் நினைத்த வண்ணம் மரணமடையேனென்று ஒருவாறு மனந்தேறி இருக்கின்றேன். இப்போதே எனக்கு மனவூக்கம் மிகுதியாக வந்துள்ளது. இதற்குக் காரணம் நான் நல்லோரிடத்தில் வந்துள்ளேனென்பதே.'' நான் பேசியது அக்கருத்துக்களை யுடையதாயிருந்தாலும் நான் தெளிவாக அவற்றைக் கூறவேண்டிய அறிவு அவர்கள் பாஷையில் எனக்கு உண்டாகவில்லை. ஆதலால், நான் மிகவும் தாமதமாக அதிக தடுமாற்றத்துடன் பதிலுரைத்தேன். எப்படியிருப்பினும், நான் இராஜாங்கத்திற் குரிய சில வார்த்தைகளும் கூறினேன். அவற்றை என் செவிலித் தாயாகிய

'கிளம்டால் கிளிச்' என்பவள் என்னை அரசன் அரண் மனைக்குக்கொண்டு வரும்போது எனக்குக் கற்றுக்கொடுத் தாள்.

நான் கூறியவற்றை யெல்லாங் கேட்டு மஹாராணி யவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். நான் பேசி யவற்றில் அநேக குற்றங்களிருந்த போதிலும் அவர்கள் என்னைப் போன்ற அவ்வளவு சிறிய ஜந்து எவ்வாறு யினும் பேசுந்தன்மையைப் பெற்றிருத்தல் மிகுதியும் வியக்கற்பாலதென்று கூறினார்கள். பின்னர், அவர்கள் என் னைத் தமது கரத்திலேந்திக் கொண்டு அரசர் இருக்கும் அறைக்குச் சென்றார்கள். சிறிது நேரத்திற்கு முன்னர்தான் அவர் தமது அறைக்கு வந்து அவகாசமாய் அமர்ந்து கொண்டிருந்தார். அவர் கம்பீரமான தோற்றமும் பயங் கரமான பார்வையும் உடையவர். அவர் என்னைக் கண்ட தும் தம் மனைவியை "எத்தனை நாளாக நீ ஸ்பிளாச்னக் ஜந்துவினிடத்தில் விருப்பங்கொண்டிருக்கிறாய்?" என்று சற்று வெகுண்டு வினவினார். ஏனெனில், அவர் என் உரு வத்தைச் சரியாகப் பாராததால் என்னை மேற்கூறிய ஜந்து வென்றே தாம் எண்ணிக்கொண்டார். நான் மஹாராணி யின் கரத்தில் கவிழ்ந்து படுத்துக்கொண்டிருந்ததும் அவர் அங்ஙனம் எண்ணியதற்கு ஓர் காரணமாம். மஹாராணிக் குத் தமாஷ் செய்வதில் அதிக பிரியமாதலால் அரசர் அவ் வாறு கூறியதைக் கேட்டதும், தாம் அவர் எதிரிலிருந்த ஒரு சிறிய எழுத்துப் பெட்டியின்மேல் என்னை நிற்க வைத்து, என் வரலாறு முழுமையும் என்னை அவருக்கு அறிவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டார்கள். நான் உடனே அங்ஙனமே செய்யலுற்றேன். அச்சமயம், என்

செவிலித்தாய் என்னைச் சிறுபோதும் விட்டுப்பிரிய மன மில்லாமல் அரசர் அறையின் கதவண்டை வந்து நின்று கொண்டிருந்தாள். மஹாராணியவர்கள் அவளைக் கண்டு தம்மருகில் வருப்படி அவளிடம் சந்தோஷமாகக் கூறினார் கள். அவள்வந்து நான் கூறியவற்றை யெல்லாம் அரச ருக்கு நிச்சயப் படுத்தினாள்.

அவ்வரசர் தமது தேசத்துக் கல்விமான்களைப் போல கல்வியறிவும், தத்துவ சாஸ்திரத்திலும் கணித சாஸ்திரத் திலும் வேறாக அதிக ஞானமும் பெற்றிருந்தார். ஆதலால், அவர் முதலில் என் உருவத்தின் அமைப்பையும் நான் நடந்த விதத்தையும் கண்டபோது, நுண்ணறிவு வாய்ந்த சில பெரியோர்களால் கண்டு பிடிக்கப்பட்ட நூதனமும் விசித்திரமும் உள்ள ஒரு கடிகாரமென்று என்னை எண் ணினார். அவர் தேசத்தில் கடிகார வகைகள் பலவிதமாகக் காணப்படும். கடிகாரம் செய்வதில் அந்நாட்டாரைப்போல் கீர்த்தி வாய்ந்தவர்கள் எந்நாட்டிலும் இருத்தல் அரிது. ஆதலால், அரசர் தமது நாட்டாராலும் செய்தற் கிய லாத அத்தன்மைய கடிகாரம் செய்யத் திறமை வாய்ந்த வன் வேறெந்நாட்டி லுளனோ என்று சிந்திக்கலானார். பின்னர் அவர் நான் உண்மையில் கடிகாரமல்ல, நானும் அவரைப் போன்ற அறிவுடைய மனிதன்தான் என்று நான் செய்த சில காரியங்களால் அறியலானதும் பெரிய தோர் வியப்பைக் கொண்டனர். அவர் என்னை மனித னென்று அறியலானதும், நான் கூறியவை ஒன்றும் சத்திய மல்ல வென்றும், என் பழைய எஜமானர் பொருள் தேடும் பொருட்டு என்னை எவரேனும் என் வரலாற் றைக் கேட்டால் அவ்விதமாகக் கூறும்படி எனக்குக் கற்பித்

திருந்தாரென்றும், சில அரிய வார்த்தைகள் நான் சொல்லும் படியான திறமைப் பெற்றிருப்பது புத்திநுட்பம் வாய்ந்த என் செவிலித்தாய் 'கிளம்டால் கிளிச்' என்பவளால் என்றும் ஆசங்கை கொள்ளலானார். ஆதலால், அவர் என்னை மேலும் பல திறட்பட்ட வினாக்களை வினவினார். நான் அவைகளுக்கெல்லாம் மனிதன் கொடுக்கும் விடைகளையே அளித்தேன். ஆனால், அவர்கள் பாஷையை மாத்திரம் நான் செவ்வையாய்ப் பேசவில்லை. ஏனெனில், நான் 'கிளம்டால்கிளிச்' என்பவளால் அவற்றையெல்லாம் அறிவிக்கப்படவில்லை

அச்சமயம் கல்வியறிவு மிகுதியாகப் பெற்றுள்ள புலவர்கள் மூவர் அரசா மாளிகையில் வந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் நகரில் வாரத்திற்கொரு முறை அப்புலவர்கள் அரசரை வந்து காண்பது வழக்கம். அரசர் அவர்களைத் தம்மிடம் அழைத்து வரும்படி ஒரு தூதுவனை அனுப்பினார். அவர்கள் வந்ததும், நான் என்ன ஜந்துவென்று அறிந்துசொல்லும் படி அவர் அப் புலவர்களைக் கேட்டார். உடனே, அவர்கள் மூவரும் என் உருவம், அவயவங்கள் முதலியவற்றை நன்குய்க் கவனித்துப் பார்த்து அவரவர் அறிவிற் கெட்டியவாறு என்னைப் பற்றி பலவித அபிப்பிராயங்கள் சொல்லலானார்கள். ஆனால், நான் சாதாரண ஒரு ஜந்துவைப் போலப் பாதுகாக்கப்பட வேண்டியதில்லை யென்றும், ஏனெனில் எனக்குச் சடுதியில் ஓடித் தப்பித்துக்கொள்ளும் சக்தியில்லை யென்றும், அல்லாமலும் மரங்களின்மேல் ஏறிக்கொள்ளவாவது பூமிக்குள் துவாரம் செய்து கொண்டு நுழைந்து விடவாவது என்னால் ஆகா

தென்றும், அப்புலவர்கள் மூவரும் ஒரே அபிப்பிராயங் கொண்டார்கள். பிறகு, அவர்கள் என் பற்களை மிகுந்த நுட்பமாகக் கவனித்து நான் மாமிசம் புசிக்கும் ஒருவித பிராணி யென்று கூறினார்கள். ஆனால், மிருகங்கள் எல்லாவற்றினும் நான் சிறியதா யிருப்பதால் நான் எந்தப் பிராணியைப் புசிக்கக் கூடுமென்று அவர்கள் சந்தேகங் கொண்டார்கள். பின்னர், அவர்கள் நெடுநேரம் ஆழ்ந்து சிந்தித்து நான் கொசுக்களையும் இன்னும் கண்ணுக்குத் தோன்றாத சில ஜந்துக்களையுமே பிரதான உணவாகக் கொண்டிருக்கவேண்டு மென்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். அப்புலவர்களில் ஒருவர் நான் ஏதோ ஒரு ஜந்துவினுடைய கருவாக இருத்தல் வேண்டுமென்றும், இல்லையேல் நான் பிறக்கவேண்டிய வேளைக்கு முன்னரே பிறந்திருத்தல் வேண்டுமென்றும் கூறினர். அதைக் கேட்ட ஏனைய இருபுலவர்களும் எனக்கு அவயவங்கள் அனைத்தும் செவ்வனே இருப்பதால் அப்புலவர் அங்ஙனங் கூறியது தப்பிதமென்று மொழிந்தார்கள். பின்னர், அவர்கள் பொருளைப் பெரிதாகக் காட்டும் கண்ணாடியைக் கொண்டு (Magnifying Glass) என் தாடியைச் சாலவும் பார்த்து நான் அநேக ஆண்டுகளாக உலகில் வசித்து வருகிறேனென்று கூறினார்கள். நான் மிருகமல்ல மனிதன் தான் ஆனால் பெருங்குள்ளனென்று கூறுவதற்கும் அப்புலவர்கள் கருதவில்லை. ஏனெனில், அந்த இராஜ்ஜிய முழுமையிலும் மஹாராணியினுடைய பிரிய குள்ளனைப் போன்ற சிறந்த மனிதன் கிடையாது. அம் மஹாராணி எங்கும் கிடைத்தற் கியலாத அக் குள்ளனை வேடிக்கைக் காகத் தமது அரண்மனையில் வைத்துக் காப்பாற்றி வந்

தார்கள். அக் குள்ளனே ஏறக்குறைய முப்பதடி உயர மிருந்தான். ஆதலால், கடைசியாக அவர்களெல்லோரும் என்னைப் பற்றி ஒன்றும் திடமாகச் சொல்லக் கூடாமல் இருந்தார்கள்.

நான் அதன் பின்னர் அரசரை நோக்கி, "அரசே! நான் கூறும் இரண்டொரு வார்த்தைகளையும் தாங்கள் கவனமாய்க் கேட்கும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றேன்," என்று கூறினேன். அரசர் அங்ஙனமே செய்யப் பிரியங் கொண்டார். ஆதலால், நான் அரசரிடம் கீழ்வருமாறு மொழியலுற்றேன். "என்னைப் போன்ற தேகவளவுடைய ஆண்பாலரும் பெண்பாலரும் ஆயிரக்கணக்காக நிறைந்துள்ள ஒரு தேசத்திலிருந்து நான் வந்திருக்கின்றேன். அத்தேசத்தில் மிருகங்களும், மரங்களும், வீடுகளும் அவ்வவற்றிற் கியைந்த அளவுடையனவாக இருக்கின்றன தங்கள் குடிகள் ஒவ்வொருவரும் தமது தேசத்தில் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையும் தமக்கு, உணவு தேடிக்கொள்ளும் திறமையும் வாய்க்கப் பெற்றிருப் பது போல நானும் அத்தேசத்தில் அவ்வாறு செய்து கொள்ளும் திறமை வாய்க்கப் பெற்றுள்ளேன."

நான் அவ்வாறு சொல்லியானதும், மேற் கூறிய புலவர் கள் அதற்கு எவ்வித அபிப்பிராயம் அரசருக்குச் சொல் லப் போகிறார்களென்று அவர்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் நான் கூறியவனைத்தும் பொய்ம் மையே என்றும், என் பழைய எஜமானராகிய வேளாண் மைக்காரன் எனக்கு அந்தப் பாடத்தை நன்கு கற்பித் திருக்கின்றானென்றும் அரசரிடம் ஏளனமாகக் கூறினார் கள். ஆனால், அரசர் அப்புலவரைக் காட்டினும் அறியுங்

திறமை அதிகமாகப் பெற்றிருந்தமையால் அவர் அவர்கள் கூறியதைக் கேட்டு வெகுளி கொண்டு, அவர்களைத் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேரும்படி கட்டளை யிட்டுப் பின்னர் அந்த வேளாண்மைக்காரனை உடனே தம்மிடம் அழைத்து வரும்படி ஒரு வேலைக்காரனை யனுப்பினார். அவ் வேளாண்மைக்காரனும் நல்ல காலம் அதுகாறும் அப் பட்டணத்தை விட்டு வெளிச் செல்லாம லிருந்தான். பின்னர், அரசர் அவ் வேளாண்மைக்காரனிடம் முதலில் ஏதோ சிலவற்றைத் தனியாகச் சிறிது நேரம் பேசிவிட்டுப் பிறகு என்னையும் என் செவிலித் தாயையும் தம் அருகில் வைத்துக் கொண்டு வேளாண்மைக்காரனிடம் மற்றும் சிறிது நேரம் சில விஷயங்களைக் குறித்துப் பேசினார். அதன் பிறகு அரசர் நாங்கள் கூறியவை யெல்லாம் உண்மை யாக விருக்கக் கூடுமென்று கருதி என்னை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும்படி மஹாராணிக்குக் கட்டளையிட்டார். மேலும் என் செவிலித் தாயையும் எனனுடனே அரண்மனை யிலிருக்கும்படி ஆக்ஞாபித்தார். ஏனெனில், நானும் என் செவிலித்தாயும் ஒருவர்பால் ஒருவர் எவ்வளவு அன்பு பாராட்டுகின்றோ மென்பதை அவர் சாலவும் அறிந்து கொண்டார்.

பிறகு என் செவிலித் தாய்க்குப் பிரத்தியேகமாக ஓர் அறை விடப்பட்டது. அவளது கல்வியறிவை விருத்தி செய்வதற்குக் கல்வி ஞானம் நிரம்பியுள்ள ஓர் மகளிர் அவளுக்கு ஆசிரியளாக நியமிக்கப்பட்டாள். அல்லாமலும், அவளுக்கு உடையணிவதற்கு ஒரு தோழியும், வேறு பணிகள் செய்வதற்கு இரண்டு வேலைக்காரிகளும் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், அவளது கடமை என்னைப் பாது

காக்கவேண்டியது ஒன்றே யென்று அரசர் அவளிடம் கூறினர் ; ஆகவே அவள் எனக்கு எல்லாவித பணிகளும் செய்பவளானள். மஹாராணியவர்கள் தமக்கு நகைப் பெட்டி செய்து கொடுக்கும் வேலைக்காரனை வரவழைத்து அவனை என் படுக்கைக்குப் போதுமான ஒரு பெட்டி செய்து கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள். பிறகு, அவர்கள் அவ் வேலைக்காரனைத் தான் பெட்டி செய்து முடிப்பதற்கு முன்னர் நானும் என் செவிலித்தாயும் இருக்குமிடம் வந்து எங்கள் அனுமதி பெற்றுக்கொண்டு போகுமாறு ஆக்ஞாபித்தார்கள். அவ் வேலைக்காரன் அத்தொழி லில் அதிக திறமை வாய்க்கப் பெற்றிருந்தான். அரசன் அவனுக்கு அறிவித்த வண்ணமே அவன் மூன்று வாரங்களானதும் ஒருவித விசித்திரமான பெட்டி செய்து முடித்து அதனை எங்களிடம் எடுத்துக்கொண்டு வந்தான். அப் பெட்டகம் பதினறடி அகலமும் பன்னிரண்டடி உயரமும் உடையதாய்,சட்டப் பலகணிகள் சில வைக்கப்பெற்று ஓர் கதவும் இரண்டு உள்ளறைகளும் அமைக்கப்பட்டு,லண்டன் மாநகரத்திலுள்ள ஓர் படுக்கை யறையைப் போலவே யிருந்தது. அதன் மேல்மூடி எளிதாகத் திறக்கப் படுவதற்கும் மூடப்படுவதற்கும் அதில் இரண்டு கீல்கள் வைக்கப்பட்டிருந்தன. என் படுக்கைமெத்தைத் தினந்தோறுஞ் சுத்தஞ் செய்யப்படுவதற்கும்அதனுள்ளே எனக்கு மெத்தைப்போடுவதற்கும், பின்னர் சுத்தஞ் செய்வதற்காக மெத்தையை வெளியே எடுப்பதற்கும், அப் பெட்டகத்தின் மேல்மூடி சுலபமாக மூடவும் திறக்கவும் அமைக்கப் பட்டிருந்தது. என் மெத்தையைத் தினந்தோறும் என் செவிலித்தாய் தானே வெளியே எடுத்து அதனைச் சுத்திசெய்து பிறகு

காற்றில் வைத்து வைப்பாள். இரவு வந்ததும், அவள் அதனைப் பெட்டகத்தில் போட்டு விட்டுப் பின்னர் நான் படுத்துக் கொண்டதும் அதன் மேல்மூடியை நன்றாய் மூடி விடுவாள். வேடிக்கையான சில்லறைச் சாமான்கள் செய்வதில் மிகவும் கீர்த்தி பெற்றிருந்த ஓர் வேலைக்காரன் எனக்கு இரண்டு நாற்காலிகள் பின்புறத்தில் சாய்மானம் வைத்து, நான் சிறிய சாமான்கள் வைத்துக்கொள்ளும் நிமித்தம் ஓர் அறையும் வைத்து இரண்டு மேஜைகள் செய்து அரசர் கட்டளையிட்டவாறே எங்களிடம் கொண்டு வந்தான். அவைகள் யானைத் தந்தத்தைப் போன்ற ஒருவித பொருளால் செய்யப் பட்டிருந்தன.

என்னை எவரேனும் அஜாக்கிரதையாக எடுத்தால் நான் அப்போது கீழே விழுந்து விடுவேனாயின் பெரிய தீமையை யடைவே னென்று என் அறையினது எல்லாப் பக்கங்களிலும், தரையிலும் மெத்தைத் தைக்கும்படி ஏற்பாடுசெய்யப்பட்டது. மேலும், அங்ஙனம் செய்யாமற் போனால் நான் குதிரை வண்டியில் ஏறுகையில் அது குலுங்க நேரிடின் நான் தரையில் விழுந்து துன்பத்தை யெய்துவே னென்று நான் ஈண்டுச் சொல்லவேண்டுவதில்லை. பின்னர், நான் எலிகளுக்கும், சுண்டெலிகளுக்கும் மிகவும் அஞ்சினவனாய் என் அறைக்கு ஒரு பூட்டுச் செய்து கொடுக்கும்படி அரசரை வேண்டிக்கொண்டேன். கம்மாளன் பன்முறைசெய்து பார்த்துக் கடைசியில், அத்தேசத்தில் காண்பதற் கரிய ஒரு சிறிய பூட்டுச் செய்து கொண்டு வந்தான். அது மிகச் சிறியதே யாயினும் நான் அதைக் காட்டிலும் பெருத்த ஒரு பூட்டு இங்கிலாந்தில் ஒரு பிரபுவின் வீட்டின் கதவில் போடப்பட் டிருந்ததைக் கண்ணுற்

திருந்தேன். என் பூட்டுக்குச் செய்து கொடுத்த சாவியை நான் என் செவிலித் தாயினிடம் கொடுக்காமல் நானே வைத்துக் கொள்ளும்படியான ஓர் தந்திரஞ் செய்து கொண்டேன். ஏனெனில், அவள் எவ்வளவு ஜாக்கிரதை யாயிருந்த போதிலும் அதைத் தொலைத்து விடுவாளென்று நான் மிகவும் அச்சங்கொண்டேன். மஹாராணியவர்கள் எனக்கு உடைகள் வைப்பதற்காக அந் நாட்டில் கிடைக்கக் கூடிய மிகவும் மிருதுவான பட்டு நூல்கள் வரவழைத்தார் கள். அவற்றைக் கொண்டு இங்கிலாந்து தேசத்துக் கம் பளத்தைக் காட்டினும் அதிக முருடில்லாதவுடைகள் எனக் காகத் தைக்கப்பட்டன. அவ் வுடைகள் அத் தேசத்து வழக்கத்திற்குத் தகுந்தாற்போலப் பாதி பெர்ஷியா தேசத் தார் உடையைப் போன்றும் பாதி சைன தேசத்தார் உடையைப் போன்றும் ஒருவிதமாக விருந்தன. அஃது ஆழ்ந்த கருத்துடன் அந் நாட்டாரால் செய்து கொள்ளப் பட்ட ஒருவித நற்பழக்க மென்றே நான் எண்ணிக்கொண் டேன் நான் மேற்கூறிய வுடைகளை முதலில் அணிந்து கொண்டபோது அவைகள் எனக்கு மிகவும் கனமாக விருந்தன. பின்னர், பழக்கமாகவாக அந்தப் பாரம் எனக் குத் தெரியாமற் போய்விட்டது.

மஹாராணியவர்கள் என்னுடன் சதா இருப்பதில் அதிக பிரியங்கொண் டிருந்ததால் அவ் வம்மணி என்னை விட்டு ஒருபோதும் போஜனம் செய்வதில்லை. ஆகையால், அவர்கள் தமது போஜன மேஜையின்மேல் எனது போஜ னமேஜையையும், நாற்காலியையும் தமது முழங்கைக்கு அருகே போடும்படி ஏற்பாடு செய்வது வழக்கம். என் செவிலித்தாய் எனக்கு வேண்டுவன வெல்லாம் அளிக்கும்

பொருட்டு என் பக்கத்தில் பூமியில் ஒரு ஆசனபீடம் (Stool) போட்டு அதன்மேல் நின்று கொண்டிருப்பாள். நான் போஜனஞ் செய்வதற்கு வேண்டிய தட்டுகளும், பாத்திரங்களும், மற்றும் சில இன்றியமைபாச் சாமான்களும் வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தன. அவற்றை அத்தேசத்துப் போஜன பாத்திரங்களோடு ஒத்திட்டுப் பார்த்த போது அவை யனைத்தும் லண்டன்மா நகரத்தில் பொம்மைக் கடையில் குழந்தைகள் விளையாடுவதற்காக விற்கப்படும் விநோதமான சில்லறைச்சாமான்களைப்போலக் காணப்பட்டன. அவைகளை ஒரு வெள்ளிப் பெட்டியில் வைத்து அப் பெட்டியை என் செவிலித்தாய் தன் சட்டைப் பையில் (Pocket) போட்டுக் கொள்வாள். நான் சாப்பிடும் போதெல்லாம் அவள் அவைகளை எடுத்துச் சுத்திசெய்து பின்னர் என்னிடம் வைப்பாள். மஹாராணியவர்களுடன் தம் இரண்டு குமாரத்திகள் தவிர வேறெவரும் போஜனம் செய்வதில்லை. அத்தருணத்தில், மூத்த குமாரத்திக்குச் சரியாக பதினாறு பிராயமும், இளைய குமாரத்திக்குப் பதின்மூன்று பிராயமும் ஒரு மாதமும் ஆகியிருந்தன. மஹாராணியவர்கள் ஒரு துண்டு மாமிசத்தை யெடுத்து என் தட்டுகளில் ஒன்றில் வைப்பார்கள். நான் அதை அநேக சிறு துண்டுகளாக்கிப் பின்னர் அவற்றை யொன்றொன்றாகப் புசிக்கத் தொடங்குவேன். நான் அங்ஙனம் துண்டுகளாக்கிப் புசிப்பது மஹாராணியவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியினை விளைவிக்கும். அதை ஒரு பெரிய விளையாட்டாகவே அவ்வம்மணி வைத்துக் கொண்டார்கள். நம் கிராமவாசிகள் பன்னிரண்டு பேர் ஒரு வேளையில் புசிக்கும் உணவு அனைத்தும், அம் மஹாராணியவர்கள் ஒரு

வாய் உணவுக்குத் தகுந்தனவா யிருக்கும். ஆகவே, அவர்கள் சாப்பிடும் போது எனக்கு அவர்களைக் காண்பதற்கு அநேக நாள் வரையில் மிகுந்த அருவருப்பாயிருந்தது அவர்கள் வயிறு நாம் ஒரு வாரம் முழுமையும் புசிக்கும் உணவை ஒரு வேளையில் கொள்ளும்.

அம் மஹாராணியவர்கள் ஒரு வானம்பாடியினது எலும்புகள், அவயவங்கள், சிறகு முழுமையும் கடித்துத் தின்று விடுவார்கள். அவ் வானம்பாடியே, நமது தேசத்தில் நன்றாய்க் கொழுத்து மிகுந்த வுயரம் வளர்ந்திருக்கும் ஓர் வான்கோழியைக் காட்டிலும் ஒன்பது மடங்கு வுயரமும் பருமனும் இருக்கும் அவர்கள் ஒரு வாய்க்குச் சாப்பிடும் ரொட்டித்துண்டு ஒன்று நாம் பன்னிரண்டணு கொடுத்து வாங்கும் பெரியரொட்டி இரண்டின் பருமனிருக்கும். அவர்கள் பொற்கோப்பையில் ஒரு வாய்க்குக் குடிக்கும் ஒயின் $52\frac{1}{2}$ காலனளவுடைய ஒரு பெரிய பீப்பா நிறையவுள்ள வொயின் இருக்கும். அவர்கள் போஜனத்திற்காக வுபயோகப்படுத்தும் கத்திகள் ஒவ்வொன்றும் நமது தேசத்துப் பெரிய வெட்டரிவாள் இரண்டின் நீளமிருக்கும். ஆனால், அவைகள் வளைவில்லாமல் நேராக பிடிபோடப்பட் டிருக்கும். கரண்டி, கவர்முட் கருவி, இன்னும் இன்றியமையாச் சில கருவிகளும் அதே அளவினையுடையவையா யிருக்கும். ஒரு நாள் என் செவிலித்தாய் எனக்கு வேடிக்கை நிமித்தமாக அரண்மனையிலுள்ள சில மேஜைகளைக் காண்பிக்க என்னை ஆண்டெடுத்துக் கொண்டுபோன போது நான் அம் மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த கத்திகளையும், கவர்முட் கருவிகளையும் கண்ணுற்றுப் பயங்கர மெய்தினே னென்பதை ஈண்டு வரைய வேண்டுவதில்லை.

அத்தேசத்தார் புதன்கிழமையைத் தான் கடவுளைத் தொழுவதற்கு முக்கிய தினமாக வைத்துக் கொண்டிருக்கிறார்களென்று நான் முன்னர் அறிவித்தேனல்லவா? புதன்கிழமைதோறும் அரசர், அரசி, அரச குமாரர்கள், அரச குமாரத்திகள் முதலியவர்களோடு நான் போஜனஞ் செய்யும்படியான பெருமையினைப் பெற்றிருந்தேன். அத்தினங்களில் என சிறிய நாற்காலியும், மேஜையும் அரசரது இடது புறத்தில் ஒரு உப்புப்பாத்திரத்தின் (Saltcellar) முன் போடப்பட்டிருக்கும். என்னிடத்தில் அரசர் முதலிய வனைவருக்கும் மொத்தத்தில் அதிக பிரிய மிருந்தபோதிலும் அத் தினங்களில் மாத்திரம் என்னிடத்தில் அதிக சந்தோஷமாகச் சம்பாஷணை செய்பவர் அரசரொருவரே. மேற்கூறிய நாங்களனைவரும் ஒரு புதன்கிழமை ஒன்றாகப் போஜனஞ் செய்துகொண் டிருக்கையில் அவ்வரசர் என்னிடத்தில் நமது நாட்டுவழக்கம், நடக்கை, மதம், சட்டங்கள், அரசாட்சி, கல்வி முதலிய விஷயங்களைக் குறித்துப் பேசத்தொடங்கினர் அவை சம்பந்தமாக அவர் என்னை வினவிய வினாக்களுக் கெல்லாம் நான் என்னால் இயன்ற வரையில் தெளிவாக விடைகள் அளித்தேன். அவர் உண்மை யறிவதில் மிகுந்த திறமை பெற்றிருந்தமையாலும், தாம் செய்யும் தீர்மானங்க ளனைத்தும் சரியானவையா யிருந்தமையாலும், நான் கூறிய ஒவ்வொரு விஷயத்தையும் வெகு நுட்பமாகச் சிந்தித்தார்.

நான் என் பிரிய முள்ள நமது தேசத்தைக் குறித்தும், பூமியிலும் சமுத்திரத்திலும் நடந்த போர்கள், வியாபாரம், சமய பேதங்கள், இராஜாங்கத்தின் பிரிவுகள்

முதலியவைகளைக் குறித்தும் மிகுதியாகப் பேசிய போது, அந்த வரசர் என்னைத் தமது வலது கரத்தால் எடுத்து, இடதுகரத்தால் எனது தேகத்தை மெதுவாகத் தடவிக் கொடுத்துப் பின்னர் கொல்லென்று நகைத்து, நான், விக் (Whig) பக்கத்தாரைச் சார்ந்தவனா அல்லது டோரி (Tory) பக்கத்தாரைச் சார்ந்தவனாவென்று என்னை வினவினார். (விக், டோரி என்பன ஒரே தேசத்திலிருக்கும் மதவேற்றுமையுள்ள இருதிறத்தார்களின் பெயர்களாம்)

பின்னர் அவ்வரசர் தமது பின்புறத்தில் கரத்தில் வெண்தடியோடு நின்று கொண்டிருந்த பிரதான வமைச்சரை நோக்கி, "மந்திரி! இச்சிறுமனிதப் பூச்சி (கலிவர்) இதுகாறும் கூறியவை யனைத்தையும் செவியுறக் கேட்டனையா? ஆஹா! என்ன ஆச்சரியம்! மக்கள் மகத்துவம் எவ்வளவு பெரியதா யிருப்பினும் அவர்கள் இவனைப் போன்ற மனிதப் பூச்சிகளா லன்றோ இகழப்படுந் தன்மையைப் பெற்றவர்களா யிருக்கின்றார்கள். மேலும் இவன் தேசத்து மனிதப் பூச்சிகளுக்குள்ளும் பெரிய பட்டப் பெயர்களும் கௌரவங்களும் இருக்கின்றனவாம். இவர்கள் சிறு கூடுகளையும் வளைகளையும் செய்து கொண்டு அவற்றை முறையே மனைகளென்றும் நகரங்களென்றும் அன்றோ கூறி மனமகிழ்கின்றார்கள். அவர்களும் ஓர் உருவமாக ஆடை யாபரணங்களும் அணிந்து கொள்ளுகின்றார்க ளல்லவா? அன்றியும், அவர்கள் காதல் கொள்ளுதலும், போர் நிகழ்த்துதலும், வாதம் பண்ணுதலும், வேடிக்கையாய்ப் பேசுதலும், வஞ்சனை புரிதலும் முதலாய பல தொழில்களையும் தம்பால் உள்ளவரா யிருக்கின்றார்க

ளல்லவா?" என்று இவ்வாறுக அவ்வரசர் நம்மைக் குறித்து மேலும் மேலும் பேசிக்கொண்டு போனர்.

அவர் அங்ஙன மெல்லாம் பேசிய போது எனக்குத் தீராக் கோப முண்டாயிற்று; என் மீசை துடி துடித்தது; என்முகம் செந்நிற மடைந்தது. என் தேகம் பதை பதைத்தது. என்னையெனின், எல்லாத் தேசங்களுக்கும் நாயகமாய், அறிவு நுட்பமுள்ள வேலைகள் பலவற்றையும் செய்வதில் சகல நாடுகளுக்கும் தாயகமாய், பிரான்சு தேசத்திற்கு என்ஞான்றும் தொல்லை யளிப்பதாய், ஐரோப்பா கண்டம் முழுமைக்கும் நடுநிலை பிறழாமல் மத்தியஸ்தம் செய்வதாய், தர்மம், தெய்வபக்தி, புகழ், வாய்மை முதலிய வற்றிற்கு இருப்பிடமாய், வையகம் முழுமையும் கண்டு பொறாமை கொள்ளுதற்குக் காரணமாய் இராநின்ற பெருஞ் சிறப்பினைத் தன் மாட்டுள்ள நமது அருமை நாடாகிய இங்கிலாந்தும் அந்நிய நாட்டா னொருவனால் அவ்வாறெல்லாம் இகழப்பட்ட தென்றால், ஆஹா! என் மனம் அவற்றையும் செவியுறக் கேட்டுச் சகித்திருக்குமா? ஆயினும், அந்தோ! அந்தோ! அங்ஙனம் பேசிய அவ்வரசனை நான் யாது செய்யவல்லேன். ஆதலால், நான் மனம் பொறுத்து என் திறமின்மையைக் குறித்துச் சிந்தையுடைந்து எல்லாம் வல்ல இறைவனை நினைந்து, மிகத் துன்புறுவே னாயினேன்.

நான் அரசர்மீது கோபங் கொள்ளுதலில் பயனொன்று மின்மையால் அவர் கூறியவை என்னை மாத்திரம் எவ்வளவு தூரம் வருத்தினதென்று சிறுபோது சிந்திக்கலானேன். நான் அநேக தினங்களாக அவர் தேசத்து மனிதர்களைக் கண்ணுற்று வந்தமையாலும்

அவர்களில் அநேகரிடம் சம்பாஷணை புரிந்திருந்தமை யாலும், பின்னர் அத்தேசத்துப் பொருள்கள் அனைத் தும் அவ்வவற்றிற் குரிய அளவினையே உடையனவாக எனக்குத் தோன்றின. ஆதலால், நான் முதலில் அத்தே சத்து மனிதர்களின் தோற்றத்தையும், உருவத்தையும் கண்டு அஞ்சினாற்போலப் பின்னர் அஞ்சவில்லை. இங்கி லாந்து தேசத்துப் பிரபுக்களும் அவர் மனைவிமார்களும் பலவிதமாகத் தங்கள் தேகத்தை யலங்கரித்துக் கொண்டு தாங்கள் பிறந்த நாளில் அணிந்துகொள்ளும் உயர்ந்த உடுப்பையும் தரித்துக்கொண்டு அனைவரும் ஒருங்கு கூடித் தங்கள் உயர்ந்த தன்மைக்குத் தகுந்தவாறு பலவித யாடல்கள் ஆடுவதை நான் தற்சமயம் கண்ணுறுவேனாயி னேன். நான் வந்துள்ள தேசத்து அரசரும், அவருடனிரு ந்த பிரபுக்களும் என்னைக் கண்டு எவ்வளவு நகையாடி னார்களோ அவ்வளவு நானும் நகையாடுவே னென்பது திண்ணமே. மஹாராணியவர்கள் என்னைத் தமது கரத்தில் வைத்துக்கொண்டு ஒரு நிலைக்கண்ணாடியில் தமது வத னத்தை நோக்கிய ஞான்றெல்லாம் என் உருவமும் அவ்வம்மையின் உருவமும் அதன்கண் ஒருங்கே தோன் றினமையால், நான் அவை யிரண்டினையுங் கண்டு எனக் குள்ளே நான் கொண்ட நகைப்பு இப்பெற்றித்தாய தென்று நான் உரைக்கற்பாலதன்று. எங்கள் இருவர் தேகத்தையும் ஒப்புவமை செய்யின் அதைக் காட்டினும் ஒருவர் எள்ளி நகையாடல் செய்யும் செயல் வேறில்லை யென்பதுதானே போதரும். அப்போது என் தேகத்தின் உண்மையளவும் பன்மடங்கு குறைந்து விட்டது போல் நான் எண்ணிக்கொண்டேன்.

நான் மஹாராணி யவர்களிட மிருந்த குள்ளனைக் (Dwarf) கண்டபோது எனக்கு அவன் மீது உண்டாகிய கோபத்தைப்போலவும் என் மனத்தின்கண் உண்டாகிய வருத்தத்தைப் போலவும், அதற்கு முன்னர் எப்போதும் எனக்கு அவ்வளவு கோபமும் வருத்தமும் உண்டானதில்லை. அக் குள்ளன் அத்தேசத்திலுள்ள மனிதர் எல்லாரைக் காட்டினும் மிகவும் சிறியவனாக இருந்தான். ஏனெனில், அவன் உண்மையில் சரியாக முப்பதடி உயரமிருக்கவில்லை. அவன் என்னைப் பார்க்குந்தோறும் தான் என்னைக் காட்டினும் பன்மடங்கு பெரியவனாக விருப்பதை நோக்கி மிகவும் இறுமாந்து தான் இன்னும் பெரியவனாகப் பாவனைசெய்து எனக்குத் தன் முகத்தையும வாயையும் காட்டி என்னை ஏளனஞ் செய்வான். அன்றியும், நான் உயர்ந்த பிரபுக்களிடத்திலும், பெண்களிடத்திலும் பேசிக்கொண்டிருக்கும் போது அக்குள்ளன் அவர்களெதிரில் வந்து என் சிறு உருவத்தைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லாமலிரான். நான் அவனுக்குப் பிரதிதீமை செய்ததாவது:—நான் அவனை நோக்கி "அடே, அண்ணா! வாடா! நாம் இருவரும் குத்துச் சண்டையிடலாம். யார் வெற்றி பெறுகிறார்கள் பார்ப்போம். என்னமோ நீ உன்னையே பெருமையாகப் பேசிக் கொள்ளுகிறாய்" என்றிவ்வாறு அவனிடம் கூறினதேயாம். பின்னை நான் அவனை வேறென்ன செய்ய இயலும்?

ஒரு நாள் நான் பகற்போஜனஞ் செய்துகொண்டிருக்கையில் மேற்கூறிய குள்ளன் நான் கூறியவற்றுள் ஏதோ ஒன்றைக் கவனம் வைத்துக்கொண்டு என்

னிடம் வந்து சிறிது நேரம் என்னைப் பார்த்துப் பிறகு மஹாராணி யவர்களின் நாற்காலியின்மேல் ஏறி நின்று கொண்டு, என்னை மெதுவாகத தனது கையாலெடுத்து, அருகில் பால் நிறைந்துள்ள ஒரு வெள்ளிப் பாத்திரத் தில் போட்டுவிட்டு ஒட்டமாய் ஓடிவிட்டான். நான் அப்போது அப் பாத்திரத்தில் கவிழ்ந்தபடியே விழுந் தேன். நான் மாத்திரம் செவ்வனே நீந்தக் கற்றுக் கொண்டில்லாம லிருப்பேனாயின் அத் தருணத்தில் நான் நிச்சயமாய் மரணமடைந் திருப்பேனென்று நான் கூறவேண்டிய தில்லை. ஆனால், என் நல்ல காலம் என் செவிலித் தாயானவள் அச்சமயத்தில் நானிருந்த அறை யிலேயே ஒரு பக்கத்தி லிருந்தமையால் எனக்கு விளைந்த வாபத்தைக் கண்டு என்னிடம் ஓடோடியும் வந்து, என்னை மேற்கூறிய பாத்திரத்தினின்றும் விரைவில் வெளியே எடுத்தாள். நான் அப்போது என் வயிறு நிறையப் பால் பருகி விட்டு ஒன்றும் பேசமாட்டாமல் மிகுந்த திகைப்புற்றிருந்தேன். என் செவிலித்தாயான வள் பின்னர் என்னைப் படுக்க வைத்துத் தகுந்த சௌகரி யங்கள் பல எனக்குச் செய்தாள். ஆனாலும் அவ்வம யம் என் உடைகள் மாத்திரம் நனைந்துபட்டனவே யன்றி பிறிதொரு தீமையும் எனக்கு விளையவில்லை. நிற்க, மஹா ராணியவர்கள் நான் பாத்திரத்தில் விழுந்திருந்தபோது தாமும் என் செவிலித்தாயுடன் இருக்க, எனக்கு விளைந்த தீமையைக் கேள்வியுற்று மிகுந்த பயமடைந்து தமது புத்தி சுவாதீனத்தையும் சிறுபோது இழந்தார்கள். ஆதலால், அவர்கள் எனக்கு அச்சமயம் வேண்டிய உதவி யொன்றும் செய்யத் தோன்றாமல் இருந்தார்கள். பின்னர்,

மஹாராணியவர்கள் எனக்குத் தீமை செய்த குள்ளனைத் தான் செய்த குற்றத்திற்காக அவனை நன்றாய்ச் சவுக்காலடிக் கும்படி கட்டளையிட்டார்கள். அஃதன்றியும், அவனையே அப்பாத்திரத்தில் இருந்த பாலனைத்தையும் பருகும்படி செய்து, பின்னர் மஹாராணியவர்கள் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல் தமது அரண்மனையிலுள்ள ஒரு நற்குணம் வாய்ந்த பெண்மணியினிடம் கொடுத்துவிட்டார்கள். அதைக் கண்டு நான் அதிக மகிழ்ச்சி யெய்தினேன். அப்போது என்னால் தனக்கு நேர்ந்த தீமைக்காக அத்துஷ்ட குள்ளப் பயல் என்மீது எவ்வளவு கோபங்கொண்டானென்று என்னால் சொல்ல முடியாது.

பின்னர் ஒருசமயம் மஹாராணியவர்கள் தாம் போஜனம் செய்யும்போது மச்சையெலும்பு (Marrow bone) வொன்றையெடுத்து அதிலுள்ளிருந்த மூளையைப் புசித்தானதும், எலும்பை மாத்திரம் ஒரு தட்டில் வைத்துவிட்டு ஏதோ காரியமாக அவ்விடத்தை விட்டுச் சென்றிருந்தார்கள். நான் போஜனஞ் செய்கையில் எனக்கு வேண்டியவற்றை யளிக்கும்பொருட்டு என் அருகில் நின்றுகொண்டிருந்த செவிலித்தாயும் அச்சமயம் ஏதோ காரணமாக என்னைவிட்டு நீங்கியிருந்தாள். அப்போது மேற்கூறிய குள்ளன் தனக்கு நல்லசமயம் வாய்த்ததென்று கருதி என்னிடம் ஓடிவந்து என் இருகால்களையும் தனது இரு கரங்களாலெடுத்துப் பின்னர் என் கால்களிரண்டினையும் நசுக்கி மஹாராணியவர்கள் வைத்துவிட்டுப் போன எலும்பின் துவாரத்தில் என்னை என் இடுப்பு வரையில் நுழைத்துவிட்டான். நான் அப்போது கண்டார் ஏளனஞ் செய்யும் நிலையில் சிறிது நேரம் நின்றுகொண் டிருந்

தேன். ஒரு நிமிடம் வரையில் நான என்ன கதியானே னென்று ஒருவரும் அறியவில்லை. அன்றியும், நான் எவரை யும் கூச்சலிட்டு அழைப்பதற்கும் மனம் இசையவில்லை ஏனெனில், நான் அங்ஙனம் செய்தல் என் நிலைமைக்கு மிகுந்த தாழ்மையாக எனக்குத் தோன்றிற்று. ஆனல் மஹாராணியவர்கள் மாமிசத்தைச் சுடுகையாய்ப் புசிப்ப தின்மையால் அவ்வெலும்புக்குள் அகப்பட்டிருந்த என் கால்கள் சுடவில்லை. இருப்பினும், என் கால் சட்டைகள் மாத்திரம் சிறிது பழுதாய்விட்டன. அத்துஷ்ட செயலைச் செய்த அத்திருட்டுக்குள்ளனை மஹாராணியவர்கள் மிகுந்த கொடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கூறிய போதி லும் அவ்வாறு அவர்கள் செய்தல் கூடாதென்று நான் அவர்களை மிகவும் இரந்து வேண்டிக்கொண்டதன்மேல் அவனை அம்முறையும் செவ்வையாய்ச் சவுக்கா லடிக்க மாத்திரம் ஏற்பாடுசெய்தார்கள்.

அக்குள்ளனைப் பற்றி நான் கொண்ட அபாயத்தைக் குறித்து மஹாராணியவர்கள் என்னை அடிக்கடி ஏளனஞ் செய்தார்கள். அன்றியும் அவர்கள் நமது தேசத்து மனி தர்களனைவரும் என்னைப் போன்ற பெருத்த பயங்காளிகள் தானேவென்று வினவினார்கள். அத்தேசத்தில் கோடை காலங்களில் ஈக்கள் மிகுதியாக யாண்டும் தோன்றி அதி லுள்ள மாந்தர்க்குப் பெருந்தொல்லை விளைவிக்கும். எவரும் கண்டு அருவருக்கத்தக்க அந்த ஜந்துக்கள் ஒவ்வொன்றும் நமது நாட்டின்கண் இருக்கும் ஒரு வானம்பாடியின் அள வினை யுடையதாக இருந்தன. அவை நான் உணவு புசிக்கையி லெல்லாம் என்னை ஒரு நிமிஷமும் சும்மா விருக்க விடவில்லை. ஏனெனில், அவற்றில் அநேகம் ஒருங்கே ரீங்காரம் செய்து

கொண்டு என் அண்மையில் பறந்ததால் அந்தச் சந்தடி என் இரு செவிகளையும் செவிடாக்கின; எனவே, நான் என் சிந்தையை ஒரு நிலையில் நிறுத்தி உணவு புசிக்க என்னால் சிறிதும் இயலாமற் போயிற்று. சில வேளைகளில் அவற்றுள் சில என் உணவின்மேல் தங்கி அதன் கண் தமது அருவருக்கத்தக்க முட்டைகளை இட்டுவிட்டுச் சென்றன. அம் முட்டைகள் என் கண்களுக்கு நன்றாய்த் தெரிந்தன. ஆனால் அவை அத்தேசத்து மக்கள் கண்களுக்கு மாத்திரம் தெரியவில்லை. என்னையெனின், அவர்கள் கண்கள் நம்மவற்றைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரியனவா யிருப்பினும் சிறுபொருளைக் கண்ணுறுவதற்குரிய நுட்ப பார்வை அவைகளுக்கு இருக்கவில்லை. மற்றும் சிலவேளைகளில் இரண்டொரு ஈக்கள் என் நாசியின்மீதும் நெற்றியின்மீதும் வந்துட்கார்ந்து எனக்குத் துர்நாற்றத்தைக் கொடுத்து, பிறகு என்னைத் தமது கொடுக்குகளால் கொட்டிவிட்டு ஓடிப்போயின. நமது தாபரஜங்கம சாஸ்திரிகள் (Naturalist) ஈக்கள் நிமிர்ந்து நடப்பதற்கேதுவாக அவைகளிடத்து ஒருவித பசையுள்ள பொருள் உளவாயிருப்பதாகக் கூறுகின்ற அதனை நான் அத்தேசத்து ஈக்களிடத்திருந்ததைக் கண்ணுற்றேன். அந்த ஈக்களிடத்தினின்று தப்பித்துக் கொள்ள நான் அதிக கஷ்ட மடைந்தேன். அவை என் முகத்தி னருகே வரும்போதெல்லாம் நான் திடுக்கென என் இருக்கையை விட்டு எழுந்துவிடுவேன். மஹாராணியவர்கள் களிப்புறுவதற்கும் நான் பயங்கொள்ளுவதற்கும் மேற்கூறிய குள்ளன் நமது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் செய்வதுபோல அந்த ஈக்களில் சிலவற்றைப் பிடித்து என் நாசிக்குள் விட்டுவிடுவான். அப்போது அவை

தப்பித்துக்கொண்டு வெளியே பறந்தோடுகையில், நான் அவைகளை என் கத்தியினால் துண்டுதுண்டாக அறுத்துத் தள்ளி என் ஆபத்தைத் தவிர்த்துக்கொள்வேன். அத்தொழிலில் எனக்கு வாய்த்திருந்த வன்மையைக் குறித்து யாவரும் வியந்து பேசினர்கள்.

ஒரு நாட் காலையில் என் செவிலித்தாய் நான் நற்காற்றை யுட்கொள்ளும் பொருட்டு நான் இருந்தபடியே என் படுக்கை யறையாகிய பெட்டியை எடுத்து ஜன்னலின் அருகே வைத்தாள். நான் அப்போது எனது அறையின் சட்டப் பலகணிகளி லொன்றைத் திறந்து விட்டுப் பின் இனிமையான அப்பத்துண் டொன்றைப் புசிக்கத்தொடங்கினேன். அறுபதுக்கு மேற்பட்ட வண்டுகள் அதன் வாசனையை நுகர்ந்து கொண்டு பெரிய ரீங்கார சப்தத்துடன் என் அறைக்குள் பறந்து வந்தன. பின்னர், அவற்றில் சில என் அப்பத் துண்டைச் சிறிது சிறிதாக எடுத்துக் கொண்டு சென்றன. மற்றவை என் முகத்தினருகிலும், சென்னியினருகிலும் வந்து பெரிய சந்தடி செய்து கொண்டு என் சிந்தையைக் கலக்கின. நான் அவற்றின் கொடுக்குகளைக் கண்டு மிகுந்த அச்சத்தினை யடைந்தேன். இருப்பினும், நான் தைரியமாய் உடனே எழுந்திருந்து என் கத்தியை உருவிக்கொண்டு அவற்றில் நான்கைக் கொன்று விட்டேன். மற்றவை தப்பித்துக் கொண்டு ஓடிப்போயின. நான், பின்னர் என் அறையின் பல கணிகையை நன்ருய் மூடிவிட்டேன். அவ்வண்டுகள் நமது தேசத்துக் கவுதாரிப் பறவைகளின் பருமனிருந்தன. கொல்லப்பட்ட வண்டுகள் நான்கின் கொடுக்குகளையும் நான் பத்திரமாய் எடுத்து வைத்துக் கொண்டேன். அந்தக் கொடுக்குகள் ஒவ்

வொன்றும் ஒன்றரை அங்குல நீளமும், ஊசிகளின் கூர்மையும் இருந்தன. நான் இங்காலாந்திற்குத் திரும்பி வந்ததும் அவற்றை இன்னும் பலவித வியக்கத்தக்க பொருள்களோடு ஐரோப்பா கண்டத்திலுள்ள அநேக நாடுகளுக்குக் காண்பித்துப் பின்னர் அவற்றில் மூன்றைக் கிரஷாம் கல்விச்சாலைக்குப் (Gresham College) பரிசாக அளித்து விட்டு ஒன்றை மாத்திரம் என் வேடிக்கைக்கு வைத்துக் கொண்டேன்.

## நான்காம் அத்தியாயம்

நான் தற்சமயம் வந்திருக்கும் தேசத்தைக் குறித்து நான் அதைக் கண்ணுற்ற வரையில் ஒரு சிறிது கூறுகின்றேன். நான் அத்தேசத்தின் தலைமைப் பட்டணமாகிய **'லார்பிரல்கிரட்'** (Lorbrul Grud) என்னும் பட்டணத்தைச் சுற்றி இரண்டாயிர மைல் தூரத்திற்குமேல் செல்லவில்லை. ஏனெனில், மஹாராணியவர்கள் தாம் எவ்விடஞ் சென்றாலும் என்னை யெடுத்துக்கொண்டு போவது வழக்கம். அவ்வம்மணி அரசர் சுற்றுக் கிராமங்களுக்குச் செல்கையில் தாமும் உடன் செல்வார்கள். ஆனால், அவர்கள் அரசர் கிராமங்களுக்குள் செல்கையில் மாத்திரம் தாம் வெளியிலேயே ஓரிடத்தில் தங்கிவிடுவார்கள். அவ்வாறு அம்மஹாராணியவர்கள் சென்றதெல்லாம் மேற் கூறிய பட்டணத்தைச் சுற்றி இரண்டாயிர மைல் தூரத்திற்கு மேலில்லை. அந்த இராச்சிய முழுமையும் ஆறாயிரமைல் நீளமும், மூவாயிரத்திலிருந்து ஐயாயிர மைல் அகலமும் விஸ்தீரண முடையதாயிருந்தது. நமது ஐரோப்பா கண்டத்திலுள்ள பூகோள சாஸ்திரிகள், ஜபானுக்கும்

(Japan) கலிபோர்னியாவுக்கும் (California) இடையில் சமுத்திர மன்றிப் பிறிதொன்று மில்லையென்று கூறுதல் அவர்கள் அறியாமையே யன்றி வேறல்ல மேலும், டார்டரி (Tartary) தேசத்திற்குச் சரியான பெரிய தேசம் வேறொன்றிருத்தல் வேண்டுமென்று நான் வெகு நாளாக எண்ணங் கொண்டிருந்தேன். எண்ணியது எண்ணியவாறே யிருந்ததைக் கண்டு நான் பேரானந்த மடைந்தேன். மேற் கூறிய பூகோள சாஸ்திரிகள் இனியாவது தங்கள் தேசபடங்களிலும், மாலுமி படங்களிலும் அமெரிக்கா (America) கண்டத்திற்கு வடமேற்கில் அத்தேசத்தைப் புதிதாக எழுதி வைப்பார்களென்று நம்புகின்றேன். அங்ஙனம் அவர்கள் செய்வாராயின் நான் அவர்களுக்கு வேண்டிய உதவியும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

அந்த இராச்சியத்தை ஒரு தீபகற்ப மென்றே சொல்லுதல் வேண்டும். அதற்கு வடகிழக்கில் முப்பது மைல் உயரமுள்ள மலைகள் பல இருக்கின்றன. எவராலும் அவைகளின் மேல் ஏறிச்செல்வதற்குச் சாத்தியப்படாது. ஏனெனில், அம்மலைகளின் உச்சியில் பல எரிமலைகள் இருக்கின்றன. முற்று முணர்ந்த கல்விமான்களாலும் அவைகளுக் கப்பால் எத்தகையார் வாசஞ் செய்கின்றார்களென்று அறியமுடியாது. அந்த இராச்சியத்தின் ஏனைய மூன்று பாகங்களும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கின்றன. ஆனால் அதில் ஓர் துறைமுகப் பட்டணமேனும் இல்லை. ஏனெனில், சமுத்திரக்கரை யோரங்களி லெல்லாம் கூர்மையான கற்பாறைகள் நிறைந்திருப்பதால் அங்கே ஒரு சிறிய படகும் செல்லமுடியாது. எனவே, அத்தேசத்து ஜனங்கள் ஏனைய தேசத்து ஜனங்களிடம் யாதொரு

வியாபாரமுஞ் செய்ய முடியா தென்பது. அத்தேசத்தின் கண்ணுள்ள பெரிய நதிகளிலெல்லாம் அநேக கப்பல்கள் செல்கின்றன. அந்நதிகளில் நேர்த்தியான மச்சங்கள் நிறைந்திருக்கின்றன. அத்தேசத்தார் சமுத்திரத்து மச்சங்கள் ஒன்றும் பிடிப்பதில்லை. ஏனென்றால், அவைகளெல்லாம் நம்து ஐரோப்பா கண்டத்திலுள்ள சமுத்திரத்து மச்சங்களின் பருமனை விருப்பதால் அவை அவர்களுக்கு ஒன்றும் பயன் தருவனவல்ல. ஆனால் அத்தேசத்து மிருகங்களும் செடிகளும் அந்நாட்டாருக்குத் தகுந்த பருமனை யுடையனவா யிருக்கின்றன. அதன் காரணத்தைத் தெளிந்த அறிவினையுடைய தத்துவ சாஸ்திரிகளே ஆராய்ந்து அறிவாராக.

அத்தேசத்துச் சாதாரண மனிதர்கள் சில வேளைகளில் கற்பாறைகளின் மீது காணப்படும் திமிங்கிலத்தைக் கொண்டு போய் சமையற் செய்து மனப்பூர்வமாய்ப் புசிப்பார்கள். அம்மனிதர்களில் ஒருவனால் அத்திமிங்கிலத்தைத் தனது தோள்களின் மீது தூக்கிச் செல்லமுடியாது. அம்மீன்களி லொன்றை அத்தேசத்து அரசர் ஓரேவொரு சமயம் புசித்துக்கொண்டிருந்ததை நான் கண்ணுற்றேன். ஆனால் அவர் அதைப் பிரியமாகப் புசித்ததாக எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், அதன் பருமன் அவருக்கு அதன் மீது மிகவும் வெறுப்பினை விளைவித்தது.

அத்தேசத்தில் மனிதர்கள் மிகுதியாக வசிக்கின்றார்கள். அதில் ஐம்பத்தோறு பட்டணங்களும் அநேக கிராமங்களும் இருக்கின்றன. ஈண்டு அதன் தலைமைப் பட்டணமாகிய லார்பிரல்கிரட் (Lorbrulgrud) என்னும் பட்டணத்தைப் பற்றிச் சிறிது கூறுகின்றேன். இப்பட்டணத்

தின் மத்தியில் ஓர் நதி செல்கின்றது. தவிர இதில் சுமார் எண்பதனுயிரம் வீடுகள் இருக்கின்றன. மக்கள் அறுநூறுயிரவர் இருக்கின்றனர். இப்பட்டணம் நமது தேசத்து மைல் ஐம்பத்து நான்கின் நீளமும், முப்பத்தாறின் அகலமும் இருக்கின்றது. நான் இந்த அளவினை அரசரிடமிருந்த அப்பட்டணத்துப் படத்தினைப் பார்த்து அறிந்து கொண்டேன். எங்ஙனமெனின், அரசர் அப்படத்தினைப் பூமியில் விரித்து வைக்கும்படி கட்டளையிட்டார். பிறகு நான் அப்படத்தின் குறுக்களவிலும் சுற்றளவிலும் பன்முறை வெறுங்காலாய் நடந்து ஒரு அளவு தடிகொண்டு அதன் அளவினையளந்து கொண்டேன். அப்படம் நூறடி நீளமிருந்தது.

அத்தேசத்தின் அரசரது மாளிகை ஒரே கட்டடத்திலை ஆக்கப்பட்டில்லை. அது ஏழுமைல் வட்டம் குவியல் குவியலாக அநேக கட்டடங்களை உடையதாயிருந்தது. அதில் பிரதான வறைகள் இருநூற்று நாற்பதடி உயரமும் அதற்குத் தகுந்த அகலமும் நீளமும் உடையனவாயிருந்தன. மஹாராணியவர்கள் நகரைச் சுற்றிப் பார்க்கவேண்டியதாயிருந்தாலும் அல்லது கடைகளுக்குச் செல்லவேண்டியதாயிருந்தாலும் அவற்றிற்கென்று தனிமையாக ஓர் குதிரை வண்டி வைத்திருந்தார்கள். அச்சமயங்களில் அவர்கள் என்னையும் என் செவிலித் தாயையும் தம்முடன் அழைத்துக்கொண்டு போவது வழக்கம். என்னை மாத்திரம் என் பெட்டியில் வைத்து, அப்பெட்டியைத் தமது குதிரை வண்டியில் வைத்துக்கொண்டு செல்வார்கள். இருப்பினும், வண்டி வீதிகளில் செல்லும்போது அதன் கண்ணுள்ள மனை

களையும் மக்களையும் கண்ணுற்றுக் களிப்பெய்த நான் விரும்பிய போதெல்லாம் என்னை வெளியே எடுத்துக் காட்டும்படி நான் என் செவிலித்தாயை வேண்டிக் கொள்வேன்: அவள் சிறிதேனும் தடையின்றி நான் விரும்பியவா றெல்லாம் என்னை யெடுத்துக் காட்டிவருவாள். நாங்கள் ஏறிச்சென்ற குதிரைவண்டி ஏறக் குறைய வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தின் (Westminster Hall) அளவு இருந்தது. ஆயினும் அவ்வளவு உயரமில்லை. எப்படி யிருப்பினும் நான் உயரத்தினைக் குறித்து அவ்வளவு சரியாகச் சொல்ல இயலாது. ஒருதினம் மஹாராணியவர்கள் தமது குதிரைவண்டியை அநேக கடைகளினருகே நிறுத்தும்படி கட்டளையிட்டார்கள். அத்தருணம் அநேக யாசகர்கள் தங்களுக்கு நல்ல சமயம் வாய்த்ததென்று களிப்புடன் குதிரைவண்டியின் பக்கங்களில் பெரிய கூட்டம் கூடினார்கள். நான் அவ்வமயம் ஐரோப்பா கண்டத்திலுள்ள மனிதனெவனும் கண்டிராத பல வற்புத காட்சிகளைக் கண்டேன். அவை கீழ்வருமாறு. "மேற்கூறிய யாசகர்களில் ஒரு பெண்பிள்ளையின் ஸ்தனங்களில் அநேக பயங்கரமான கட்டிகள் இருந்தன. அக்கட்டிகளின் துவாரங்கள் இரண்டொன்றில் நான் எளிதில் நுழைந்து என் உடலனைத்தையும் அங்கே மறைத்துக் கொள்ளவுங்கூடும். வேறு ஒருமனிதன் கழுத்தினில் கம்பளி மூட்டைகள் ஐந்தின் பருமனைக் காட்டினும் பெரியதான ஒரு கழலைக்கட்டி இருந்ததைக் கண்டேன். இவையெல்லாவற்றைக் காட்டினும் எனக்கு அதிக அருவருப்பினை விளைவித்தது கீழ்வரும் விஷயமாம். அஃதாவது; மேற் கூறிய யாசகர்களின் உடைகளில் நிறைய

பேன்கள் உலாவிக்கொண்டிருந்தனவென்பது. அவைகளின் அவயவங்களையும் பன்றியின் நாசியைப் போன்ற நீண்ட நாசிகளையும் என்னால் செவ்வனே காண இயன்றது. அவ்வித தோற்றத்தை நான் அதன் முன்னர் எஞ்ஞான்றும் கண்டதேயில்லை. அப் பேன்களில் ஒன்றைத் துண்டுதுண்டாக அறுத்துப் பார்க்க வேண்டுமென்று நான் மிக்க விருப்புற்றேன். ஆனால் அதற்குத் தக்க ஆயுதங்கள் அச்சமயம் என்னிடம் இல்லாமையைக் குறித்து நான் பெரிதும் கவலையுற்றேன். நான் அந்த ஆயுதங்களை நான் ஏறிவந்த கப்பலிலேயே மறந்துவைத்துவிட்டேன். நான் அந்தப் பேன்களைப் பார்த்தபோது எனக்கு வயிறு கலங்கி வாந்தி வந்தபோதிலும் அவற்றை அறுத்துப் பார்க்க முடியவில்லையே என்று மாத்திரம் நான் மிகவும் மனம் வருந்தினேன்.

நான் வெளியே செல்கையில் வழக்கமாய் உபயோகிக்கும் பெரிய பெட்டியோடு, பிரயாணத்திற்கென்று மற்றொரு சிறிய பெட்டி செய்யுமாறு மஹாராணியவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அப்பெட்டி பன்னிரண்டடி சதுரமும் பத்தடி உயரமும் இருந்தது. ஏனென்றால், என் செவிலித் தாய்க்கு மேற்கூறிய பெரிய பெட்டியைத் தன் இடுப்பில் கட்டிக்கொள்ளுதற்கும் அதனோடு குதிரை வண்டியில் செல்லுதற்கும் பெரிய தொல்லையாகவிருந்தது. இச்சிறிய பெட்டியும் அப்பெரிய பெட்டி செய்தவனாலேயே நானுரைத்த வண்ணமே இயற்றப்பட்டது. அந்தப் பெட்டி சதுரமாக செய்யப்பட்டிருந்தது. அதன் மூன்று பக்கங்களின் மத்தியிலும் ஒவ்வொரு சாளரமிருந்தது. எனக்கு எத்தகைய தீமை

யும் நேரிடாவண்ணம் அந்தச் சாளரங்கள் ஒவ்வொன்றினும் இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. நான் குதிரை மீதுசெல்ல எச்சமயமேனும் விருப்புற்றால் அஞ்ஞான்று தக்க மனிதனொருவன் தன் அரைக்கச்சியில் அப்பெட்டியினை மாட்டித்தொங்கவிட்டுக் கொள்ளும் பொருட்டு அதில் இரண்டு இரும்பு வளையங்களும் வைக்கப்பட்டிருந்தன.

என் செவிலித்தாய்க்குத் தேக சௌக்கிய மில்லாத காலத்து நான் அரசனையேனும் அரசியையேனும் காண வேண்டுமானாலும், அல்லது தோட்டங்களுக்குச் செல்ல வேண்டுமானாலும், அல்லது சிறந்த சில மங்கைமாரிடமாவது மந்திரிமார்களிடமாவது சென்று சம்பாஷிக்க வேண்டுமானாலும், என்னை மேற் கூறிய பெட்டியில் பெருந்தன்மையும் நம்பிக்கையும் பெற்ற ஓர் மனிதன் அவ்விடங்களுக்கெல்லாம் எடுத்துக்கொண்டு போவான். அச்சமயங்களில் அத்தேசத்திலுள்ள பெரிய பிரபுக்களும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் என்னிடம் அளவளாவி அதிக அன்பு பாராட்டுவார்கள். அஃதேனெனின், என்னிடம் அன்பு பாராட்டுதலால் அங்ஙனம் அன்பு பாராட்டுபவன் மேல் அரசருக்கு அன்புண்டாதலை நோக்கி அவர்கள் அனைவரும் அவ்வாறு செய்யின் தங்களுக்கு வேண்டிய நன்மையை அரசரிடமிருந்து பெறலா மென்ற எண்ணத்தினாலேயாம். பிரயாணஞ் செய்கையில் நான் களைப்புற்ற காலத்து குதிரைமீது வரும் வேலைக்காரன் என்னைப் பெட்டியுடன் வண்டியிலிருந்து வெளியே யெடுத்து அக்குதிரை மீது வைப்பான். அப்போது நான் அத்தேசத்தின் மூன்று பக்கங்களின் முழுத் தோற்றத்தையும் என்பெட்டியிலுள்ள

மூன்று சாளரங்களின் வழியாய்ப் பார்ப்பேன். அப்பெட்டியில் ஒரு படுக்கையும் இரண்டு நாற்காலிகளும் ஒரு மேஜையும் போடப்பட்டிருந்தன. அவைகள் அடியில் திருகாணிகளால் நன்றாகத் திருகப்பட்டிருந்தன. ஏனெனில், குதிரை சற்று விரைவாகச் சென்றாலும் அல்லது வண்டி சற்று அதிகமாகக் குலுங்கினாலும் என்தேகம் நடுக்குற்று எனக்குத் துன்பம் விளையுமென்று அரசர் முதலாயினோர் எண்ணினார்கள். ஆயினும் நான் அநேக கடற்பிரயாணங்கள் செய்திருந்தமையால் அத்தகைய அசைவுகள் சில சமயங்களில் மிகுதியாயிருந்தும் எனக்கு அதிக துன்பம் உண்டாகவில்லை. மேற் கூறிய பெட்டியில் மேலுரைத்த பொருள்கள் போடப்பட்டிருந்த தன்றியும் நான் உல்லாசமாய்க் காற்று வாங்குதற் பொருட்டு அதன்கண் ஒரு தொட்டிலும் தொங்கவிடப்பட் டிருந்தது.

நான் பட்டணத்தைப் பார்க்க விரும்பிய போதெல்லாம் பிரயாணத்திற்கென் றுள்ள ஓர்வித பெட்டியில் தான் நான் செல்லுதல் வழக்கம். அப்பெட்டியை என் செவிலித்தாய் தனது இடுப்பில் கட்டிக் கொள்வாள். பின்னர் அவள் அப்பெட்டியுடன் அத்தேசத்து நாகரீகத்திற்கு இயைந்தவாறு செய்யப்பட்டுள்ள ஒருவித பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொள்வாள். அப்பல்லக்கினை நான்கு மனிதர்கள் தூக்கிக்கொண்டு செல்வார்கள். இரண்டு மனிதர்கள் மஹாராணியின் சேவகர்கள் தரிக்கும் உடுப்பைத் தரித்துக்கொண்டு அதன் முன்னர்த் துணையாகச் செல்வார்கள். வழியில் என்னைப் பற்றிக் கேள்வியுற்றிருந்த மனிதர்களெல்லோரும் என்னைக் காணும் பொருட்டு மிக்க உவப்புடனும் வியப்புடனும் பல்லக்கருகில் வந்து கூட்டங் கூடி

வார்கள். அச் சமயங்களில் என் செவிலித்தாய் பல்லக்குத் தூக்குபவரை நிற்கச் சொல்லிப் பின்னர்ப் பொறுமையாக என்னை யெடுத்து அவர்க ளனைவர்க்கும் செவ்வனே காண்பிப்பாள்.

நான் அத் தேசத்தின் பிரதான கோயிலையும் அதன் கோபுரத்தையும் காண அதிக விருப்புற்றேன். அந்தக் கோபுரம் அந்த இராச்சியம் முழுமையிலு முள்ள எல்லாக் கோபுரங்களைக் காட்டினும் பெரிய தென்று அத் தேசத்து மாந்தர்களால் கருதப்படுகின்றது. ஓர் நாள் என் செவிலித்தாய் என்னை அவ்விடம் எடுத்துக்கொண்டு போனாள். நான் அக் கோபுரத்தைக் கண்டதும் எனக்கு அதிக வியப்பும் நகைப்பும் உண்டாயிற்று. ஏனென்றால், அது மூவாயிரம் அடி தான் உயரமிருந்தது. நம் உருவத்தினையும் அந் நாட்டார் உருவத்தினையும் நோக்க அக் கோபுரத்தைக் கண்டு ஒருவர் வியப்புறுதற்குச் சிறிதும் இடமில்லை. உண்மையாகவே, அக் கோபுரம் நமது தேசத்துச் சாலிஸ்பரி (Salisbury) கோபுரத்தின் உயரமேனும் இருக்கவில்லை. ஆனால், அக் காரணம் பற்றி எனக்கு மகிழ்வுடன் பல நன்மைகள் புரிந்த அந் நாட்டு மனிதர்களைப் பற்றி நான் தாழ்மையாகக் கூறுதல் தகாது. அக் கோபுரம் தகுந்த உயரமில்லாத குறைபாடுடையதேனும் மற்றைய அமைப்புகளெல்லாம் செவ்வனே வாய்க்கப் பெற்றிருந்தது. அக் கோயிலின் சுவர்கள் நூறடி கனமுடையனவாய் நாற்பதடி சதுரமுள்ள கற்களால் கட்டப்பட் டிருந்தன. அச் சுவர்களில் அநேக சிற்றறைகள் செய்யப்பட் டிருந்தன. அச் சிற்றறைகளில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட விக்கிரகங்களும், சக்கரவர்த்தி உருவங்களும் வைக்கப்பட்

டிருந்தன. அவ் விக்கினங்களில் ஒன்றினது சுண்டு விரல் பூமியில் விழுந்து அங்கிருந்த குப்பைகளில் மறைந்து கிடந்தது. நான் அதனை அளந்து பார்க்கையில் அது நான்கு அடியும் ஓர் அங்குலமும் நீளமிருந்தது. அதனை என் செவிலித்தாய் தனது கைக்குட்டையினில் சுற்றி வைத்துக் கொண்டாள். அவள் சிறு பெண்களின் சுபாவம் போலவே அதனைத் தனது விளையாட்டுக் கருவியாக வைத்துக்கொள்ளலாமென்று பெரிதும் மனமகிழ்ந்தாள்.

அரசருடைய சமையலறையை உண்மையில் ஒரு பெரிய மகத்தான கட்டடமென்றேதான் சொல்லல் வேண்டும். அதன் உயரம் சற்றேறக் குறைய அறுநூறடி இருந்தது. அந்த அறையிலுள்ள பெரிய அடுப்பு சென்ட்பால் (St Paul) வில் மச்சு மண்டபத்திற்குப் பத்துக் காலடி தான் அகலத்தில் குறைந்திருந்தது. நான் என் சுயதேசம் வந்த பின்னர் அந்த அளவினை யறிதற்கே நான் மேற்கூறிய சென்ட்பால் வில் மச்சு மண்டபத்தின் அகலத்தை அளந்து பார்த்தேன். நான் அவ் வறையினது கிராதியையும் அதன் கண்ணிருந்த மிகப் பெரிய பாத்திரங்களையும் குறித்து விரிவாக எடுத்துரைப் பேனாயின் நான் கூறுபவை யாவும் பொய்ம்மையெனவே அனைவரும் கருதுவார்கள். நுட்பமாய்க் குற்றங்கண்டு பிடிப்போன் (Critic) பிரயாணஞ் செய்பவர் அநேகமாக இல்லாதன வற்றையும் தாங்கள் உரைப்பவையோடு சேர்த்துச் சொல்லுதல் போல நானும் பல பொய்ம்மையான விஷயங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கலாமென்று பெரும்பாலும் எண்ணக் கூடும். அதைக் கருதியே நான் உண்மையாகவே உள்ளவற்றையும் குறைத்துச் சொல்லலுற்றேன். ஆனால் நான் கூறிய இவ்

விஷயங்கள் யாவும் அந் நாட்டாரது பாஷையில் எழுதப் பட்டு அவர்கள் அவற்றைப் பார்க்க நேர்ந்தால் நான் அவர்கள் தேசத்தின் பொருள்களின் பருமனையும் தங்களுக்கு வாய்ந்துள்ள உயர்ச்சியையும் பெருமையையும் மிகவும் குறைத்துச் சொன்னேனென்று அவர்கள் என் மீது பெரிய குற்றஞ் சாற்றுவார்கள். மகா மகிமையினை யுடைய அத் தேசத்து அரசர் தமது குதிரை இலாயத்தில் பெரும்பாலும் 600 - குதிரைகளுக்கு மேல் எப்போதும் வைத்திருப்பதில்லை. அக் குதிரைகளில் 54 - அடி உயரமுள்ள குதிரைகளும் 60 - அடி உயரமுள்ள குதிரைகளும் இருந்தன. அரசர் சுபதினங்களில் வெளியே செல்லுகையில் தாம் 500 - குதிரையாட் படையுடன் செல்லுதல் வழக்கம். நான் அத்தகைய சிறந்த காட்சியை எப்போதும் அதன் முன்னர்க் கண்டதேயில்லை.

# ஐந்தாம் அத்தியாயம்

என் சிறுத்த அளவினால் நான் பலதிறப்பட்ட இடர்களை எய்தாமலிருந்தால் அத்தேசத்தில் என் வாழ்க்கை மிகவும் இன்பமாகவே கழிந்திருக்கும். அவற்றில் சிலவற்றை ஈண்டு நான் கூறுகின்றேன். என் செவிலித்தாய் என்னை என் சிறிய பெட்டியில் அரண்மனையின் அருகேயுள்ள தோட்டங்களுக்கு அடிக்கடி எடுத்துக்கொண்டு போவது வழக்கம். அச்சமயங்களில் அவள் என்னைப் பெட்டியினின் றெடுத்துத் தன் கரத்தில் வைத்திருப்பாள் ; இல்லையேல், சில வேளைகளில் அவள் என்

னைப் பூமியில் உலாவவிடுவாள். நான் முன்னர்க் கூறிய மஹாராணியினிடமிருந்த குள்ளன் தானும் ஓர் நாள் எங்களுடன் தோட்டத்திற்கு வந்தான். என் செவிலித் தாய் வழக்கப்படி என்னைப் பூமியில் உலாவவிட்டுத் தான் ஏதோ காரியம் பார்த்திருந்தாள். அச்சமயம் நானும் அக் குள்ளனும் ஒருங்கே தப்புவாப் பழமரங் களினருகே இருக்க நேரிட்டது. அத்திருட்டுக் குள்ளன் அப்போது என் பக்கத்திலிருந்த ஒரு சிறு மரத்தைக் குலுக்கினான். அப்போது அதிலிருந்து பன்னிரண்டு தப்புவாப்பழங்கள் (Apple Fruits) கீழேவிழுந்தன. அவை ஒவ்வொன்றும் ஒரு பீப்பாய் பருமனிருந்தன. அவற்றி லொன்று என் முதுகின் மீது விழுந்தது. அப்போது நான் தரையில் கவிழ்ந்தபடியே விழுந்தேன். ஆயினும் என் நல்ல காலம் அதனால் எனக்குத் தீமை யொன்றும் உண்டாகவில்லை. அக் குள்ளன் என் வேண்டுகோளினால் மன்னிக்கப்பட்டான். ஏனென்றால், நான் என் வெகு ளியை அப்போது அறவே ஒழித்துவிட்டேன்.

வேறொரு தினம் என் செவிலித்தாய் புல் நிறைந் திருந்த ஒரு பாத்திபண்டை என்னை விளையாட விட்டு விட்டுத் தான் தனது உபாத்தியாயினியுடன் சிறிது தூரம் உலாவச்சென்றாள். அத்தருணம் திடீரெனப் பெருத்த கன் மழை பெய்ய வாரம்பித்தது. அம்மழையின் துளிகள் என்மீது விழுந்ததும் நான் அவற்றின் வலிவால் தரையில் விழுந்து விட்டேன். நான் கீழே விழுந்ததும் அம்மழைத் துளிகளெல்லாம் என் தேக முழுமையும் டெனிஸ் பந்துகள் அதில் படுமானல் அவை அப்போது எத்துணைய துன் பத்தை யுண்டு பண்ணுமோ அத்துணைய துன்பத்தை

விளைவித்தன. எப்படியும் நான் மெதுவாய் நகர்ந்து கொண்டு எலுமிச்ச மரங்கள் அடர்ந்திருந்த ஓர் இடத்தில் போய் ஒதுங்கிக்கொண்டேன். அப்போது நான் அடைந்த துன்பத்தினால் என்னால் பத்துநாள் வரையில் அரண்மனையைவிட்டு வெளியே வரமுடியவில்லை. அது வியக்கத்தக்க ஓர் விஷயமன்று. ஏனெனில், அந்நாட்டில் எல்லாப் பொருள்களும் மற்ற நாடுகளி லிருப்பவற்றைக் காட்டினும் அதிக பெரியனவா யிருப்பதுபோலவே அத்தேசத்தில் விழும் ஒவ்வொரு மழைத்துளியும் ஐரோப்பா கண்டத்தில் விழும் மழைத்துளி பதினெட்டாயிரத்தின் பருமனிருந்தது. அந்த அளவினை நான் என் அனுபவத்தினால் நன்றாக அறிந்தே கூறுகின்றேன்.

மேற் கூறியதைக் காட்டினும் வேறொரு பெரிய விபத்து எனக்கு விளைந்தது. அஃதாவது, ஒரு நாள் என் செவிலித்தாய் தன் உபாத்தியாயினியுடனும், தான் விரும்பியவேறு சில மங்கையர்களுடனும், என்னைப் பெட்டியில் கொண்டு வருவதால் தனக்குத் தொல்லையாயிருக்கிறதென்று கருதித் தான் என்னைத் தனது கரத்திலேயே வைத்துக் கொண்டு முன்னர்க் கூறிய தோட்டங்கள் ஒன்றிற்குச் சென்றாள். அங்கே அவள் நான் பன்முறை அவளை வேண்டிக் கொண்டபடி என்னைப் பயமில்லாத ஓர் இடத்தில் தனிமையாய் விட்டு விட்டுச் சிறிது நேரம் பிரிந்திருந்தாள். நான் எஞ்ஞான்றும் தனிமையாய் இருத்தற்கு விரும்பிய காரணம் யாதெனில், வெகு புதுமையாய்த் தோன்றுகிற அந்நாட்டிலுள்ள எப்பொருள்களையும் உற்று நோக்கி அவற்றின் அமைப்புக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அதனால் எய்தற்குரிய இன்பத்தினை நான்

துய்த்துக் கொண்டிருக்கும் பொருட்டாம். அங்ஙனம் அவள் பிரிந்திருக்கையில் அங்கிருக்கும் பிரதான தோட்டக்காரன் வளர்த்து வந்த சிறிய வெள்ளை நிறமுள்ள வேட்டை நாய் ஒன்று தற்செயலாய் நானிருக்கும் தோட்டத்திற்குள் வந்தது. பின்னர் அது என் 'வாசனையை நுகர்ந்து கொண்டு என் இருப்பிடத்திற்கே வந்து விட்டது. வந்ததும், அது என்னைத் தனது வாயினால் கௌவிக்கொண்டு தனது எஜமானனிடம் நேராய் ஓடிற்று. அங்குத் தனது எஜமானனைக் கண்டதும் அது தனது வாலையாட்டிக் கொண்டு என்னை மெதுவாகப் பூமியில் வைத்தது. இறைவனருளால் அந்நாய் என்னைத் தனது வாயினால் கௌவிக் கொண்டு போனபோது எனக்கு ஒருவித தீங்கும் நேரிடவில்லை. ஏனெனில், அது நன்றாய்ப் பழக்கப் பட்டிருப்பது போலவே என்னைத் தனது பற்கள் ஒன்றிலும் படாமல் வெகு ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு போனது. தோட்டக்காரன் என்னை முன்னரே நன்றாய் அறிந்திருந்தமையாலும், அன்றியும் என் மீது அதிக அன்பு வைத்திருந்தமையாலும் எனக்கு நேரிட்ட அக் கதியினைக் கண்டு அதிக அச்சங் கொள்ளலானான். சிறிது நேரங் கழிந்ததும் அவன் என்னைத் தனது இருகரங்களாலும் மெதுவாக எடுத்துப் பின்னர் என்னை என் தேகம் என்ன விதமாயிருக்கிறதென்று வினவினான். நான் அப்போது அதிக திடுக்கிட்டிருந்தமையாலும், என் புத்தி என் சுவாதீனத்தில் இல்லாமையாலும் அவனுக்கு நான் ஒரு வார்த்தையும் பதிலுரைக்கவில்லை. சில நிமிஷங்களானதும் என் புத்தி என் சுவாதீனத்திற்கு வர, அத் தோட்டக்காரன் என்னை என் செவிலித்தாயினிடம் எடுத்துக்

கொண்டுபோனுன். அந்தச் சமயத்தில் அவள், என்னைவிட்டு விட்டுச் சென்ற இடத்தில் காணுமையால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்துகொண்டு ஒன்றும் தோன்றப் பெறுமல் கொடிய துன்பத்தினை அனுபவித்துக் கொண்டிருந்தாள். பின்னர் அவள் என்னைக் கண்டும் வெகு நேரம் வரையில் ஒன்றும் பேசக் கூடாமல் மௌனஞ் சாதித்து என்னைப் பார்த்தபடியே இருந்தாள். அவள் இவ்வாறு சற்றுநேரம் இருந்த பிறகு அத் தோட்டக்காரனை அத்தன்மைத் தாய நாயினை அவன் ஏன் வளர்த்தல் வேண்டுமென்று மிகுந்த சினத்துடன் பல கடிய மொழிகள் கூறலுற்ருள். ஆனுல் அவள் அவ்விஷயத்தைப் பற்றி ஒருவரிடமும் சொல்லவில்லை. ஏனெனில், அது மஹாராணியவர்களுக்குத் தெரியுமாளுல் தன் மீது மிகுந்த கோபங் கொள்வாளென்று அவள் மிகவும் பயப்பட்டாள். நானும் அவ் விஷயத்தினை எவர் அறிந்தாலும் எனக்கு மரியாதை குறைவே யன்றிப் பிறிதொன்று மில்லை யென்றெண்ணி அதை எவருக்கும் உரைக்கவில்லை.

என் செவிலித்தாய் இனி என்னை விட்டுச் சிறிது நேரமும் பிரிதல் கூடாதென்று தான் மனத்திடஞ் செய்து கொண்டாள். ஆதலால், அவள் என்னுடன் இல்லாத போது எனக்குண்டாகிய சில சிறிய துன்பங்களையும் அவளிடம் கூறினுல் எப்போதும் என்னை இனிமேல் தனிமையாய் விடமாட்டாளென்று கருதி அவற்றிலொன்றும் நான் அவளிடம் உரைக்கவில்லை. அவற்றுள் சில வருமாறு:— ஒரு நாள் ஓர் பருந்து தோட்டத்தில் பறந்து கொண்டிருந்த போது என்னைப் பார்த்தது. உடனே அது என்னைப் பிடித்தற்குக் கீழே வட்டமாகப் பறந்து

பின்னர் என் அருகில் வந்து விட்டது. நான் அப்போது வெகு தைரியமாய் என் கத்தியை உருவிக்கொண்டு சடிதியில் ஓர் படர்மரப் பந்தரின கீழ் ஓடிப்போய் ஒளித்துக் கொண்டேன். இல்லேயேல், அப் பருந்து என்னை நிச்சயமாய்த் தனது நகங்களால் பற்றிக் கொண்டுபோய் என்னைப் போஜனம் செய்திருக்கு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. வேறொரு சமயம் நான் வெளியே வேடிக்கையாய்த் திரிந்து கொண்டிருக்கையில் ஒரு எலியின் வளேயில் விழுந்து விட்டேன். அவ் வளே என் கழுத்தளவு ஆழமிருந்தது. பின்னர் நான் சமாளித்து மெதுவாய் மேலேறி வந்து விட்டேன் ஆனல் என் உடைகள் மாத்திரம் சற்றுப் பழுதாயின. அதன் காரணமென்ன வென்று என் செவிலித்தாய் என்னைக் கேட்டபோது நான் ஏதோ ஒரு பொய்மொழி கூறி அவளை நம்பும்படி செய்தேன். அப் பொய்ம் மொழியினை தற்சமயம் கூறல மென்று எண்ணினும் அது பயனற்ற விஷயமாதலால் இப்போது எனக்கு அது ஞாபகத்திற்கு வரவில்லே. மற்றொரு சமயம் இங்கிலாந்தைக் குறித்து ஆழ்ந்த சிந்தனையுடையவனுய் நான் என்னிஷ்டப்படி அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது வழியில் ஒரு கொசுவின் கூடு இருந்தமையால் நான் அதனல் தடுக்கப்பட்டுக் கீழே விழுந்து விட்டேன். விழவே, என் வலது கணைக்காலில் மிகுந்த அடிபட்டு எனக்கு அதிக துன்ப முண்டாயிற்று.

நான் தனிமையாய் உலாவிக்கொண்டிருக்கையில் சிறு பறவைகள் இரைக்காகப் புழுக்களேயும் பூமியில் கிடைக்கும் வேறு சிற்றுணவுகளேயும் புசித்தற் பொருட்டு எனக்கு வெகு அருகாமையில் சற்றும் அச்சமின்றி

துள்ளித் துள்ளித் திரிந்துகொண்டிருந்தன. அவைகள் என்னை அச்சம் தரத்தக்க ஓர் ஜந்துவாகவே சிறிதேனும் கருதவில்லை. நான் இருந்தும் இல்லாமற் போனால் அவைகள் எங்ஙனம் காரியங்கள் நிகழ்த்துமோ அங்ஙனமே நிகழ்த்தின. ஓர் நாள் என் காலைப் போஜனத்திற்காக என் செவிலித்தாய் எனக்கு அளித்த ஒரு துண்டு அப்பத்தை நான் என் கரத்தில் வைத்துக் கொண்டிருக்கையில் ஒரு சிறிய குருவி அதனைத் திடுக்கென வந்து தனது நகங்களால் அபகரித்துச் சென்றது. நான் அப்பறவைகளைக் கைப்பற்ற முயலும்போதெல்லாம் அவைகள் தைரியமாய் என் நகங்களைக்குத்தும் பொருட்டு என்னையே துரத்திக்கொண்டு வந்தன. நான் அப்போது தைரியத்தை இழந்தவனாய் அவைகளினருகே மீண்டும் செல்ல மிகவும் அச்சங்கொண்டேன். பின்னர் அவைகள் என்னைச் சிறிதேனும் கவனியாமல் அவை முன்செய்தபடி கொசு, புழு முதலியனவற்றைப் புசிக்க அங்குமிங்கும் துள்ளிக்கொண்டிருந்தன. ஒருநாள் நான் வளைதடி ஒன்றினை எடுத்து அங்கு திரிந்து கொண்டிருந்த ஒரு சிறு குருவியின்மேல் எறிந்தேன். என் நல்ல காலம் அது அதன்மேல் குறிப்பாய் விழுந்தது. அப்போது அந்த எளிய ஜந்து, அந்தோ ! தரையில் விழநேரிட்டது. நான் உடனே சென்று அதன் கழுத்தினை என் இருகரங்களாலும் வலிவாகப் பற்றிக் கொண்டு மிகுந்த களிப்புடன் என் செவிலித்தாயினிடம் ஓடினேன். ஆனால் அப்பறவை திடுக்கெனப் பயந்து கீழே விழுந்ததேயன்றிக் காயம் ஒன்றுமடையாமையால் தனது சிறகுகளால் என் தலையிலும் உடலிலும் நான்

செல்கையில் பல அடிகள் அடித்தன. நான் அதனைத் தொலைவில் பிடித்துக்கொண்டிருந்தும், அதன் நகங்களுக்கு அகப்படாமலிருந்தும் ஒன்றும் பயன்படவில்லை. அது எனக்குக் கொடுத்த தொல்லையினால் அநேக முறை நான் அதனை விட்டுவிடலாமென்று கருதினேன். ஆனால் விரைவில் எங்கள் வேலைக்காரர்களில் ஒருவன் என்னிடம் ஓடிவந்து அப்பறவையின் கழுத்தினைத் தனது கரத்தால் முறித்துவிட்டான். மறுதினம் மஹாராணியவர்கள் ஆக்கினையின்படி அந்தப் பறவை என் பகற்போஜனத்திற்குச் சமைத்து வைக்கப்பட்டது.

பேரெழிலும் பெருஞ்சிறப்புமுள்ள மங்கையர்கள் பலர் என் செவிலித் தாயைப் பன்முறைத் தமது இல்லத்திற்கு வரவழைப்பார்கள். அவர்கள் அவளை என்னையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளுவார்கள். ஏனென்றால், என்னைப் பார்த்தற் பொருட்டு அவர்கள் என் செவிலித்தாயை வரவழைப்பதன்றிப் பிறிதொரு காரணமில்லை. அவர்கள் அநேகமுறை என்னை அதிக அன்புடன் அணைத்துக்கொள்வார்கள். அப்போது நான் அதிக துன்பத்தினை எய்துவேன். ஏனெனில், அவர்கள் தேகத்திலிருந்து அதிக துர்நாற்றம் வீசியது. அம் மங்கையர் பொருட்டு நான் அந்தத் துர்நாற்றத்தைப் பற்றி மிகுதியாய்க் கூறுதல் கூடாது. ஏனெனில், மொத்தத்தில் பெண்களுக்கு எத்தகைய மரியாதை அளித்தல் வேண்டுமோ அத்தகைய மரியாதையை நான் அவர்களுக்கும் ஈதல் வேண்டும். நான் எவ்வளவு சிறிய தேகத்தைப் பெற்றவனாயிருக்கின்றேனோ அவ்வளவும் எனது உணர்ச்சி நுட்பமாயிருந்ததென்று நினைக்கின்றேன்.

நமது இங்கிலாந்திலுள்ள மங்கையர்கள் ஒருவர் மீது வீசும் துர்நாற்றத்தை ஒருவர் அறியாமல் எங்ஙனம் ஒருவர்பால் ஒருவர் அன்புபாராட்டி வருகின்றனரோ, அவ்வண்ணமே அந்நாட்டு மங்கையர்களுக்கும் இயற்கையாமென்று ஒருவர் கூறவும் வேண்டுமோ?

அந்நாட்டு மங்கையர்களுக்கு இயற்கையாயுள்ள வாசனையே அவர்கள் உபயோகிக்கும் வாசனைத் திரவியங்களைக் காட்டினும் பன்மடங்கு மேலானதென்று கூறலாம். ஏனெனில், அவர்கள் துர்வாசனையை நுகர்ந்து ஒருவர் சகித்திருந்தாலும் இருக்கலாம்; ஆனால் அவர்கள் உபயோகிக்கும் வாசனைத் திரவியங்களின் மணத்தை நுகர்ந்து ஒருவர் ஒருவாற்றானும் சகித்திருத்தல் இயலாது. அவர்கள் பூசியிருந்த வாசனையை நுகர்ந்து நான் மெய்ம் மறந்து மிகுந்த கஷ்டத்தை யடைந்தேன். ஒரு நாள் நான் லிலிபுட் நாட்டில் மிகுந்த கஷ்டப்பட்டு தேகப்பயிற்சி செய்தபோது அந்நாட்டிலிருந்த என் பிரிய நேயனொருவன் என் மீது கெட்ட நாற்றமுண்டானதென்று கூறியதை நான் அப்போது மறக்கவில்லை. என்மீது எப்போது கெட்ட நாற்றம் இருக்கிறதென்று அறிந்தேனோ அத்தருணமே ஏனைய மக்களுக்கும் அஃது இயற்கையாக உளது என்று தீர்மானித்துக் கொண்டேன். நான் தேகத்தின் அமைப்பு, உருவம், அழகு முதலியவற்றில் மற்றைய மக்களுக்கு ஒரு வழியானும் குறைந்தவனல்லனென்பது சத்தியம். அந்நாட்டு மக்களினது துற்நாற்றத்தை யறிய எவ்வித நுட்பவுணர்ச்சி எனக்கு இயற்கையா யுளதோ அங்ஙனமே லிலிபுட் நாட்டு மக்களுக்கும் என்மீது வீசும் துர்நாற்றத்தை யறிய அந் நுட்பவுணர்ச்சி உளவாயிருத்

தல் வேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டேன். அவ் வியற்கை துர்நாற்றம், மஹாராணியவர்கள், என் செவிலித் தாய் ஆகிய இவர்களுக்கும் உண்டென்று நான் கூறுதல் தக்கதன்று. இங்கிலாந்து தேசத்து மங்கையர் களைக் காட்டிலும் மேற்கூறிய இருவரும் ஒரு சிறிதும் குறைந்தவரல்லரென்பது ஈண்டு உணரற்பாலதாம்.

என்னை என் செவிலித்தாய் அந்நாட்டிலுள்ள சிறப் புற்ற மங்கையர்களிடம் கொண்டுபோன போதெல்லாம் எனக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. கீழ்வரும் விஷயமாம். அஃதாவது, அம் மங்கையர்கள் நானும் அவர் கள் நாட்டு ஆடவரைப் போன்ற ஒரு அறிவுள்ள ஆண் மகன்தானென்று கருதாமையாம். ஏனெனில், அவர்கள் என்னெதிரிலேயே தங்கள் உள்ளாடைகளையும் சிறிதும் நாணமின்றி உடுத்திக் கொண்டார்கள். அப்போது அவர் களுடைய தோல்கள் முருடாயும், ஒழுங்கில்லாமலும், பல வித நிறங்களையுடையனவாய், மரத்தட்டின் அகலம் அங்கு மிங்கும் மறுக்களைப் பெற்றிருந்தமையால் அவர்களைக் காண்பதற்கு எனக்கு மிகுந்த அருவருப்பா யிருந்தது. அங்கிருந்த அம் மங்கையர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிக அழகுடையவளா யிருந்தவள் பதினாறு வயதுள்ள புன்னகை முகத்தையுடைய ஒரு மாதரசியாம். அவள் மிகுந்த சரச சல்லாபக்காரி. அவள் மற்றவர்களைவிட என் மீது அதிக அன்பு பாராட்டி என்னைப் பன்முறைத் தனது கரத்திலேந்திக் கொண்டு பலவித வேடிக்கைகள் புரிந்தாள். நான் அவள் செய்த தொழில்களில் வெறுப்புற்றதால் என்னை அப் பெண்ணினிடம் மறுபடியும் கொண்டுபோகா மலிருக்க ஏதேனும் உபாயம் செய்யும்படி என் செவிலித்

தாயை மிகவும் இரந்து வேண்டிக்கொண்டேன். ஒரு நாள் என் செவிலித்தாயின் உபாத்தியாயினது சகோதரி புத்திரன் என் செவிலித்தாயையும் அவள் சிற்றன்னையையும் கொலை பொன்று நடக்கப்போகிற தென்றும், அதனை வந்து அவர்கள் பார்க்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். கொல்லப்படும் மனிதன் மேற்கூறியவனுக்கு ஆப்த நண்பனாயிருந்த ஒருவனைக் கொலைபுரிந்தவனும். என் செவிலித்தாய்க்குக் கொலை செய்யுமிடத்திற்குப் போவதற்குச் சற்றும் மனமில்லாதிருந்தும் அவளது உபாத்தியாயினது கட்டாயத்தினால் ஆண்டு போவதற்கு ஒருவாறு சம்மதித்தாள். ஏனெனில், என் செவிலித்தாய் இயற்கையாகவே மிகுந்த இளகிய உள்ளத்தை யுடையவள். எனக்கும் அவ்விதகொடிய காட்சிகளைக் காண்பதற்கு மிகவும் அருவருப்பா யிருந்தும் அந் நாட்டில் நடக்கும் கொலை அதியற்புதமா யிருத்தல் வேண்டுமென்றெண்ணி அங்கு செல்வதற்கு நான் விருப்புற்றேன். குற்றவாளி தூக்குமரத்தின் கீழ் ஒரு நாற்காலியில் வலிவாக நிறுத்தப்பட்டான். அவன் தலை நாற்பதடி நீளமுள்ள ஒரு கத்தியினால் ஒரே வெட்டாக வெட்டப்பட்டது. அப்போது உதிர நரம்புகளிலிருந்தும், இரத்த தாதுக்களிலிருந்தும் பெருகிய இரத்த வெள்ளம் இவ்வளவென்று சொல்லுதல் முடியாது. அந்தத் தலை பூமியில் விழுந்ததும் படீரென உண்டாகிய சப்தம் என்னைப் பிரமிக்கச் செய்தது.

மஹாராணியவர்கள் நான் பன்முறையும் கடற்பிரயாணங்களைப் பற்றிப் பேசியதைக் கேள்வியுற்றிருந்தமையால் நான் ஒரு நாள் ஒருவாறு மனவருத்தமாயிருந்தபோது அவர்கள் எனக்குப் படகு ஓட்டவாவது, கப்பல்

ஓட்டவாவது பழக்க முண்டாவென்றும், நான் சற்று நேரம் படகிற் சென்ருல் என் தேகத்திற்குச் சௌக்கிய மாக யிராதாவென்றும் என்னைக் கேட்டார்கள். படகோட்டுதலும் கப்பலோட்டுதலும் இரண்டும் எனக்கு செவ்வனே தெரியுமென்று நான் அவர்களுக்குப் பதிலு ரைத்தேன். ஏனெனில், நான் கப்பலில் உண்மை யாகவே வைத்திய வேலையில் அமர்ந்திருந்தும் சில முக்கியமான சமயங்களில் நானும் ஒரு சாதாரணக் கப் பலோட்டியைப் போலவே உழைக்க வேண்டியதாயிருந் தது. ஆனல் நான் அத்தேசத்தில் எத்தன்மையாக கப்பலையாவது படகையாவது ஓட்டுவது? அங்கே மிகச் சிறிய படகும் நமது பெரிய சண்டைக் கப்பலுக்குச் சமானமாக இருக்கின்றதே! நான் ஓட்டக்கூடிய படகு அந் நாட்டு நதிகள் ஒன்றிலும் செல்லுதற்கு யோக்கிய தையுடையதல்லவே!

மஹாராணியவர்கள், நான் எனக்குத் தகுந்த படகு ஒன்று செய்வதற்குத் தமக்கு உபாயம் காட்டினல் அவ் வாறே செய்து முடிக்குமாறு தம்முடைய தச்சனுக்கு அப்போதே கட்டளை யிடுவதாக என்னிடம் கூறினர்கள். அந்தத் தச்சன் அதியற்புதமான வேலைக்காரனுதலால் நான் உரைத்தவண்ணம் பத்து நாளில் பன்னிரண்டு ஐரோப் பியர்கள் அடங்கக்கூடிய ஓர் அருமையான படகு வேண்டிய பாய் மரங்களெல்லாம் வைத்துச் செய்து வந்து கொடுத்தான். அதை மஹாராணியவர்கள் அளவற்ற ஆசையுடன் வாங்கித் தமது மடியில் வைத்துக் கொண்டு அரசரிடம் ஓடினர்கள். அரசர் அப் படகைத் தண்ணீர் நிரம்பியுள்ள ஓர் தொட்டியில் விட்டுப் பிறகு

என்னை எடுத்து அதில் உட்காரவைத்தார். அவர் முதலில் என்னைப் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டு மென்றும், பின்னர்த் தான் என்னைத் தைரியமாய் தனியே படகுவிடும் படி செய்யலா மென்றும் சொன்னார். நான் அப் படகைத் துடுப்புகளைக் கொண்டு ஓட்டுவதற்கு அத் தொட்டியில் போதுமான இடமில்லாமையால் நான் ஒன்றும் செய்யக் கூடாமலிருந்தேன். ஆனால், மஹாராணியவர்கள் அதற்கு முன்னரே வேறொரு உபாயம் செய்திருந்தார்கள் அஃ தென்னை யெனின், அவர்கள் தமது தச்சனை என் உப யோகத்திற்காக முந்நூறு அடி நீளமும், ஐம்பதடி அகல மும், எட்டடி ஆழமும் உள்ள ஒரு மரத்தொட்டி செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தமையாம். ஆகையால், அவர்கள் அதனை அப்போது கொண்டுவரும்படி கட்டளை யிட்டார்கள். அம் மரத் தொட்டி வெகு நன்றாக அமைக்கப் பட்டு அது எப்போதாகிலும் பழுதாகுமானால் அப்போது அதிலுள்ள தண்ணீரை வெளியே விட்டு விடுவதற்காக அதன் அடிப்புறத்தில் நீரை வெளிப்படுத்துங் கருவி யொன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பீப்பாய் நிறைய ஜலம் நிரப்ப வேண்டியதாயின் இரண்டு வேலைக் காரர்கள் அரைமணி நேரத்தில் வெகு சுலபமாக நிரப்பி விடுவார்கள். அதனை அரண்மனையின் வெளியேயுள்ள அறையில் சுவரின் பக்கமாக வைத்தார்கள். நான் அப் பீபாவில் படகு விட்டு என் காலத்தை அதிக இன்ப மாகக் கழித்தேன். நான் படகு விடுகையிலெல்லாம் மஹாராணியவர்களும், சில சிறந்த பெண்களும் என் திறமையையும் சுறுசுறுப்பையும் பார்த்து பெருமகிழ்ச்சி அடைவார்கள். சில வேளைகளில், நான் துடுப்புகளை

வைத்து விட்டு என் கைகளாலேயே படகைத் தள்ளிப் பார்ப்பேன். அவ்வமயங்களி லெல்லாம் மேற்கூறிய பெண்கள் தங்கள் விசிறிகளால் படகை ஒரு புறமாய் விசிறித் தள்ளுவார்கள். அவர்களுக்குக் களைப்பு வந்தால் அவர்களுடைய வேலைக்காரர்கள் தங்கள் வாய்களினால் படகை ஊதுவார்கள். அச்சமயங்களில், என் விருப்பம் சென்ற வண்ணம் அப்படகை நான் வலப்பக்கமேனும் இடப்பக்கமேனும் தள்ளுவேன். நான் அத்தொழிலை நிறுத்தினதும் என் செவிலித்தாய் என் படகைத் தனது சிற்றறையின் சுவரிலுள்ள ஓர் ஆணியில் மாட்டி வைப்பாள்.

நான் மேற்கூறியவாறு படகோட்டும் தொழில் புரிய செல்கையில் ஓர் நாள் எனக்குப் பெரிய ஆபத்து ஒன்று விளைந்தது. அஃதென்ன வென்றால், வேலைக்காரி ஒருத்தி என் படகை முற்கூறிய மரத்தொட்டியில் வைத்தலும், என் செவிலித்தாயின் உபாத்தியாயினி என்னைப் படகில் உட்காரவைத்தற் பொருட்டு என்னைத் தனது கைகளால் தூக்கினாள். அச்சமயம் நான் அவளது கையிலிருந்து நழுவிவிட நேரிட்டது. நான் உடனே நாற்பதடி உயரத்திலிருந்து கீழே விழுந்து என்னுயிரை இழந்திருப்பேன். ஆனால், என் நற்காலம் அவளது மார்புச் சட்டையில் மாட்டப்பட்டிருந்த ஒருவித கொக்கியால் தடுக்கப்பட்டேன். அப்போது நான் சிறிது நேரம் வரையில் பயங்கரமான நிலையில் அதிக மனவருத்தத்துடன் இருக்கலானேன். பின்னர் என் செவிலித்தாய் ஓடிவந்து என்னை எடுத்துக் காப்பாற்றினாள்.

முற்கூறிய தொட்டியை ஒரு வேலைக்காரன தனது வழக்கப்படி மூன்று நாளைக்கு ஒருமுறை சுத்த ஜலம் விட்டு நிரப்புவதுபோல ஒரு நாள் நிரப்புகையில் அவனை அறியாமல் ஓர் பெரிய தவளை குடத்திலிருந்து அத் தொட்டியில் வந்து விட்டது. அது நான் படகில் உட்காரும் வரையில் அத்தொட்டியிலேயே மறைந்திருந்தது. பிறகு நான் படகில் உட்கார்ந்ததும் அத் தவளைத் தனக்கு ஓர் தங்குமிடம் கிடைத்ததென்று கருதி என் படகில் எகிறி வந்து உட்கார்ந்தது. அப்போது அது ஒரு பக்கமாகவே தங்கியிருந்தமையால் நான் என் வலிவையெல்லாம் மற்றொரு பக்கத்தில் சென்று படகு கவிழாமல் இருக்கும் பொருட்டு உபயோகித்துப் பார்த்தேன். ஆனால் அது சிறிது நேரத்திற்குள் அப்பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் துள்ளிக் குதித்தலும், பின்னர் முன்னும் பின்னும் திரும்பி வருதலும், அன்றியும் என் தலைக்குமேல் தாண்டி விழுதலும், இவற்றோடு நில்லாது என் தேகத்தை உராய்ந்து என் முகத்திலும் உடைகளிலும் தனது தேகத்தில் பட்டிருந்த சேற்றை நிரப்பிவைத்தலுமாகப் பலவித துன்பங்களை எனக்கு உண்டாக்கியது. அதன் அவயவங்கள் ஒவ்வொன்றும் மிகப் பெரிதாகத் தோன்றினமையால் அஃது உலகிலுள்ள எல்லா மிருகங்களைக் காட்டிலும் மிகுந்த அவலக்ஷணமான மிருகமாக எனக்குக் காணப்பட்டது. எது எவ்வாறு இருப்பினும், நான் என் செவிலித்தாயினிடம் அச்சமயம் அவளது உதவி அவசியமில்லையென்று கூறி நானே அம் மிருகத்திற்குச் செய்ய வேண்டிய வேலையினைச் செய்தல் வேண்டுமெனத் தீர்மானித்தேன். பின்னர், நான் அவ்வண்ணமே அவளிடம் கூறி

நான் என் துடுப்புகளிலொன்றை எடுத்துச் சிறு போது அம்மிருகத்திற்கு வேண்டிய உதை கொடுத்து இறுதியாக அதுதானே தொட்டியிலிருந்து தண்ணீரில் குதித்தோடும்படி செய்தேன்.

ஆனால் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய தீமை என் மஹாராணியவர்களது மடைப்பள்ளிக் கணக்கன் ஒருவன் வளர்த்து வந்த குரங்கினால் நேரிட்டது. அஃதெவ்வாறென்றால், ஓர் நாள் என் செவிலித்தாய் என்னைத் தனது சிற்றறையில் விட்டுவிட்டுக் கதவைச் சாத்திப் பூட்டுப் போட்டுக்கொண்டு ஏதோ காரியமாக வெளியே சென்றிருந்தாள். அப்போது கோடைக் காலமாதலால் காற்று வருவதற்காக அந்த அறையின் சாளரமும் என் பெட்டியின் சாளரங்களும், கதவும் திறந்து வைக்கப் பட்டிருந்தன. நான் அப்பெட்டியில் அமைதியாக ஏதோ ஆழ்ந்த சிந்தனையாய் என் நாற்காலியில் அமர்ந்திருக்கையில் மேற்கூறிய சிற்றறையின் சாளரத்தின் வழியாக ஏதோ ஒன்று குதித்து வந்த சப்தமும், பின்னர் சிறிது நேரத்திற்குள் அஃது அறைக்குள் இருபக்கமும் திரியும் சப்தமும் கேட்டது. அப்போது எனக்கு உண்மையாகவே அதிக பயமுண்டான போதிலும் மேற்கூறியவாறு செய்த ஜந்து எதுவென்று நான் அறிதற் பொருட்டு என் இடத்தை விட்டுப் பெயராமல் என் சாளரங்களின் வழியாய்ச் சாய்ந்து பார்த்தேன். அச்சமயம் துள்ளியாடும் இயல்பினையுடைய மேற்கூறிய குரங்கு துள்ளிக் கொண்டும் எகிறிக் கொண்டு மிருந்தது. கடைசியாய், அது என் பெட்டியைக் கண்டு மிகுந்த களிப்புற்று அதனைக் கதவின் வழியாயும் சாளரங்களின் வழியாயும் உற்று

நோக்கியது. அப்போது நான் அதன் பற்றுகைக்கு அகப் படாமலிருக்கும் பொருட்டு என் பெட்டியின் ஒரு மூலையில் சென்று மறைந்துகொண்டேன். ஆனால் அக் குரங்கு நாலா பக்கங்களையும் நன்றாய்க் கவனித்தது. அப்போது எனக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. நான் என் படுக்கைக் குள் மறைந்துகொள்ளுதற்கும் என் புத்தி என் சுவா தீனத்தில் இல்லை; இருந்திருந்தால் நான் அவ்வாறு செய் தேனும் அக் குரங்கினிடம் அகப்படாமல் தப்பித்துக் கொண்டிருப்பேன்.

அக் குரங்கு சற்றுநேரம் பல்லை யிளித்துக் குதித்தாடி னது. பின்னர் அது என்னைப் பார்க்க நேர்ந்தது. உடனே அது தனது கால்களி லொன்றைக் கதவின் வழி யாய் விட்டுப் பூனை எலியைப் பிடிப்பதுபோல என் மேற்சட்டையைப் பற்றி என்னை வெளியே இழுத்தது. பின்னர் அம் மிருகம் செவிலித்தாய்கள் குழந்தைகளுக்கு முலையூட்டப் போவது போலவும், இங்கிலாந்தில் குரங்கு ஜாதிகள் தங்கள் குட்டிகளுக்கு முலையூட்டப் போவது போலவும் என்னைத் தனது வலது முன்னங் காலால் தூக் கியது. அப்போது நான் சிறிது தடைசெய்ய முயன் றேன்; உடனே அது என்னை மிக்க வலிவாக தனது உட லில் அழுத்த ஆரம்பித்தது. ஆதலால் நான் சும்மா விருத் தலே சுகமெனக் கருதி அது செய்யுங் காரியங்களுக் கெல் லாம் பேசாமலிருக்கத் தீர்மானித்துக் கொண்டேன். பிறகு, அது தனது இடது காலால் என் முகத்தைப் பன் முறை தடவிக் கொடுத்தது. ஆதலால், அது என்னைத் தன் ஜாதிக் குட்டிகளில் ஒன்றாக எண்ணிக் கொண்ட தென்று நான் அறியலானேன். அம் மிருகம் என்னை மேற்

கூறியவாறு செய்துகொண்டிருக்கையில் கதவின் பக்கமாய் யாரோ ஒருவர் வந்தது போல் சப்தங்கேட்டது. உடனே அது என்னை ஏந்திய வண்ணமாகவே சாளரத்தின் வழியாய் ஓடவாரம்பித்தது. பின்னர் அது என்னை அரண்மனையின் பக்கத்திலுள்ள வீட்டின் கூரையின்மீது கொண்டு போனது அச் சமயம் என் செவிலித்தாய் எனக்கு நேரிட்ட கதியைக் கண்டு மனம் பொறாமல் ஒரு பெருங் கூச்சலிட்டாள். உண்மையாகவே, அவள், தன் மனம் ஒரு வழியில் நில்லாமல் பைத்தியம் பிடித்தவள்போல ஏதேதோ பிதற்றினாள். அங்கிருந்த ஏனையோ ரெல்லாம் மிகுந்த மனக்கலக்க மெய்தினார்கள்; வேலைக்காரர்க ளெல்லாம் ஏணிகொண்டுவர விரைவாக ஓடினார்கள். அரண்மனையிலிருந்த நூற்றுக் கணக்கான மனிதர்களும் மேற்கூறிய மிருகம் தன் குட்டிகளில் ஒன்றைப்போல் தனது முன்னங் கால்களில் ஒன்றால் என்னைப் பிடித்திருந்ததையும், மற்றொன்றால் அது எனக்கு முலையூட்டினதையும், தன் வாய்ப்பையில் அடைத்து வைத்திருந்த தின்பண்டத்தில் சிறிது அது என் வாயில் அடைத்ததையும், அப்போது நான் அதைப் புசியாமலிருந்தபோது அது என்னைத் தட்டிக் கொடுத்ததையும் தாங்கள் கண்ணாரக்கண்டார்கள். வெளியே இருந்த புல்லறிவாளர் பலர் என்னைப் பார்த்து நகைத்தார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு நகைத்தமை தவறென்று நான் சொல்லுதல் தகுதியன்று. ஏனெனில், நானும் அவர்களில் ஒருவனாயிருந்திருப்பேனாயின் நான் அத்தகைய தோற்றத்தைக் கண்டு இன்னும் எத்தனையோ பங்கு அதிகமாக நகைத்திருப்பேன். நான் மாத்திர மன்று; எல்லா மனிதர்களும் இயற்கையாகவே அத் தோற்றத்தைக்

கண்டு நகையாமலிரார். அங்கிருந்த மனிதர்களில் சிலர் அக் குரங்கைக் கீழே துரத்தும்பொருட்டு அதன்மீது கல்லெறிந்தார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்தல் கூடாதெனத் தடுக்கப்பட்டார்கள். ஏனென்றால், அக்கற்களில் ஏதேனுமொன்று என்மீதுபட நேர்ந்தால் நான் உயிரிழப்பேனென்று அறிவாளர் பலர் எண்ணினார்கள்.

பின்னர் அநேக ஏணிகள் கொண்டு வரப்பட்டன. அந்த ஏணிகளின் மேல் அநேகர் ஏறி என்னிடம் வர முயன்றார்கள். அதைக்கண்டு அக்குரங்கு இனித் தான் தப்பித்துக் கொள்ளலே தகுதியுடையதென்றெண்ணி என்னைக் கூரையிலேயே விட்டுவிட்டுத் தான் ஓட்டம்பிடித்தது. நான் அக் கூரையின் மீதே சற்றுநேரம் அமைதியாய் உட்காந்திருந்தேன். அவ்விடத்திலிருந்து நான் பூமியை நோக்குகையில் நான் சுமார் 500 கஜ உயரத்தில் இருந்தேன். அச்சமயம் நான், "ஐயோ! தெய்வமே! இப்போது காற்றுச் சற்று வலிவாக வீசுமானால் நான் என்னுயிரை இழப்பேனே. தற்சமயம் எனக்குண்டாயுள்ள பயமே என்னைக் கீழே தள்ளிவிடும்போல் தோன்றுகிறதே. உன்னை யொழிய ஒருவரையும் நான் நம்பவில்லை. இச்சமயம் என்னைக் காப்பாற்ற வேண்டும்," என்று கடவுளை நோக்கிக் கூறி, மனம் மிகவருந்தினேன். ஆனால், யோக்கியதையுடைய ஓர் சிறுவன் என்னிடம் வந்து என்னை யெடுத்துத் தன் ஜோபிகளில் ஒன்றில் போட்டுக்கொண்டு பத்திரமாய்க் கீழே இறங்கினான்.

நான் மேற்கூறிய குரங்கு என் தொண்டையி லடைத்த அழுக்கான தின்பண்டத்தை இன்னும் விழுங்காமையால், மிகவும் திகைப்புற்று அதிக துன்புறவே

ஞயினேன். ஆனால், என் பிரியமுள்ள செவிலித்தாய் அவ் வழுக்குப் பண்டத்தை ஓரு சிறிய ஊசியினால் என் தொண்டையிலிருந் தெடுத்தாள். பிறகு நான் வாந்தி எடுத்தேன். அப்போது எனக்கு அதிக சௌக்கிய முண்டாயிற்று. ஆனாலும், எனக்கு அதிக பலவீனமாயினமையாலும் அக்குரங்கு என்னைப் பிடித்த பிடியினால் என் தேகத்தின்கண் ணெல்லாம் மிக்க நோயுண்டாயினமையா லும், நான் பதினைந்து நாள் வரையில் என் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. அரசர், அரசி, மற்றையோர் யாவரும் அடிக்கடி ஆள் அனுப்பி என் தேக சௌக்கி யத்தை அறிந்து கொண்டிருந்தார்கள். அரசியார் மாத் திரம் என்னைப் பன்முறைத் தாமே வந்து பார்த்துக்கொண் டும் போனார்கள். பின்னர் நான் சௌக்கிய மடைந்ததும் அரசர் ஆக்கினையின்படி அக் குரங்கு கொல்லப்பட்டது. அன்றியும் அவ்வித மிருகங்களை இனி யாவரும் அரண் மனையின்கண் வளர்க்கலாகா தென்று எல்லோரும் அறி வுறுத்தப் பட்டார்கள்.

நான் தேக சௌக்கிய மடைந்ததும், அரசரிடம் என் அன்புள்ள வந்தனங்களை யளிக்கச் சென்றேன். அவர் என்னைக் கண்டு புன்னகை கொண்டு நான் குரங்கி னிடம் நெடுநேரம் அகப்பட்டிருந்த விஷயத்தைக் குறித்து என்னிடம் பேசத் தொடங்கினர். அவர் என்னைக் கீழ்வரு மாறு வினவினர். "நீ குரங்கின் வசத்திலிருந்த போது உனக்கென்ன எண்ணங்கள் உண்டாயின? அஃது உனக் களித்த தின்பண்டம் உனக்குப் பிரியமா யிருந்ததா? அஃது அத் தின்பண்டத்தை உன் வாய்க்குள் நுழைத்த போது உன் தேகம் உனக்கு எவ்வாறிருந்தது? நீ கூரை

யின் மீதிருந்தபோது குளிர்ந்த காற்றுட் கொண்டனையா? நீ உன் சுயதேசத்தில் அவ்வாறே ஓர் குரங்கினிடம் அகப் பட்டுக் கொண்டிருந்தால் அப்போது நீ என்ன செய்திருப் பாய்?" நான் அவர் வினுக்களுக்குக் கீழ்வருமாறு விடை யளித்தேன். "அரசே! ஐரோப்பா கண்டத்தின்கண் குரங்குகள் இருத்தலே வெகு அருமை. ஆனுல், வேறு தேசங்களிலிருந்து வேடிக்கைக் காட்டும் நிமித்தம் சில வேளைகளில் அவைகள் அங்கே கொண்டுவரப் படுவதுண்டு. அக் குரங்குகள் மிகச் சிறியவையா யிருப்பதால் அவை கள் எனக்குத் தீமை மாத்திரம் விளைக்க வருமாயின் அவற் றில் பன்னிரண்டை யொன்ருக ஏககாலத்தில் அடித்துக் கொல்ல என்னுல் முடியும். ஆனுல், இக் குரங்கோ எமது தேசத்திலுள்ள ஓர் பெரிய யானையைப் போலிருக்கின்றது. அவ்வாறிருப்பினும், அம் மிருகம் முதலில் தன் கால்களை என் அறைக்குள் நுழைத்த போது நான் மாத்திரம் சற்று தைரியமாய் என் உடைவாளை எடுத்திருப்பேனுயின் அதற் குத் தக்க தண்டனை யளித்து அதனைப் பயந்தோடுமாறு செய்திருப்பேன்."

நான் உரைத்ததைக் கேட்டு அரசர் பெரிதும் நகை யாடினுரே யன்றி எனக்கு அத்துணைய தைரியம் உண் டென்று தாம் சிறிதும் நம்பவேயில்லை. அவர் நகைத்தமை தாம் தமது தேசத்தில் அடையும் சிறப்பினைக் காட்டினும் அதிகமா யிருந்தது. அச் சமயந்தான் மனிதர்கள் தங்க ளுக்கு ஒப்பற்றவ ரிடத்தில் தங்கள் மேம்பாட்டினைத் தாமே புகழ்ந்து கூறுதல் எத்துணைய பேதைமை யுடைத் தென்று நான் அறியலானேன். ஆனுல், நான் இங்கிலாந் திற்குத் திரும்பி வந்ததும் அத்தகைய மனித ஞெருவனைக்

கண்டேன். அவன் உயர் பிறப்பு, இயற்கையுணர்வு, நுண்ணறிவு, பேரழகு முதலியவை ஒன்றும் தன்னிடத்தில் இல்லாதிருந்தும் தன் இழிவினைத் தானே உணரமாட்டாதவனாய்ச் சகல சிறப்புக்களையும் பெற்றவன் போல் நடித்துப் பெருஞ் சிறப்பினையுடைய பெரியார்பால் ஒருவரிடம் ஒப்பாகப் பேசிக்கொண் டிருந்தான்.

நான் பிரதிதினமும் அரண்மனையில் நகைப்பினை விளைவிக்கும் ஏதேனும் சரித்திரம் ஒன்றைச் சொல்லாமலிருப்பதேயில்லை. என் செவிலித்தாய் என்னை அளவு கடந்து நேசித்த போதிலும் நான் எச்சமயமேனும் ஏதேனும் தப்பிதம் செய்தால் அதனை அவள் கபடமாக மஹாராணியவர்களிடம் சொல்லாமலிராள். என் பிழையைக் கேட்டால் மஹாராணியவர்கள் பெரும் மகிழ்ச்சி யடைவார்களென்று அவள் எண்ணியிருந்தாள். ஓர் நாள் அவளுக்குத் தேகம் அசௌக்கியமாயிருந்ததால் தான் நல்ல காற்றுட்கொள்ளுமாறு தான் தன் உபாத்தியாயினியுடன் முப்பது மைல் தூரம் சென்றிருந்தாள். அப்போது அவள் என்னையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு போனாள். பிறகு அவர்களிருவரும் ஓரிடத்தி லிறங்கி நிலங்களின் மத்தியில் செல்லும் ஓர் வழியில் சற்றுநேரம் சென்றுகொண் டிருந்தார்கள். அவர்கள் என்னை மாத்திரம் என் பெட்டியிலேயே வைத்துவிட்டுச் சென்றார்கள். நானும் அவர்கள் பின்னால் உலாவச்சென்றேன். வழியில் சேற்றுக்குழி ஒன்றிருந்தது. நான் அதனைத் தாண்டிச் செல்லவேண்டுமென்று எண்ணி, நான் ஓர் ஓட்டம் ஓடிவந்து அதனைத் தாண்டும்போது நான் அக்குழியில் விழுந்து என் முழங்கால் வரையில் அதற்குள் அகப்பட்டுக்கொண்டேன். அப்போது நான் அதிலிருந்து

மேலே ஏறி வருவதற்கு எத்தனித்துக்கொண் டிருக்கையில் வேலைக்கார னொருவன் ஓடிவந்து என்னைக் குழியிலிருந் தெடுத்தான். பிறகு அவன் தனது கைக்குட்டையால் என் தேகத்தில் பட்டிருந்த சேற்றையெல்லாம் நன்றாகத் துடைத்தான். அதன் பிறகு என் செவிலித்தாய் தான் திரும்பி வரும் வரையில் என்னை என் பெட்டியிலேயே அடைத்து விட்டுப் போனாள். நாங்கள் அரண்மனைக்குத் திரும்பிவந்ததும் அந்த வேலைக்காரன் நான் செய்த காரியத்தை மஹா ராணியவர்களுக்கு அறிவித்தான். அவர்கள் சிலநாள் வரையில் அதனை நினைந்து நினைந்து நகைத்துக்கொண் டிருந்தார்கள்.

## ஆறும் அத்தியாயம்

நான் அரசரையும் அவர் தம் உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும் வாரத்திற் கொருமுறை அல்லது இருமுறை போய்ப்பார்ப்பது வழக்கம். அச்சமயங்களில், அரசர் ஓர் அம்பட்டனிடம் க்ஷௌரம் செய்து கொண்டிருப்பதையே நான் அநேகமாய்க் காண்பது வழக்கம். அவரை நான் அங்ஙனம் முதலில் கண்டபோது எனக்கு அதிக பயமுண்டாயிற்று. ஏனென்றால், அந் நாவிதன் வைத்திருந்த கத்தி நமது தேசத்துச் சாதாரண அரிவாள் இரண்டின் நீளமிருந்தது. அவ்வரசர் தம்தேசத்து வழக்கப்படி வாரத்திற் கிருமுறைதான் க்ஷௌரம் செய்துகொள்ளுதல் வழக்கம். ஒரு சமயம் நான் மேற்கூறிய நாவிதனிடமிருந்து தான் வைத்திருந்த சவக்கார நுரையில் சிறிது வாங்கி அதனால் சரைத்துத் தள்ளப்பட்ட மயிர்களில் வலி

வான சிலவற்றை எடுத்துக்கொண்டேன். பிறகு, நான் நேர்த்தியான மரத்துண்டொன்றை யெடுத்து அதனை ஒரு சீப்பைப்போலச் செதுக்கி, அதில் ஒரே அளவான விடங்களில் ஒரு சிறிய ஊசியால் பலதுவாரங்கள் செய்து, அத்துவாரங்களில் நான் மேற்கூறிய மயிர்களை ஒழுங்காக அமைத்துப் பின்னர் அம்மயிர்களின் நுனிகளை யெல்லாம் என் கத்தியால் ஒரு மட்டமாகச் செய்து, நான் மிக நேர்த்தியான சீப்பு ஒன்று எனக்குச் செய்துகொண்டேன். அச்சமயத்தில், எனக்கு ஓர் சீப்பு அவசியம் வேண்டியதாகவே யிருந்தது. ஏனென்ருல், நான் வைத்திருந்த சீப்பின் பற்கள் உடைந்து அப்போது அது பயன்படாமலிருந்தது. நான் அவ்வாறு சீப்புச்செய்து கொள்ளாம லிருந்தால் அத்தேசத்தில் எனக்குப் பொருத்தமான சீப்பு வேறு யார் செய்து கொடுப்பார்கள் ?

நான் என் ஓய்வு காலங்களை எவ்வாறு சந்தோஷமாகக் கழித்தே னென்பதை ஈண்டு உரைக்கின்றேன். மஹாராணியவர்களுக்கு வழக்கமாய் தலைவாருபவளை, தான் கீழே போட்டு விடுகிற சிக்கு மயிர்களை யெல்லாம் எனக்கு அளிக்குமாறு வேண்டிக்கொண்டேன். அவளும் எனக்கு அவ்வாறே தினந்தோறும் ஈந்துவந்தாள். பின்னர் போதுமான அளவு சேர்ந்ததும் நான் எனக்குப் பெட்டி செய்து கொடுத்தவனிடம் சிறிது நேரம் யோசனை செய்து, பின்னர் அவனை இரண்டு நாற்காலிகள் என் பெட்டியிலிருப்பவற்றைக் காட்டிலும் சிறியனவாய்ச் செய்து, அவற்றில் சாய்மானமும் இருக்கையும் அமைக்கவேண்டிய விடங்களில் சிறு துவாரங்கள் வைத்துக் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவன் அவ்

வாறே செய்து கொண்டு வந்து கொடுத்ததும் நான் அச் சிறு துவாரங்களில் மேற் கூறப்பட்ட மயிர்களில் வலிவான வற்றை யெடுத்து ஒழுங்காக அமைத்து, இங்கிலாந்தி லுள்ள பிரம்பு நாற்காலிகளைப் போல் இரண்டு செய் தேன். பின்னர் நான் அவ்விரண்டு நாற்காலிகளையும் மஹாராணி யவர்களுக்குப் பரிசாக அளித்தேன். அவர் கள் அவற்றைத் தமது நகைப் பெட்டியில் வேடிக்கைச் சாமான்களாக வைத்துக் கொண்டார்கள். அந்நாற்காலி களைக் கண்டோர் அனைவரும் மிக்க வியப்பும் களிப்பும் கொண்டார்கள். உண்மையாகவே, அவை வெகு விசித்திர மாகக் காணப்பட்டன.

மஹாராணியவர்கள் என்னை அந் நாற்காலிகளின் மீது அமரும்படி என்னிடம் கூறிய போது நான் ஒரே முடிவாக அவ்வாறு ஒருபோதும் செய்யமாட்டே னென்று அவர்களிடம் மொழிந்தேன். நான் அவ்வாறு கூறியதற்கு காரணம் காட்டினேன். கீழ்வருமாறு "அம்மணி! நான் என் இன்னுயிரை இப்போதே இழப்பதா யிருந்தாலும் இழப் பேன். அன்றியும் நான் ஆயிர மரணங்களை யடைவதா யிருப்பினும் சிறிதும் அஞ்சேன். ஆனால், என் தேகத்தின் இழிவான பாகத்தை மஹாராணியவர்களின் சென்னியில் ஒரு காலத்திருந்த மகிமையுள்ள மயிர்களின்மீது எவ்வாறு வைத்து உட்காருவேன்! நான் அத்தகைய காரியத்தை மாத்திரம் எப்போதும் செய்ய மனந்துணியேன். அம்மணி! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்." யந்திரத் திற் குரிய வேலைகள் செய்வதில் எனக்குப் புத்தி மிகுதியா யிருந்தமையால் நான் அம் மயிர்களில் இன்னும் சிலவற் றைக்கொண்டு ஐந்தடி நீளமுள்ள வேடிக்கையான ஓர்

சிறிய பை செய்து, பின்னர் மஹாராணியவர்களின் சம்மதி பெற்று, அவர்கள் திருநாமத்தை அப் பையின் மேல் பொன் னெழுத்துக்களால் எழுதி, அதனை நான் என் செவிலித்தாய்க்கு வெகுமானமாக அளித்தேன். அது அத் தேசத்து நாணயங்களைத் தாங்காததலால் அது பயனைக் குறித்தன்றி வேடிக்கையின் நிமித்தமே செய்யப்பட்டதென்று எல்லோரும் அறிந்தார்கள். ஆதலால் என் செவிலித்தாய் அதனை வேடிக்கைச் சாமானாகவே வைத்துக் கொண்டாள்.

மஹாராணி யவர்களுக்குச் சங்கீதத்தில் விருப்பம் மிகுதியா யிருந்தமையால் அவர் தமது அரண்மனையில் அடிக்கடி பலவித சங்கீத வாத்தியங்கள் வைத்தல் வழக்கம். அச் சமயங்களில் என் செவிலித்தாய் என்னை என் பெட்டியில் வைத்து அங்கே நடைபெறும் சங்கீத கச்சேரிகளுக்குக் கொண்டுபோவாள். அவ்விடத்தில் நான் நன்றாய்ச் சங்கீதத்தைக் கேட்குமாறு அவள் என்னை என் பெட்டியோடு ஒரு மேஜையின்மீது வைப்பாள். ஆனால், அச் சங்கீத வொலி மிகுதியா யிருந்தமையால் பாடப்பட்டவை இன்னதென என்னால் அறிய முடியவில்லை. அப்போது அரசர் படையிலுள்ள முரசு, முருடு முதலிய எல்லா வாத்தியங்களும் ஒருங்கு வாசிக்கப்பட்டாலும் கேளாத ஒரு பெருஞ் சப்தம் எனக்குக் கேட்கும். ஆதலால், நான் வாத்தியக்காரர்கள் இருக்கையை விட்டு என்னை என் பெட்டியோடு வெகு தூரம் கொண்டுபோய் வைக்கும்படி என் செவிலித்தாயைக் கேட்டுக் கொள்வேன். அவளும் அவ்வாறே செய்வாள். நான் அப்போது என் பெட்டியின் கதவுகளையும் சாளரங்களையும் மூடிவிட்

டுச் சாளரங்களின் திரைச் சீலைகளை மாத்திரம் திறந்து அச் சங்கீதத்தைக் கேட்பேன். அப்போதுதான் அந் நாட்டுச் சங்கீதம் எனக்குக் கேட்க இனிமையா யிருக்கும்.

நான் என் சிறு வயதில் ஹார்மோனியப் பெட்டி வாசிக்கச் சிறிது கற்றுக் கொண்டிருந்தேன். என் செவிலித் தாய் அவ்வித பெட்டி யொன்று வைத்திருந்தாள். அவளுக்கு அப் பெட்டியை வாசிக்கக் கற்றுக் கொடுப்பதற்கு ஓர் ஆசானிருந்தான். அவன் வாரத்திற் கிருமுறை வந்து அவளுக்கு வாத்தியம் வாசிக்கக் கற்பிப்பான். என் செவிலித்தாய் கற்றுக் கொண்ட வாத்தியத்தை நான் ஹார்மோனிய வாத்திய மென்று தான் எண்ணிக் கொண்டேன். ஏனெனில், அதன் தோற்றம் ஏறக்குறைய ஹார்மோனியத்தைப் போன்றே இருந்தது. மேலும் அவ் வாத்தியம் அப் பெட்டியைப் போலவே வாசிக்கப்படுவதாயு மிருந்தது. நான் மஹாராஜா, மஹாராணி இவர்களிருவருக்கும் இங்கிலாந்து இராகமொன்று அவ்வாத்தியத்தில் வாசித்துக் காட்டவேண்டு மென்று எனக்கு விருப்பம் நிகழ்ந்தது ஆனால், அது என்னால் செய்யக்கூடிய காரியமாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், அந்த ஹார்மோனியப் பெட்டி சுமார் அறுபதடி நீளமும் அதன் ஒவ்வொரு சாவியும் ஓரடி அகலமும் இருந்தது. ஆதலால், நான் என் இரு கரங்களையும் நன்றாய் நீட்டின போதிலும் அப்பெட்டியின் ஐந்து சாவிகளுக்குமேல் என்னால் எட்டமுடியாது. எட்டக் கூடிய சாவிகளிலும் ஒன்றை யழுத்த வேண்டுமானல் நான் என் கைட்முட்டியால் அதனை வலிவாக அடிக்க வேண்டியதா யிருந்தது. அன்றியும் அவ்வாறு செய்யினும் அதில் ஒன்றும் பயனின்மையால், நான்

அவ்வாத்தியத்தை அவ்வாறு வாசித்தல் கூடாதெனத் தீர்மானித்தேன். பின்னர், நான் அப்பெட்டியினை வாசித்த தற்குக் கீழ்வரும் உபாயத்தினைக் கண்டுபிடித்தேன். அஃதாவது, நான் நமது தேசத்துச் சாதாரண பெரிய தடிகளைப் போன்ற இரண்டு வட்டமான தடிகள் வருவித்து அவைகளின் ஓர் முனையைமாத்திரம் கனமாக்கும்படி கூறினேன். பிறகு, நான் அந்தக்கனமுள்ள பாகங்களில் எலித்தோலின் துண்டுகளைச் சுற்றிக் கட்டினேன். அஃதேனெனின், நான் அங்ஙனம் செய்வதால் அப்பெட்டியின் சாவிகள் பழுதாகாமலும், அது வாசிக்கப் படுங்காலத்து வரும் சப்தம் தடுக்கப்படாமலும் இருக்கும் பொருட்டாம். நிற்க, அப்பெட்டியினெதிரில் அதன் சாவிகளுக்கு நாலடி தூரத்தின் கீழ் நான் ஒரு பலகை போடும்படி சொல்லிப் பின்னர் நான் அதன் மீதேறி நின்று கொண்டேன். நான் அந்தப் பலகையின் மேலேயே என்னால் இயன்ற வரையில் இருபக்கங்களிலும் ஓடி, வாசிக்க வேண்டிய சாவிகளை என் இரு தடிகளாலும் அடித்து, வாத்தியத்தை வாசித்துக் காண்பித்தேன்.

நான் முற்கூறிய வண்ணம் அத்தேசத்து அரசர், பிறரை அறியுந்திறம் பெரிதும் பெற்றிருந்தமையால், அவர் என்னைப் பன்முறை எனது பெட்டியில் கொண்டு வந்து தமது மேஜையின் மீது வைக்கும்படி என் சேவிலித்தாய்க்குக் கட்டளையிடுவார். பின்னர், அவர் என்னை என் நாற்காலிகளின் ஒன்றின்மீது தமக்குச் சமமாக அமர்ந்து கொள்ளும்படி என்னிடம் கூறுவார். அதன் பின்னர் அவர் என்னிடம் ஏதேனும் சம்பாஷணை புரிவார். இவ்விதமாக அவர் என்னிடம் அநேக சம்பாஷணைகள் புரிந்திருக்கிறார்.

நான் ஓர் நாள் அவருக்குக் கீழ்வருமாறு துணிந்து சொல்லுவேனுயினேன். "அறிவுள்ள அரசே! தாங்கள் ஐரோப்பா கண்டத்தின் மீதும் ஏனைய கண்டங்களின் மீதும் தாழ்ந்த அபிப்பிராயங் கொண்டிருத்தலால் தங்கள் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் உளவாக எனக்குத் தோன்றவில்லை. மக்கள் உருவத்தில் சிறியரா யிருந்தால் சிற்றறிவும் பெரியரா யிருந்தால் பேரறிவும் பெற்றிருப்பர் என்பது தங்கள் கருத்தென்று தெரியவருகிறது. அது முற்றிலும் தவறென்று அடியேன் திண்ணமாய் உரைக்கக்கூடும். எங்கள் தேசத்தில் நான் கண்டவரையில் அதிக உயரமுள்ள மனிதர்கள் தான் மிக்க குறைவுள்ள அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, இவ்வுலகின் கண்ணுள்ள மனிதர் நீங்கலான மற்றைய ஜீவராசிகளுக்குள் தேனீக்களும், எறும்புகளுமே எல்லாவற்றைக் காட்டினும் சுறுசுறுப்பும் புத்திநுட்பமும் வாய்ந்த பிராணிகளென்று அனைவரும் கண்கூடாகக் கண்ட விஷயம். என் அன்புள்ள அரசே! தாங்கள் என்னை எவ்வளவு தாழ்மையாகக் கருதிய போதிலும் இச் சிறியேனாலும் தங்களுக்குப் பயனுள்ள பணி ஏதேனும் செய்ய இயலுமென்பதை மாத்திரம் தாங்கள் அறிந்து கொள்ளுங்கள்.' அரசர் நான் இவ்வாறு கூறியதைக் கேட்டு என்மீது முன்னிலும் மேலான அபிப்பிராயங் கொண்டனரே யன்றி தாம் சிறிதுஞ் சினங்கொள்ளவில்லை.

பிறகு அவ்வரசர் என்னைக் கீழ்வருமாறு கேட்டனர். "நல்லது, உங்கள் நாடாகிய இங்கிலாந்தின் அரசாட்சியினைப் பற்றி உன்னால் இயன்றவரையில் சொல் பார்ப்போம். ஏனெனில், உங்கள் நாட்டின்கண் ஏதேனும் நற்பழக்கங்

கள் இருப்பின் அவற்றை நான் இத்தேசத்திலும் வைத்துக் கொள்ளலாமென்று எண்ணுகின்றேன்." வாசிப்பவரே! நான் அச்சமயம் என் சுயதேசத்தைக் குறித்து அதனுடைய சிறப்பிற்கும் புகழிற்கும் ஏற்பக் கூறுதற்கு நான் ஒரு வாக்குச் சாதுர்யமுள்ள பண்டிதனாயில்லாமையைப் பற்றி எவ்வளவு மனம் வருந்தினேனென்பதை நீங்களே அறியலாம்.

பின்னர், நான் அவ்வரசரிடம் கீழ்வருமாறு மொழிந்தேன். "மதியுள்ள மன்னரே! எங்களுக்கு மூன்று இராச்சியங்கள் இருக்கின்றன. அவை மூன்றும் இரண்டு தீவுகளில் அடங்கியுள்ளன. அவை மூன்றும் ஏகச் சக்கரவர்த்தியினால் அரசாளப்பட்டு வருகின்றன. அவை பூமி வளப்பத்தினும் மாந்தர் சுக வாழ்க்கையினும் மிக்க பெருமை வாய்ந்துள்ளன. எங்கள் நாட்டில் மஹா மந்திரசபை என்று ஓர் சபையுளது. அச்சபையில் இருதிறத்து மாந்தர் இருக்கின்றனர். ஒரு திறத்தார் மிக்க கீர்த்தி வாய்ந்த பெரிய பிரபுக்களாயும், உயர்குலத்திற் றோன்றினவராயும் இருக்கின்றனர். அவர்கள், மன்னர்க்கு மதியுள்ள யோசனைகள் சொல்லுமாறும், இராச்சியம் செவ்வனே நடைபெறுதற்கேதுவாய ஏற்பாடுகள் செய்யுமாறும், தாங்கள் இளமைப் பருவத்திலேயே பலகலைகளும் நன்கு போதிக்கப்படுகின்றனர். அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாய நியாய சபையின்கண் அங்கிகளாயுமிருக்கின்றனர். அந்த நியாய சபையார் எதனைக் கூறினாலும் அதே வாய்மையாக அனைவராலும் கருதப்படும். அவர் தம் திறமையானும் நுண்ணறிவானும் தம் இறைவர்க்கும் மற்றைய மாந்தர்க்கும் எத்தகைய தீமையும் வாராமல் பாதுகாக்கச் சித்தமாயிருக்கின்றனர்."

"அவர்கள் எங்கள் நாட்டில் எய்தும் சிறப்பு இத் தன்மைத்தென்று உரைக்கற் பாலதன்று. அவர்கள் தங் கள் முன்னோர்கள் எவ்வண்ணம் காரியங்கள் நிகழ்த்தி வந்தனரோ அவ்வண்ணமே அவை ஒரு சிறிதும் பிற மாமல் தாமும் இயற்றி வருகின்றனர். அம்முன்னோர்கள் சிறப்புற் றிருந்தது அவர் தம் நற்குண நற்செய்கைகளா லன்றி பிறவாற்றாலன்றாம் அத்துணைய சிறப்பு அவர் சந்ததியாராலும் எஞ்ஞான்றும் அடைபப்பட்டு வருகின் றது. நிற்க, நான் முற்கூறிய அச்சபையாருடன் மனத் தூய்மையுள்ள பல பெரியோர்களும் அங்கிகளாயிருக்கின் றனர். அப்பெரியோர்கள் அத்தியக்ஷ குருக்கள் (Bishops) என்னும் பட்டப் பெயருடையாராய், தங்கள் மதத்தைப் பலவாற்றானும் வளரச்செய்வதும், அம் மதத்தில் பற்றுள்ள மாந்தரை அதற்குரிய ஒழுக்கத்தை அநுசரிக்குமாறு ஏனையோரையும் செய்யுமாறு அவர் களுக்குப் பல நன்மைகள் செய்வதுமாக இவ்விரண்டு தொழில்களையுமே தங்களுக்கு முதன்மையான கடமை யாகக் கருதியிருக்கின்றனர். அவர்கள், குணமாட்சியி னையும் கல்விப் பெருமையினையும் கருதி அரசராலும் அவர் தம் அறிவுள்ள அமைச்சர்களாலும் ஆராய்ந் தெடுக்கப் படுவார்கள். அவர்கள் எல்லாக் குருக்களுக்கும், அல்லாத மற்றைய மனிதர்களுக்கும் ஆத்ம பிதாவாயிருந்து வருகின்றனர்."

"மேற்கூறப்பட்ட சபையிலிருக்கும் மற்றொரு திறத் தார் தமது பேராற்றலானும் உளமுறுதியானும் தேசப் பற்றானும் குடிகளின் நன்மைக்காக அக்குடிகள் அடை யும் பலவகைப்பட்ட துயர்களையும் அவர்களது உள்

ளைத் தெண்ணங்களையும் அரசர், அமைச்சர் முதலாயி ஞர்க்கு அறிவுறுத்தி, அவர்களை அவ்வவ் வமையத்திற் கேற்பக் குடிகளின் விருப்பத்தை நோக்கிச் சகல ஏற்பாடு களும் செய்யுமாறு நல்ல யோசனை சொல்லுதற்கு அக் குடிகளினுலேயே பல கிராமங்களிலும் நகரங்களிலும் ஆய்ந்தெடுக்கப்பட்டவர்கள்.''

"மேற்கூறப்பட்ட இவ்விருதிறத்தாரும் அரசரும் ஒன்று கூடிய சபையே எங்கள் தேசம் முழுமைக் கும் பெரியதாயும் பெரிய விசாரணைகளெல்லாம் செய் யப்படுவதாயு மிருக்கின்றது.''

"தவிர, அரசே! குடிகளில் பொருள்பெறுதல் விஷ யமாய்த் தமக்குத் தமக்குத்தான் சுதந்தர முள்ளதென்று கூறுவார்க்கு எவர்க்கு உண்மையாக அப்பொருள் சேர வேண்டுமோ அவர்க்கு அதனைச் சுதந்தரமாகச் செய் தற்பொருட்டும், ஒருவர் பொருளை ஒருவர் மோசஞ் செய்தால் அப்பொருளை அதனை யுரியானுக்கே மீளவும் சேர்த்தற்பொருட்டும், குற்றஞ் செய்பவரை செவ்வனே தண்டித்து மற்றையோர்க்கு நற்புத்தி புகட்டும்பொருட் டும், குற்றமுடைய ரல்லாரைப் பாதுகாத்து அவர்கள் சிறப்பினை எல்லோரும் அறியுமாறு செய்தற்பொருட் டும் எங்கள் நியாய சபைகளில் பேரறிவாளர் பலர் நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட் டிருக்கின்றனர். எங் கள் பொக்கிஷத்திலுள்ள பொருள் நன்ருகப் பாதுகாக்கப் பட்டு நல்ல வழிகள் பலவற்றிலும் செலவு செய்யப் பட்டு வருகின்றது. கடலிலும் பூமியிலும் நேர்ந்த போர் களில் எங்கள் தேசத்துப் போர்வீரர்கள் எந்நாட்டா ரும் வியக்குமாறு வெற்றிபெற் றிருக்கின்றனர். எங்கள்

தேசத்துக் குடித் தொகையைத் தாங்கள் அதன்கண்ணுள்ள பற்பல மதங்களின் தொகையைக் கொண்டும், இராஜாங்க விஷயமாய் ஏற்பட்டிருக்கும் பற்பல கூட்டங்களின் தொகையைக் கொண்டும் தாங்களே அறிந்து கொள்ளலாம்.''

இவையன்றி நமது தேசத்துப் பலவித விளையாட்டுகளையும் பொழுது போக்குகளையும் குறித்து எவற்றைச் சொன்னால் நமது தேசத்திற்குப் பெருமை அதிகமாயுண்டாகுமோ அவற்றை மாத்திரம் நான் அவ்வரசரிடம் கூறினேன். சுருங்கச் சொல்லுமிடத்து, நமது இங்கிலாந்து தேசத்தில் சென்ற சுமார் நூறு வருஷங்களாக நடந்த எல்லாக் காரியங்களின் வரலாற்றையும் மிகச் சுருக்கமாக நான் அவ்வரசரிடம் சொன்னேன் என்பதாம்.

இந்தச் சம்பாஷணை முழுமையும் ஒரே சமயத்தில் முடியவில்லை. அஃது அநேக மணி நேரம் அடங்கிய ஐந்து வேளைகளில் முடிவுபெற்றது. நான் என் சம்பாஷணையில் சொன்ன விஷயங்களை யெல்லாம் அவ்வரசர் அதிக கவனமாய்க் கேட்டது மன்றி, தாம் அவைகளை யெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதிக் கொண்டு, பின்னர் தாம் என்னைக் கேட்க விரும்பிய கேள்விகளை யெல்லாம் வேறு ஞாபகப் பத்திரங்களில் எழுதிக் கொண்டார்.

அவர் தாம் எழுதியவற்றைப் பரியாலோசித்து அவை ஒவ்வொன்றிலும் பல ஆசங்கைகளும், வினுக்களும், ஆக்ஷேபனைகளும் இருக்கின்றனவென்று தீர்மானங் கொண்டார். அதன் பின்னர் அவர் என்னைக் கீழ்வருமாறு வினவினார். ''உங்கள் நாட்டிலுள்ள பெரிய கண

வான்களுடைய புதல்வர்களின் புத்தியையும் தேகவலிமை யையும் விருத்தி செய்வதற்கு உங்கள் அரசனால் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன? அவர்கள் சாதாரணமாக முதலில் எத்தொழிலைக் கற்பிக்கப்படுகின் றனர்? ஏதேனும் ஓர் கனவானது குடும்பம் அழிவுற்ற போது கனவான்களினது கூட்டத்திற்கு வேண்டிய மனி தர்களை உங்கள் அரசர் எங்ஙனம் பெறுகின்றார்? புதி தாகப் பிரபுக்கள் கூட்டத்தில் அங்கிகளாகவிருக்க விரும்பு வோர் எத்தகைய திறமைகளை உடையவரா யிருத்தல் வேண்டும்? ஒருக்கால், அரசருக்கு ஒருவன் மீது பிரிய மிருந்தாலும், அரண்மனையிலுள்ள பிரதான மங்கையர்கள் எவருக்கேனும் ஒருவன் ஒரு பெருந்தொகை பணங் கொடுத்தாலும், அல்லது குடிகளின் விருப்பத்திற்கு மாறாகக் காரியங்கள் செய்ய ஒரு கூட்டத்தாரைச் சேர்ப் பதற்கு ஒருவன் முயற்சி செய்தாலும், அன்னவன் அப் பிரபுக்கள் சங்கத்தில் தானும் ஓர் அங்கியாகும் பேற்றினைப் பெறுவான் போலும்? நல்லது, இராஜாங்கத்தின் சட்டங் களைப் பற்றி அப் பிரபுக்களுக்கு எவ்வளவு ஞானம் இருக்க லாம்? குடிகளில் சொத்து விஷயமாய் ஏதேனும் ஆக்ஷேபனை யுண்டானால் உரிமையுடையானுக்கே அதனைச் சேர்த்தற்குப் போதுமான திறமை அவர்கள்பால் உளதா? அவர்க ளனைவரும் பேராசையுடைமை, பட்சபாத முடை மை, பொருள் பெறுதலுடைமை, லஞ்சம் வாங்கலுடை மை, கள்ளக்கருத்துடைமை முதலிய தீயகுணங்கள் ஒன் றேனும் தம்பால் இல்லாதிருக்கின்றனரா? அத்தியக்ஷ குருக்களென்று நீ முன்னர் கூறிய அப்பெரியாரனை வரும் தங்கள் மதவிஷயமாய் தாங்கள் எய்தியிருக்

கும் ஞானத்தினலும், தாங்கள் தூய்மையுடைய ராயிருக்கும் தன்மையினலுந் தான் அத் தகைய பதவியினை அடைந்திருக்கிறார்களா? அப்படியானல் அவர்கள் முதலில் சாதாரண குருக்களா யிருந்தபோது சமயத்திற் கேற்ற காரியங்கள் செய்திருப்பரன்றோ? இல்லையேல், சில கனவான்களுக்கு அடிமையுள்ள தாழ்ந்த குருக்களாக இருந்திருப்பரன்றோ? அப்படியானல் அவர் பின்னர் மேற்கூறிய பதவியை அடைந்தபோது அவர்கள்பால் முன்னர் இருந்த கொள்கைக ளெல்லாம் அவ்வாறே யிருக்குமே யன்றி மாறுதல் அடைந்திரா தன்றோ?"

"நீ கூறிய மற்றொரு திறத்தார் (ஜனப்பிரதி நிதி சபையார்) எத் திறமையை நோக்கி ஆராய்ந் தெடுக்கப் படுகின்றனர்? அந்நிய தேசத்தா னொருவன் ஓர் பெருந் தொகைப் பணம் ஓர் கிராமத்திலுள்ள குடிகளுக்கு லஞ்சம் கொடுப்பானயின் தங்கள் கிராமத்தில் மற்றெல்லோரை விடக் கல்விமானயும் அறிவாளியாயும் இருக்கும் மனிதனை நீக்கி, அக் குடிகள் அவனை அக் கூட்டத்துள் ஒருவனக நியமிப்பதுண்டோ? மனிதர்கள் அக் கூட்டத்தில் சேர்ந்து சம்பள மில்லாமலும் உபகாரச் சம்பளமில்லாமலும் தங்கள் குடும்பத்திற்கு எவ்வித நன்மை செய்தற்கு மியலாது வீணுகக் கஷ்டப்பட்டு உழைப்பதற்கு ஏன் விருப்பங் கொள்ளுகிறார்கள்? அவர்கள் பொது ஜனங்களின் நன்மைக்காகவே அவ்வளவு உழைக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அத்தகைய வைராக்கிய முள்ள மனிதர்கள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் கஷ்டத்திற்காக ஜனங்களின் பொது நன்மையைக் கெடுத்து வலிவற்ற நற்குணமில்லாத ஓரரசன் பால் சேர்ந்து தாங்கள் பொருள் பெறுதலுண்டோ?

அவ்வரசர் இன்னும் என்னைப் பலவித கேள்விகள் கிண்டிக் கிண்டிக் கேட்டுக் கொண்டும் அநேக ஆக்ஷேபனைகள் சொல்லிக் கொண்டும் இருந்தார். அவற்றையெல்லாம் நான் ஈண்டு கூறுதல் தகுதியுடைய தன்று.

பின்னர், அவ்வரசர் நமது தேசத்து நியாய ஸ்தலங்களைக் குறித்துச் சில கேள்விகள் கேட்க வேண்டுமென்று என்னிடம் கூறினர் நான் ஒரு சமயம் வியாச்சியம் செய்தபோது என் வழக்கு முற்றிலும் பொய் வழக்கென்றும் என் எதிரி செலவு செய்த பணத் தொகையையும் நான் அவனுக்குக் கட்டிக் கொடுக்கவேண்டு மென்றும், நியாயாதிபதி யவர்களால் தீர்மானிக்கப் பட்டமையின் அவ்வரசர் என்னைக் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க விடைகள் அளிக்க என்னால் அப்போது முடியு மல்லவா ? அவ்வரசர் என்னைக் கீழ்வருமாறு கேட்டனர்.

“உங்கள் நியாய ஸ்தலங்களில் ஒரு விஷயம் உண்மையுடைய தென்றேனும் பொய்ம்மையுடைய தென்றேனும் தீர்மானஞ் செய்யப் படுதற்குச் சாதாரணமாக எத்தனை தினங்கள் செல்லும்! அதுவரையில் வழக்காடுபவர்க்குச் சுமார் எவ்வளவு பணம் செலவாகும்? உங்கள் நியாய வாதிகள் (Advocates) ஒரு விஷயத்தை நியாயத்திற்கு விரோத மென்றும், அல்லது அது தீமை யுடையதென்றும் தாங்கள் செவ்வனே அறிந்திருந்தும் அஃது அந்நன மாகாதென்று தங்கள் மனசாட்சிக்கு விரோதமாக நியாய ஸ்தலங்களில் மயக்கிப் பேசுதற்கும் அனுமதி பெற்றிருக்கின்றார்களா? மதவிஷயமாகவும் இராஜாங்க விஷயமாகவும் ஏதேனும் வழக்கு வந்தால் அதுவும் அந்நியாய ஸ்தலங்களில் தீர்மானஞ் செய்யப்படுவதுண்டா? நிற்க,

நீ மேற்கூறிய நியாயவாதிகள் எல்லா மாந்தர்க்கும் பொது வான நியாயங்களைக் கற்பிக்கப் படுகின்றனரா? அன்றித் தங்கள் தேசத்திற்கும், தேச வழக்கத்திற்கும் அரசாங்கத் திற்கும் தக்கவாறு நியாயங்கள் கற்பிக்கப் படுகின்றனரா? இவர்களாயினும் மேற்கூறப்பட்ட நியாயாதிபதிகளாயி னும் தங்களுக்குத் தோன்றியவாறு தாங்கள் பேசுதற் கேற்ற சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டபோது அவை சம்பந் தமாகத் தாங்கள் ஏதேனும் அபிப்பிராயம் சொன்ன துண்டா? மேற்கூறப்பட்ட இருவகையாரும் ஒரு விஷ யத்தை ஒரு சமயத்தில் ஒருவிதமாகப் பேசி ஒரு விதமான தீர்மானஞ் செய்து, பின்னர் ஒரு சமயத்தில் அதே விஷ யத்தை வேறு விதமாகப் பேசி வேறுவிதமான தீர்மானஞ் செய்வதுண்டா? இவர்கள் பொருட் செல்வமுடையரா? அல்லரா? இவர்கள் ஒருவர் காரணத்தை யெடுத்துக் கொண்டு அவர் பக்கமாய்ப் பேசுதற்கும், தீர்மானஞ் செய் தற்கும் தாங்கள் ஏதேனும் பொருள் வெகுமானம் பெறு தலுண்டா?"

அதன் பின்னர் அவ்வரசர் நமது பொக்கிஷத்தின் சம்பந்தமாக என்னைக் கீழ்வருமாறு கேட்டனர்.

"உனக்குச் சரியான ஞாபக சக்தியில்லை யென நான் எண்ணுகின்றேன். ஏனெனில், உங்கள் தேசத்தில் வரி மாத்திரம் ஐம்பது அறபது லக்ஷ ரூபாய் ஒரு வருஷத் தில் வருமென்று உரைத்தனையே. அஃது எங்ஙனம் சாத் தியமாகும்? உங்கள் தேசத்தில் செலவழியும் பணம் மேல் வருவாய் வந்த தொகையைக் காட்டினும் இரு பங்கு அதிகமா யிருக்கிறதே. நீ கூறினது உண்மை யாயின் உங்கள் இராச்சியத்தில் வருவாய்க்குமேல்

பணம் எங்ஙனம் செலவழியும்? அவ்வாருயின், உங்கள் இராச்சியம் கடனுள்ளதாயன்ருே ஏற்படுகிறது. அப்படியானுல் ஓர் மனிதன் தன் சொத்துக்களையெல்லாம் தனக்குத் தோன்றியவாறு செலவு செய்வது போலன்ருே உங்கள் இராச்சியத்தின் தன்மை விளங்குகின்றது. நீங்கள் எவருக்குக் கடன் அளிக்க வேண்டியிருக்கிறது? அதனை நீங்கள் எவ்வாறு அளிப்பீர்கள்? நிற்க, போர்கள் அநேகம் உங்கள் நாட்டில் நிகழ்ந்தனவென்று உரைத்தனையே! அப்படியானுல் நீங்கள் போர் புரியுந் தன்மையைப் பெற்றவர்போலும்? இல்லையாயின், உங்கள் சமீபத்திலுள்ளார் அத்தகையார் போலும்? மேலும் உங்கள் சேனுதிபதிகள் அரசர்களைக் காட்டினும் தனவந்தராக வன்ருே இருத்தல்வேண்டும்? நீங்கள் உங்கள் நாட்டைவிட்டு வெளி நாடுகளுக்கு வியாபாரம் செய்யும் நிமித்தம் செல்லவேண்டிய தன்றி வேறு காரணங்கள் இருப்பானேன்? மேலும் உங்கள் தேசத்தில் சமாதானமும் குற்ற மின்மையும் நிறைந்திருக்கக் கூலிச்சேனை ஒன்று எப்போதும் இருப்பானேன்? உங்கள் தேசம் உங்கள் சம்மதியின்படியே நீங்கள் அனுப்பும் பிரதிநிதிகளின் மூலமாக ஆளப்படுகின்றதென்று கூறினுயே; அவ்வாருயின், நீங்கள் எவர் பொருட்டு அஞ்சுகின்றீர்களோ? அல்லது எவரிடத்தில் போர்புரிவீர்களோ? தவிர, ஒரு மனிதன் வீடு தன்னுலும் தன் மைந்தர் முதலியோராலும் தன் குடும்பத்தாராலும் எளிதாகக் காத்துக்கொள்ளப் படுவதொழிந்து, அற்பச் சம்பளம் வாங்கும் வீதிகளில் நிற்கும் பாதகர்களால் காக்கப்படுவதுபோல் பாசாங்கு செய்யப்படுவதேன்?''

அவ்வரசர் நான் நமது தேசத்து ஜனத்தொகையை நமது நாட்டின்கண் மதவிஷயமாகவும் அரசாங்க விஷயமாகவும் தோன்றியுள்ள பற்பல திறத்தாரின் தொகையைக்கொண்டு அறிந்து கொள்ளுமாறு அவரிடம் கூறியதைத் தாம் நினைந்து நினைந்து நகையாடினர். அவர் நமது தேசத்தில் பொது ஜனங்களுக்கு விரோதமாகக் கொள்கைகள் உடையார் சமயங்களுக்கேற்ப அவற்றை மாற்றுவதே னென்றும், அவ்வித மாறுபாடுள்ள கொள்கைகளை அவர்கள் வெளிப்படுத்துவதே னென்றும், என்னை வியந்து கேட்டனர். ஏனென்றால், மனிதர்களைப் பலவாறாக அபிப்பிராயங்கள் சொல்லும்படி இடங்கொடுப்பதால் அரசாட்சி கொடுங்கோலுடையதாவதல்லாமல் அரசாங்கத்திற்கே தீமையும் உண்டாகிற தென்று அவர் என்னிடம் கூறினர்.

நான் பின்னர் நமது நாட்டின்கண் ணுள்ள பிரபுக்களுக்குப் பொழுது போதற்கு ஏற்பட்டுள்ள விளையாட்டுகளில் சூதாட்டத்தைப் பற்றி அவரிடம் சொன்னேன். அதைக் கேட்டு அவர் என்னைக் கீழ்வருமாறு வினவினர்.

“நீ சொன்ன அச்சூதாட்டம் உங்கள் நாட்டு மக்களால் சாதாரணமாக எவ்வயதில் விளையாடப்படுகின்றது? எவ்வயதில் அவ்விளையாட்டு ஒழிக்கப்படுகின்றது? அவ்விளையாட்டு எவ்வளவு நேரம் ஆடப்படுவது வழக்கம்? அவ் விளையாட்டால் அவர்கள் தங்கள் பொருள்களை இழக்க நேரிடுவதுண்டோ? தாழ்ந்தோரும் தீயோரும் அவ் விளையாட்டில் தங்களுக்கு வாய்ந்திருக்கும் வன்மையால் அளவற்ற பொருளைச் சம்பாதிக்கின்றார்களா? சில வேளைகளில் மேற்கூறப்பட்டவர் பெரிய பிரபுக்களையும்

தங்கள் வசப்படுத்திக் கொண்டு அவர்களைக் கீழோரிடத்தும் சிநேகம் செய்துவைக்க மாட்டார்களா? அவர்கள் அப்பிரபுக்களின் சிந்தையைக் கெடுப்பதால் அப்பிரபுக்களும் தாங்கள் அடையும் நஷ்டத்தை நோக்கித் தாம் அவ்வாறு அடையாமலிருக்கப் பலவித தந்திரங்களும் சூதுகளும் கற்றுக்கொள்ள மாட்டார்களா?"

நான் நமது நாட்டில் சென்ற நூறு வருஷங்களாகச் சம்பவித்த செயல்களை அவ்வரசரிடம் கூறியதைக் கேட்டுத் தாம் மிக்க வியப்புற்றவராய் என்னிடம் கீழ்வருமாறு மொழிந்தனர். "நான் உன்னிடம் கேட்ட வாற்ருல் உங்கள் நாட்டில் பேராசை, கள்ளக் கொள்கை, கொடுமை, கோபம், பைத்தியம், பகைமை, பொருமை, காமம் முதலிய கெட்ட குணங்கள் எவ்வித கொடிய செயல்களைப் பிறப்பிக்குமோ அவற்றை யெல்லாம் பிறப்பித்தனவேயன்றி வேறல்லவென்பதை நான் நன்கு அறிகின்றேன்."

அவ்வரசர் நான் கூறியவற்றை யெல்லாம் அதிக கஷ்டத்துடன் தம் கவனத்திற்குக் கொண்டு வந்து, பின்னர் அவர் தாம் என்னைக் கேட்ட கேள்விகளையும், அவைகளுக்கு நான் அளித்த விடைகளையும் ஒத்துப் பார்த்து என்னைத் தமது கரங்களால் எடுத்து என் தேகத்தை மெதுவாகத் தடவிக் கொடுத்து என்னிடம் கீழ்வருமாறு உரைத்தனர். "கிரில்டிரிக்! என் சிறிய நண்பா! நீ உன் தேசத்தைக் குறித்து எவ்வளவு மேன்மையாகப் பேச வேண்டுமோ அவ்வளவும் பேசினுய். நீ கூறியதால் உங்கள் தேசத்தில் நீதிசாஸ்திரியாக வருபவர் அவர் தம் அறியாமையாலும், சோம்பலுடைமையாலும், தீச்செய்கையுடைமையாலும் அப்பதவியை அடைகிருர்க

ளென்று எனக்குத் தெரியவருகிறது. அல்லாமலும், எவ ரெவர் திடசித்தமில்லாமல் மனக் கலக்கம் அடிக்கடி கொள்கின்றனரோ அவர்களே எல்லாச் சட்டங்களையும் ஏற்படுத்தியதாகத் தெரிகின்றது. உங்கள் தேசத்தில் எந்த உத்தியோகத்தைப் பெற வேண்டுமானலும் அதற்குரிய சாமர்த்தியம் அவ்வுத்தியோகம் பெறுவோன் பெற்றிருத்தல் அவசியமல்லவென்று ஏற்படுகிறது. தவிர, உங்கள் தேசத்தில் மனிதர்கள் தங்கள் நற்குணங்களால் மேன்மையடைவதுமில்லை; குருக்கள் தங்கள் கல்வித் திறமையாலும் தெய்வ பக்தியாலும் சுகமடைவதுமில்லை; நியாயாதிபதிகள் தங்கள் நீதிதவருமையால் கீர்த்தி பெறுவதுமில்லை. அமைச்சர்கள் தங்கள் புத்திகூர்மையால் நல்லோராவது மில்லை; போர்வீரர்கள் தங்கள் தைரியத்தாலும், வலிமையாலும் ஜெயம் பெறுவதுமில்லை; ஆனல், நீ உன் வாழ்நாட்களில் அநேகம் பிரயாணங்கள் செய்வதில் கழித்தமையால் நீ உங்கள் தேசத்தில் நடந்த பல கெட்ட செயல்களைப் பாராமலிருக்கலாம். நீ கூறியவையாலும் நான் உன்னிடம் அதிக கஷ்டத்துடன் பெற்ற விடைகளாலும் நான் கடைசியாக அறிவது யாதெனில், உங்கள் தேசத்து ஜனங்கள், கடவுள் உலகில் இதுகாறும் சிருஷ்டியாத ஒருவித துன்மார்க்க மூட்டுப் பூச்சி வகையில் சேர்ந்தவர்கள் என்பதே.

# ஏழாம் அத்தியாயம்

நான் கீழ்வருவனவற்றைச் சொல்ல வேண்டியது அவசியமல்லவென்று எனக்குத் தோன்றியும் நான் அவற்றை ஈண்டு எழுதுவதின் காரணம் யாதெனின், உண்மை உரைக்க வேண்டுமென்னும் விருப்பம் என்பால் இருப்பதால் என்பதாம்.

நான் எப்போது வெகுளி கொண்டாலும் எல்லோரும் என்னை ஏளனஞ் செய்து நகையாடினரே யன்றி அதனால் நான் அடைந்த பயனொன்றுமில்லை. உயர்வும் சிறப்பும் ஒருங்கே பெற்ற என் அருமை அன்னை நாடாகிய இங்கிலாந்தும் பலவாறாக என் முன்னர் இகழ்ந்து பேசப்பட்டும் நான் மனம் பொறுத்து வாளா விருக்க நேர்ந்தமையை எண்ணி நான் கண்ணீர் விட்டேன். பின்னர் நான் அவ்வரசனை யாது செய்யத் திறமையுள்ளேன் ? இப்புத்தகத்தை வாசிப்போர் என்னைப்போல் அத்தேசத்திலிருக்கச் சமயம் நேர்ந்து, அத்தேசத்திலுள்ளோரும் நான் மேற் கூறியவாறு நமது தேசத்தை இகழ்ந்து கூறக்கேட்டால், அச்சமயம் அவர்கள் எவ்வளவு மனவருத்த மடைவாரோ அத்துணைய மனவருத்தட் நானும் உண்மையில் அடைந்தே னென்பதில் ஐயமில்லை.

அத்தேசத்து அரசர் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் மிக்க வியப்பும் உவப்பும் கொண்டமையால் அவரை எந்தெந்த விதங்களில் மனங்களிக்கச் செய்ய வேண்டுமோ அந்தந்த விதங்களி லெல்லாம் நான் அவரை மனங்களிக்கச் செய்தேன். அவ்வாறு நான் செய்திரேனாயின்

என்பால் நன்றிபாராட்டுந்தன்மையும், நல்லொழுக்கமும் இல்லையென ஏற்படும். அவ்வரசர் என்னைக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் நமது தேசத்தைச் சிறப்பித்தே வெகு தந்திரமாக விடைகள் அளித்தேன். ஏனெனில், எனக்கு எப்போதும் என் சுயதேசத்தின் மீது அதிக பற்றுண்டு. நான் நமது தேசத்திலுள்ள குற்றங்களை நீக்கி குணங்களை மாத்திரம் விரிவாக அவ்வரசரிடம் உரைத்தேன். ஆனால், நான் அவ்வளவு மேன்மையாக நமது தேசத்தைப் பற்றிப் பேசியதை அவ்வரசர் நம்பினதாக எனக்குத் தோன்றவில்லை.

அத்தேசத்து அரசர் தமது தேசமன்றிப் பிறதேசங்கள் உலகத்தி லிருப்பதாக எண்ணுமையாலும், ஏனைய தேசங்களின் வழக்கவொழுக்கங்கள் யாவையெனத் தாம் அறியாமையாலும், நான் மொழிந்ததை அவர் உண்மையென எண்ணுதல் மிகவும் அருமையே. ஆதலால், அவர் அநேக தவறுள்ள எண்ணங்கள் கொள்ளாமலிருப்பதற்கும், மரியாதை மிகுதியாயுள்ள நம் அரசர்களைப்போல அற்பசிந்தனைகள் செய்யாமலிருப்பதற்கும், அவரால் முடியுமென்று நாம் எண்ணச் சிறிதும் ஏதுவில்லை. நெடுந்தூரத்திலுள்ள அவ்வரசர் நன்மை, தீமை நல்லொழுக்கம் தீயொழுக்கம் முதலியவற்றைப் பற்றித் தாம் வேற்றுமையாக எண்ணியிருந்தார்.

நான் மேற்கூறியவாறு அவ்வரசர் தவறெண்ணங்கள் பெற்றிருந்தாரென்றும், மனிதர்களுக்குக் கட்டுப்பட்ட கல்வி இருத்தலினால் பலவித தீமைகள் விளைகின்றனவென்றும், கீழ்வரையப்பட்டுள்ள விஷயமொன்றே இனிது விளக்கும். நான் அவ்வரசரை என் வசப்படுத்

தும் பொருட்டு நான் கீழ்வருமாறு அவரிடம் சொன்னேன். 'அரசே ! எங்கள் தேசத்தில் ஒருவிதமான தூள் செய்யப்படுகிறது. அத்தூளை மலைபோன்ற ஒரு பெரிய குவியலாக்கினாலும் அதில் ஒரு சிறுபொறி நெருப்பு வைக்கப்படுமாயின் அவ்வளவு பெரிய குவியலும் ஒரு நொடியில் பற்றிக்கொள்ளும். பின்னர், அத்தூள்களெல்லாம் வானத்திலுண்டாகும் இடியைக் காட்டினும் பெரிய முழக்கஞ்செய்து ஆகாயத்தில் பறந்தோடும். மேற்கூறிய தூள்களில் தகுந்த அளவு இரும்பினாலாகிலும் செம்பினாலாகிலும் செய்யப்பட்ட ஒரு குழாய்க்குள் வைத்து உபயோகிக்கப்படுமாயின், அப்போது அதற்கு இரும்பினாலாயினும் ஈயத்தினாலாயினும் ஆக்கப்பட்டுள்ள ஒரு குண்டை அதிக வலிவாகவும் விரைவாகவும் வெளியே வெகுதூரம் வரையில் போகும்படி செய்வதற்குத் திறமையுண்டு. இவ்வித குண்டுகள் பெரியவையாகப் பல செய்து நான் மேற்கூறியவாறு எங்கள் தேசத்தார் உபயோகப்படுத்தி ஓர் யுத்த களத்திலுள்ள சேனை முழுமையையும் ஒரு நிமிஷத்தில் நாசமடையச் செய்வார்கள். இஃதன்றியும், அவர்கள் மிகுந்த வலிவுள்ள எவர்களையும் அவ்வாறே நாசமடையும்படி செய்வார்கள். மேலும், அவர்கள் அவ்வாறே ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஏறியுள்ள கப்பல்கள் பலவற்றையும் தண்ணீருக்குள் மூழ்கிவிடச் செய்வார்கள். தவிர, அவர்கள் அவ்வித குண்டுகள் பலவற்றை ஓர் சங்கிலியில் ஒன்று சேர்த்து நான் முற் கூறியவாறு செய்து கடலில் நடக்கும் யுத்தங்களில் அளவற்ற போர்வீரர்களை மாளச்செய்வார்கள். அவர்கள் ஏதேனும் ஒரு பட்டணத்தை முற்றுகைப் போடு

கையில் மேற் கூறப்பட்ட தூளை பெரிய போலான இரும்பு குண்டுகளில் போட்டு அவற்றை ஒரு யந்திரத் தினால் வெடிக்குமாறு செய்வார்கள். அப்போது அக்குண்டு களுக்கு எதிரிகளின் சேனை எல்லாவற்றையும் கொல்லுதற் கும், பட்டணத்திலுள்ள வீடுகளை யெல்லாம் இடித்து நாச மாக்குதற்கும், அருகில் வருபவர் எவரையும் தங்கள் மண்டைகள் கிழிய மாளச் செய்தற்கும் சக்தியுண்டு. அரசே! அத்தூள் செய்தற்கு என்னென்ன சாமான் கள் அவசியமோ அவைகளெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். மேலும் அச் சாமான்களெல்லாம் எளிதில் கிடைக்கத் தகுந்தவையே. அவைகளை நாம் அதிக கிரயங் கொடுத்து வாங்கவேண்டியதுமில்லை. அச்சாமான் களைத் தூள் செய்து ஒன்றாகச் சேர்க்க வேண்டிய வழியும் எனக்கு நன்றாகத் தெரியும். நான் மேலுரைத்த வண்ணம் குழாய்கள் தங்கள் தேசத்திற்குத் தகுந்த வண்ணம் செய் தற்குத் தங்கள் வேலைக்காரர்களுக்குக் கற்பிக்கவும் எனக் குச் சக்தியுண்டு. அக்குழாய்கள் நூறடி நீளத்திற்கு மேல் இருக்க வேண்டிய நிமித்தமில்லை. இத்தகைய குழாய்கள் இருபது முப்பதில் போதுமான தூளும் குண்டுகளும் வைத்துச் சுட்டால் தங்கள் இராச்சியத் திலுள்ள பெரிய பட்டணத்தின் சுவர்களெல்லாம் ஒரு நொடியில் இடிந்து கீழேவிழும். ஒருக்கால் தங்கள் குடிகள் தங்கள் அதிகாரத்தை அங்கீகரிக்காம லிருந்தால் தாங்கள் மேற்கூறப்பட்டவாறு குண்டுகள் போடும்படி ஏற்பாடு செய்து தங்கள் தலைமைப்பட்டணம் முழுமையையும் வெகு சீக்கிரத்தில் நாசமாக்கிவிடலாம்," என்று நான்

இவ்வாருக அவ்வரசர் எனக்குச் செய்த பலவித நன்மைகளுக்கும் என்னிடத்தில் காட்டிய விசுவாசத்திற்கும் பிரதி நன்றியாக அவரிடம் சொன்னேன்.

அந்த அரசர் நான் யந்திரங்களைப் பற்றிச் சொல்லிய விஷயங்களையும், பிறகு நான் அவருக்குக் கொடுத்த அபிப்பிராயத்தையும் கேட்டுத் தாம் அதிக திகிலடைந்தார். வலிவற்ற அற்ப பிராணியாகிய நான் அவ்விதக் கொடுமையான எண்ணங்களை எப்படிப் பெற்றேனென்றும், அந்த யந்திரங்களினுலுண்டாகிய நாசங்களையும் மரணங்களையும் நான் கண்ணாரக் கண்டும் சற்றேனும் அஞ்சாமல் எவ்வாறு இருந்தேனென்றும் அவ் வரசர் எண்ணி எண்ணி மிகப் பிரமித்தார். அதன் பின்னர் அவ்வரசர் என்னிடம் கீழ் வருமாறு சொல்லலானுர். "மனித ஜாதிக்கு விரோதமான ஒருகொடிய புத்திமான்தான் அத்தகைய சூழ்ச்சியினை முதலில் கண்டு பிடித்திருக்கவேண்டும். நூதனமாய்க் கண்டு பிடிக்கிற சில வித்தைகளில் மாத்திரம் எனக்குப் பிரியமிருந்தபோதிலும் நான் நீ கூறிய ஏற்பாட்டிற்கு இசைவதைக் காட்டினும் என் இராச்சியத்தில் பாதியை இழப்பேனென்பது சத்தியம் நீ இன்னொருமுறை அவ்வித விஷயங்களைப் பற்றி என்னிடம் பேசவே வேண்டாம்."

அற்ப சிந்தனையும் சுபாவமும் பெற்ற தன்மையினுல் வந்த அற்புத பயன் இதுபோலும்? ஓர் அரசன் மரியாதை, அன்பு, மதிப்பு முதலியவற்றைச் சம்பாதிக்கக் கூடிய நற்குணம் பொருந்தியிருந்தும் நாம்- இதுதானென்று அறிதற்கரிய ஓர் வீணை சமுசயங்கொண்டு, தான் எல்லா மனிதர்களுக்கும் சுயாதிபதியாக விருப்பதையும், எல்லா செளக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டிரு

பதையும், ஜனங்களின் சொத்துக்களுக்கெல்லாம் தானே எஜமானனுக இருப்பதையும் வீணுக இழப்பது? இங்ஙனம் இருப்பினும் அநேக நற்குணங்களைப் பெற்ற அம்மேலான அரசரை நான் தாழ்மையாகச் சொல்ல வேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆனுல், இதை வாசிப்போர் அனைவரும் அவரைக் குறித்துத் தாழ்மையாக எண்ணுவார்களென்பது திண்ணமே. ஆயினும், அத்தேசத்தி லுள்ளார்க்கு அக்குறை நேர்ந்ததின் காரணம் யாதெனின், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெரிய புத்திமான்கள் செய்ததுபோல இராஜாங்க முறைமையையும் சகல சாஸ்திரங்களில் ஒரு சாஸ்திரமாக அவர்கள் இது வரையில் செய்யாமை என்பதே. ஏனெனில், நான் ஒரு சமயம் அந்த அரசரிடம் சம்பாஷணை செய்த போது நான் எங்கள் தேசத்தில் இராச்சியத்தை ஆள வேண்டிய முறைகளைப் பற்றி அநேக ஆயிர புஸ்தகங்கள் எழுதப்பட் டிருக்கின்றன வென்று சொல்ல, அவர் நான் எண்ணியதற்கு விரோதமாக நம்மைப் பற்றி மிகத் தாழ்மையான அபிப்பிராயங் கொள்ளலானுர். அவர் ஒரு அரசனிடத்திலாயினும் அமைச்சனிடத்திலாயினும் எத்தகைய இரகசியமேனும் நாகரீகமேனும் தந்திரமேனும் எவ்வாற்ருனும் உளவாயிருத்தல் தகாதென வெறுத்துத் தாழ்மையாகக் கூறினர். பின்னர், அவர் பகைவரும், எதிர்க்கும் ஜனங்களும் இல்லாதிருக்க இராஜாங்க இரகசியங்கள் உண்டாயிருத்தல் எக்காரணம் பற்றியோவென்று என்னைக் கேட்டனர். தவிர, அவர் ஓர் இராச்சியத்தை ஆளுதற்கு அபாரமான அறிவு வேண்டியது அவசியமில்லையென்றும், சாதாரண அறிவும்,

அனைவரும் அறிந்த காரணமும், நியாயமும், சாந்தமும், நியாய அநியாயங்களின்படி விரைவில் செய்யும் தீர்மானமும் மாத்திரம் இருக்கவேண்டியது அவசியமென்று என்னிடம் கூறினர்.

அதன் பின்னர் என்னிடம் அவர் இன்னும் சில சாதாரண விஷயங்களைக் குறித்துப் பேசினர். அவற்றை இங்குச் சொல்லவேண்டிய நிமித்தமில்லை இரண்டு தானியப் பயிர்களை யேனும் இரண்டு புற்களின் தளிர்களை யேனும் அவை ஒவ்வொன்று வளர்ந்த இடத்தில் வளரச் செய்யத் திறமை வாய்ந்த ஒரு மனிதன் இராஜாங்க முறை அறிவோர் எல்லோரைக் காட்டினும் மானிடப் பிறவி எடுப்பதற்குத் தகுதியுடையவனென்றும், அவனே தன் தேசத்திற்கு மேலான நன்மை புரிபவனென்றும், அவர் தமது கருத்தை வெளிப்படுத்தினர்.

அத்தேசத்து ஜனங்களின் கல்வி மிகவும் குற்றமுடையது; ஏனெனில், அவாகள் கல்வியெல்லாம் ஒழுக்கம், சரித்திரம், பாடல், கணித சாஸ்திரம் இவற்றில்தான் அடங்கும். மேலும், இவற்றில்தான் அவர்கள் நிரம்பிய ஞானமும் பெறலாம். ஆனல், கணித சாஸ்திரம் கற்றல் சாதாரண வாழ்க்கைக்கு உபயோகப்படுதற்கும், பயிர் செய்தல், யந்திரவேலை செய்தல், இவற்றிற்குப் பயன் படுதற்குமே யன்றி பிறவிஷயங்களில் பயன் படுத்துதற்கு அல்லவாம். ஆதலால், நாம் அவ்விஷயத்தில் அவர்களைக் குறைவாக மதிப்போ மென்பதில் ஐயமில்லை. பெரிய சிந்தனைகளும் அபார ஞானங்களும் பெற்றிருத்தலையும், விஷயங்களைப் பிரித்துச் சொல்லவும், சுருக்கிச் சொல்லவும் திறமைப் பெற்றிருத்தலையும் அவர்கள் ஒரு பொருளாக எண்ணவே யில்லை.

அவர்கள் தேசத்தில் எந்தச் சட்டமும் தங்கள் பாஷையிலுள்ள எழுத்துக்களின் தொகைக்குமேல் வார்த்தைகளில் அதிகரித்தல் கூடாது. அவர்கள் பாஷையிலுள்ள மொத்த எழுத்துக்களோ இருபத்திரண்டு. அன்றியும், சில சட்டங்கள் மாத்திரம் அவ்வளவு வார்த்தைகள் அடங்கி யுள்ளனவா யிருக்கும். அச் சட்டங்களெல்லாம் யாவரும் நன்றாக அறியக் கூடிய எளியநடையில் எழுதப்பட்டிருக்கும். அப்படியிருப்பதனால் எவர்களாலும் அவைகளுக்கு வேறு விதமான பொருள்கள் கூறுதற்கு முடிவதில்லை. மேலும், எந்தச் சட்டத்தைப் பற்றியாயினும் யாராகிலும் வியாக்கியானம் எழுதினால் அவர் மரண தண்டனைக் குள்ளாதல் திண்ணம். தவிர, வழக்குகளைத் தீர்மானஞ் செய்வதிலும், குற்றவாளிகளைத் தண்டனை செய்வதிலும், உதாரணங்களைக் கொடுத்துப் பேசுதல் அதிக அருமையாதலால் அவர்களில் சாதாரண விஷயங்களில் தமது திறமையைப் புகழ்ந்துகொள்ளுதற்குக் காரணமில்லை.

அத்தேசத்தில் அச்சுயந்திரசாலைகளும் இருக்கின்றன. ஆனால், அவர்களுக்குப் பெரிய புத்தகசாலைகள் இல்லை. எல்லாவற்றிற்கும் பெரிதாயுள்ள அத்தேசத்து அரசருடைய புத்தகசாலையிலேயே ஆயிரம் புத்தகங்களுக்குமேலில்லை. அப்புத்தகங்களெல்லாம் 1200 - அடி நீளமுள்ள ஒரு சித்திரக்கூடத்தில் வைக்கப்பட் டிருக்கின்றன. அப் புத்தகங்களில் எனக்கு எது அவசியமா யிருந்தாலும் நான் அதை வாசிப்பதற்கு எனக்கு அனுமதியுண்டு. அரசியின் தச்சன் 25 - அடி உயரமுள்ள ஏணியைப் போன்ற ஒருவித யந்திரம் மரத்தினால் செய்தான். அதில்

ஒவ்வொரு படியும் 50 - அடி நீளம் இருந்தது. அந்த ஏணி நகரும்படியான இரட்டைப் படிகளை யுடையதாயிருந்தது. அதன் கடைசிபடி மேற்கூறிய புத்தகம் வைக்கப்பட்டுள்ள அறையின் சுவரிலிருந்து 10 - அடி தூரத்திலிருந்தது. நான் படிக்க இஷ்டப்பட்ட புஸ்தகம் சுவரில் தொங்க விடப்பட்டது. நான் முதலில் மேல்படியிலேறி என் முகத்தைப் புத்தகத்தின் பக்கமாகத் திருப்புவேன். பின்னர், நான் புத்தகத்தின் ஒரு பக்கத்தை மேலிருந்து வாசிக்கத் தொடங்கி வரிகளின் நீளத்திற்குத் தக்கவாறு வலது பக்கமும் இடது பக்கமும் சுமார் பத்து நடை நடப்பேன். இவ்வண்ணமே நான் பக்கத்தின் கடைசி வரையில் படித்து வருவேன் பின்னர், நான் மேல்படிக்குச் சென்று மறுபக்கத்தையும் மேலுரைத்தவாறு வாசிப்பேன் அப்புத்தகத்தின் ஏடுகளை என் இருகரங்களாலும் தள்ளுதற்கு என்னால் இயன்றது. ஏனெனில், அவை ஒவ்வொன்றும் கடுதாசிப் பலகையின் கனமும் முருடுமே இருந்தது.

அவர்கள் எழுதும் நடை தெளிவாகவும், எளிதாகவும் இனிமையாகவும் இருக்கின்றது. ஆனால், அவர்கள் பல அலங்காரம் வைத்து எவற்றையும் எழுதுவதில்லை. ஏனெனில், அவர்கள் பயனற்ற சொற்களையும், சொற்றொடர்களையும் உபயோகித்தல் கிடையாது. ஒழுக்கத்தைப் பற்றியும், தேசசரித்திரத்தைப் பற்றியும் எழுதப் பட்டுள்ள புத்தகங்களில் பலவற்றை நான் வாசித்துப் பார்த்தேன். ஏனைய சில விஷயங்களை நான் அறிதற் பொருட்டு என் செவிலித்தாய் (கிளம்டால்கிளிச்) படுக்கையறையில் எனக்கு ஒரு பழைய சிறு புத்தகம் கிடைத்தது.

அஃது ஆழ்ந்த கருத்தும் பெருந்தன்மையு முள்ள அவள் இராணியின் புத்தகம். அப்புத்தகம் நல்லொழுக்கத்தைப் பற்றியும் தேவபக்தியைப் பற்றியும் கூறுகின்றது. இன்னும் அது மனித சாதியின் வலிவின்மையைக் குறித்தும் கூறுகின்றது. அது பெண்பாலரும் கீழ்மக்களும் நீங்கலாக ஏனையோரால் அவமதிக்கப்பட்டு வருகின்றது. இப்புத்தக நூலாசிரியர் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நீதிசாஸ்திரிகள் வழக்கமாகக் கூறுகின்ற விஷயங்கள் எல்லாவற்றைப் பற்றியும் அதில் எழுதியிருந்தனர். அவை கீழ்வருமாறு. "மனிதன் எவ்வளவு சிறிய இழிவுள்ள வலிவற்ற மிருகமாக இயற்கையில் இருக்கின்றான்? அவன் காற்றிலுள்ள கொடுமைகளினின்று தப்பித்துக் கொள்ளுதற்கும் காட்டு மிருகங்களின் பயமின்றி சுகமாய் வாழ்தற்கும் அவனால் இயலவில்லை யல்லவா? அவனைக் காட்டிலும் ஒரு பிராணி வலிவு மிகுதியாகப் பெற்றும், ஒரு பிராணி துரிதம் மிகுதியாகப் பெற்றும், ஒரு பிராணி பருமன் மிகுதியாகப் பெற்றும் அன்றோ இவ்வுலகில் இருக்கின்றது. நாளாக நாளாக மனிதர்கள் முன்னிருந்ததைக் காட்டிலும் சிறியவர் சிறியவராகவே பிறந்து வருகின்றனர். முற்காலங்களில் மனிதர்கள் மிகப் பெரியவர்களாக இருந்தார்களென்று எண்ணுதல் மிகவும் நியாயமே. அக்காலங்களில் இராட்சதர்கள் இருந்திருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. இதிகாசங்களில் எழுதியுள்ளபடியும், கர்ணபரம்பரையாக சொல்லி வருகின்றபடியும், மேற்கூறியவை உண்மையென நம்புதற்கு இராச்சியத்தில் அநேக பாகங்களை நாம் தோண்டும்போது அடியிற் பிரமிக்கத்தக்க எலும்புகளும், தலையோடுகளும் காணப்படுகின்றன

வல்லவா ? உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களை நோக்க, நாமெல்லோரும் முதல் முதலில் இன்னும் பெரியவர்களாகத் தான் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறன்றி, கூரையிலிருந்து ஒரு ஓடு நம்மீது விழுந்த காலத்தும், அல்லது ஒரு பையன் நம்மீது ஒரு கல்லை எறிந்த காலத்தும், நாம் நாசமடைதற்கும், நாம் ஒரு சிற்ருற்றில் மூழ்கி மாண்டுவிடுதற்கும் காரணமான ஒரு தேகத்தையா நாம் முதலில் பெற்றிருப்போம்?'' இவ்விதமான காரணங்களுடன் அந்நூலாசிரியர் மனிதர் வாழ்க்கைக்கு உபயோகமான பல நல்லொழுக்கங்களைப் பற்றி எழுதியிருந்தனர். அவற்றையெல்லாம் ஈண்டுச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

அத்தேசத்து அரசனுடைய சேனையில் 176000 காலாட்களும் 36000 குதிரையாட்களும் அடங்கியுள்ளனவென்று அத்தேசத்தார் மிகவும் உயர்வாகச் சொல்லிக் கொள்ளுகிருர்கள். அதன்கண் அடங்கியுள்ள போர்வீரர்கள் அனைவரும் பல பட்டணங்களிலுள்ள வியாபாரிகளும், பல கிராமங்களிலுள்ள வேளாண்மைக் காரர்களுமே அன்றி பிறரல்லர் ; சேனைத் தலைவர்களோ சம்பளமும் வெகுமானமும் இன்றி வேலை பார்க்கும் பெருந்தன்மை யுடையராய் உயர்குலத்திற் ருேன்றினவரே யன்றி ஏனையோ ரல்லர். இத்தகைய சேனையை அந்நாட்டார் ஒரு சேனையென்று கருதுதலே மிகுந்த வியப்பாகும். அப்போர்வீரர்கள் அனைவரும் தங்கள் தொழிலுக்குத் தக்க திறமையெற்று முறைப்படி தங்கள் வினைகளை முடிக்கின்றார்கள். ஆனல்,நான் அவர்களிடத்தில் அளவிற்கு மேற்பட்ட திறமை ஒன்றும் இருக்கக் காணவில்லை. மேலும்

அங்ஙனம் இருப்பதும் எவ்வாறு சாத்தியமாகும்? ஏனெனில், கிராமங்களிலுள்ள வேளாண்மைக்காரர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜமீன்தாரர்களின் ஆக்கினைக்கு உள்ளாகியும், பட்டணங்களிலுள்ள குடிகள் ஒவ்வொருவரும் அங்குள்ள சில பிரதான உத்தியோகஸ்தர்களின் ஆக்கினைக்கு உள்ளாகியும் இருக்கின்றார்கள். இவ்வுத்தியோகஸ்தர்கள் வெனிஸ் பட்டணத்தில் நிகழ்வது போலத் திருவுளச்சீட்டுப் போடப்பட்டுப் பின்னர் ஏற்படுத்தப்பட்டவர்கள்.

நான் மேற்கூறிய குடிப்படை இருபது மைல் சதுரமுள்ள பட்டணத்தின் (Lorbrulgrud) அருகிலுள்ள ஒரு பெரிய நிலத்தில் அப்பியாசம் செய்விக்கப் பெற்றபோது நான் பன்முறை அதனைக் கண்ணுற்றிருக்கின்றேன். அப் படையில், மொத்தம் 25000 காலாட்களுக்கும் ஆயிரம் குதிரையாட்களுமே இருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு அதிக இடம் வேண்டியதாயிருந்தமையால் நான் அவர்களின் தொகையை எண்ணுதற்கு என்னால் சாத்தியப்படவில்லை. ஒரு பெரிய குதிரையின்மேல் ஏறியுள்ள ஓர் போர்வீரன் சுமார் தொண்ணூறு அடி உயரத்தில் காணப்பட்டான். இக்குதிரை யாட்கள் எல்லோரும் ஒரு அதிகார வார்த்தையால் தம்தம் கத்தியை உருவிக் கொண்டு ஆகாயத்தில் சுழற்றினார்கள். அத்தன்மையான அழகும் வியப்பும் ஒன்றுகூடிய காட்சியினைப்போல் நாம் மனோபாவனையால் வேறெதனையும் நோக்கமுடியாது. அஃது எங்ஙனம் தோன்றிற்றென்றால், பதினாயிரம் மின்னல்களின் பிரகாசம் ஒரே சமயத்தில் ஆகாயத்தின் ஒவ்வொரு திசையிலும் தோன்றியது போல் இருந்தது.

அயல் நாட்டார் எவரும் தம் தேசத்திற்குள் வருவதற்கு வழியில்லா திருக்கையில் எங்ஙனம் அவ்வரசர் தான் சேனை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதினா ரென்றும், தமது குடிகளுக்கு யுத்தப்பயிற்சி செய்விக்கத் தொடங்கினாரென்றும் நான் அறிய அதிக விருப்பங்கொண்டிருந்தேன். ஆனால், நான் விரைவிலேயே அந்நாட்டாருடன் சம்பாஷணை செய்தும், அவர்கள் புத்தகங்களை வாசித்தும் அவற்றின் காரணத்தை அறியலுற்றேன். அஃதென்னையோ வெனின், பல்லாண்டுகளாக அவர்களும் இப்புவியிலுள்ள மாந்தர் அனைவரும் அடையும் வியாதியை எய்தியிருந்தனர் என்பதாம். என்னை? பிரபுக்கள் அதிகாரம் பெறுமாறும், குடிகள் விடுதலை பெறுமாறும் அரசன் சுயாதிபதி பட்டம் பெறுமாறும் ஒருவரோடொருவர் போர் நிகழ்த்தி வந்தனர். பின்னர், இத்தகைய போர் ஒன்று நிகழ வந்தகாலத்து இப்போது ஆளுகின்ற அரசன் பாட்டனார் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டி அங்கே பலவிஷயங்களைப் பேசி அனைவர்க்கும் சந்தோஷமாகவே அதனை நிகழப் பெறாமல் செய்தனர். பின்னர், எக்காலத்தும் அத்தகைய போர் ஒன்றும் நிகழாவண்ணம் அவர், தாம் ஒரு குடிப்படை வைத்துக் கொள்ளவும் அநுமதி பெற்றனர். அக்காலந் தொடங்கி அவர்பின் ஆண்டுவரும் அரசர்களும் அவ்விதமாகவே தாங்களும் குடிப்படை வைத்துக்கொள்ளுகின்றனர்.

## எட்டாம் அத்தியாயம்

நான் ஒரு காலத்தில் எவ்விதமாயினும் என் சுய தேசம் வருவேனென்று மாத்திரம் எப்போதும் எண்ணியிருந்தேன். ஆனால், அஃது எவ்வாறு முடியும் என்று நினைத்து நான் பன்முறை மனங் கலங்குவேன். எவ்வித முயற்சி செய்தால் என் எண்ணம் நிறைவேறுமென்றும் எனக்குத் தோன்றவில்லை. நான் முன்னர் ஏறி வந்த ஓர் கப்பலே அந்நாட்டில் முதலில் வந்ததாக அத்தேசத்தார் கேள்வியுற்றது.

அதன் பின்னர் அத்தேசத்து அரசர் இனி எந்தக் கப்பலேனும் தம் தேசத்தின் கடலோரம் வரக் காணப்படின், அதனையும் அதன்கண்ணுள்ள மனிதர்களையும், சாமான்களையும் ஒன்றாக உடனே ஒரு நாற் சக்கரச் சுமை வண்டியில் ஏற்றிப் பட்டணத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். அவ்வரசர் என்னைப் பன்முறை என் உருவத்திற்கொத்த ஓர் பெண்மணியை வதுவை செய்யுமாறு வற்புறுத்தினர். ஆனால், நான் அவ்வாறு செய்யத் துணிவதினும் என்னுயிரைத் துறத்தல் நலமென எண்ணினேன். ஏனெனில், எனக்குப் பிள்ளைகள் பிறந்தால் அவர்களை அத்தேசத்தார் பறவைகளைப் போல கூட்டினிலன்றோ அடைத்து வைப்பார்கள்? மேலும் அவர்கள் சமயம் நேரிடின் அப்பிள்ளைகளை அந்தஸ்துள்ள மனிதர்களுக்குத் தேச முழுமையுமன்றோ விலை கூறுவார்கள்? இங்ஙனம் நிகழ நான் மணம் புரிவதைக் காட்டினும் எனக்கு வேறு அவமானம் வேண்டுமோ?

இது நிற்க, என்னை அதிக அன்புடன் எல்லோரும் பாதுகாத்து வந்தனர் என்பதில் ஐயமில்லை. நான் ஓர் பெரிய மஹாராஜனுக்கும் மஹாராணிக்கும் நேசனாகவும் அவர் விருப்புறும் பொருளாகவும் இருந்ததன்றி, அரண் மனையிலுள்ள அனைவர்க்கும் அளவற்ற ஆனந்தத்தைத் தரும் அதி அற்புதக் காட்சியாகவும் இருந்தேன். மனிதர் களின் நிலை இவ்வாறிருக்க நேர்ந்தமை எற்றுக்கெனின், அவர்கள் தாழ்ந்தவற்றில் மேன்மை பெற்றிருத்தலினால் என்பதாம். நான் விட்டு வந்த என் மனைவி மக்களை ஒருகாலும் மறவேனல்லன். நான் எனக்கொத்த குரலு டன் பேசுபவர்களிடம் சம்பாஷணை புரியவும், ஒரு தவளை யைப் போலாவது, அல்லது ஓர் சிறு நாய்க்குட்டியைப் போலாவது எங்கே எவர் காலிலேனும் மிதிப்பட்டு மாய்ந்து விடுகின்றேனோ என்ற பயம் நீங்கப்பெற்று, வீதிகளிலும் வயல்களிலும் நடந்து செல்லவும், அதிக ஆவல் கொண்டி ருந்தேன். அந்தப் பேற்றினை நான் எய்தும் விதம் இறை வனருளால் எனக்கு எளிதில் கிடைத்தது. அஃது எவ் வாறென்பதனை நான் இனிக் கூறுகின்றேன். நான் இத் தேசத்திற்கு வந்து இப்போது இரண்டு வருடங்களாயின. மூன்றாம் வருட முதலில் அரசனும் அரசியும் அந்தத் தேசத்தின் தெற்குக் கரையோரம் பிரயாணஞ் செய்கை யில் நானும் என் செவிலித்தாயும் உடன் சென்றோம். அப் போது என் செவிலித்தாய் என்னை வழக்கப்படி என் பிர யாணப் பெட்டியில் கொண்டுபோயினள். அப்பெட்டி எத்தன்மைத்தென்று நான் முன்னமே கூறி இருக்கின் றேன். அது பன்னிரண்டு அடி அகலமுள்ள சௌக்கிய மான ஓர் தனியறை. அந்த அறையில் ஓர் தொட்டில்

போடும்படி நான் கட்டளை யிட்டிருந்தேன். அத்தொட்டில் பட்டுக் கயிறுகளால் அறையின் உச்சியிலிருந்து தொங்கவிடப்பட்டிருந்தது. அஃதேனெனின், நான் விரும்பிய காலத்து ஒரு வேலைக்காரன், தான் குதிரை யேறி என்னை மேற் கூறிய அப் பெட்டியில் தூக்கிச் செல்கையில் பெட்டிக் குலுங்க நேரிடின், நான் எவ்வித கெடுதியும் அடையாமல் இருப்பதற்கு என்பதாம். இதுவேயன்றி நான் எண்ணிய போதெல்லாம் அதில் சுகமாக நான் நல்ல நித்திரையும் செய்யலாம். அப் பெட்டியின் கூரையில் தொட்டிலுக்கு மத்தியில் காற்று வருவதற்காக ஓர் அடி சதுரமுள்ள ஓர் துவாரம்செய்யும் படியாக நான் தச்சனுக்குக் கட்டளையிட் டிருந்தேன் அந்தத் துவாரத்தை வேண்டியபோது மூடவும் திறக்கவும் அத் தச்சன் செய்து வைத்தான்

எங்கள் பிரயாணம் முடிவுபெற்றதும், அரசர் பிளான் பிளாஸ்னிக் என்னும் பட்டணத்தின் அருகிலுள்ள ஓர் மாளிகையில் சிலநாள் தங்குவதற்கு எண்ணங்கொண்டனர். அப்பட்டணம் சமுத்திரத்திலிருந்து நமது தேசத்து 18-மைல் தூரத்திலிருந்தது. நானும் என் செவிலித்தாயும் பிரயாணஞ்செய்ததில் மிகுதியாகக் களைப்புற்றோம். எனக்குச் சிறிது ஜலதோஷம் வந்தது. ஆனால், அவளுக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூடாத நோய் வந்துவிட்டது. நான் கடலைக் காண்பதற்கு அதிக ஆசைப்பட்டேன். ஒருக்கால் நான் அத்தேசத்தைவிட்டுச் செல்ல எனக்குக் கடவுள் கருணை புரிவாராயின் நான் அக்கடலின் மூலமாயல்லவோ தப்பித்துக் கொள்ளமுடியும். எனக்கு உண்மையாகவுள்ள நோயைக் காட்டிலும் அதிகமாக விருப்பதாக நான்

பாசாங்கு செய்தேன். பிறகு, நான் கடலோரம் சென்று ஆங்குள்ள நற்காற்றை உட்கொள்ள அனுமதி பெற்றேன். அவ்வரசர் எனக்குப் பிரியமுள்ள வேலைக்காரப் பையனை என்னுடன் அனுப்பினர். சில சமயங்களில் நான் அவனிடத்தில் நம்பிக்கை வைத்தலுமுண்டு. என் செவிலித்தாய் என்னை அவனுடன் அனுப்புதற்குச் சிறிதும் பிரியப்படாமையையும், என்னைப் பற்றி மிக்க கவலை எடுத்துக் கொள்ளுமாறு அவள் அவனுக்குக் கட்டளையிட்டமையையும், பின்னர் நேரிடப்போவதைத் தான் முன்னர் உணர்ந்தது போல தான் விம்மிவிம்மிக் கண்ணீர்விட்டமையையும், நான் ஒரு காலத்தும் ஒருவாற்றானும் மறப்பேனல்லேன். அப்பையல் என்னை என் பெட்டியில் தூக்கிக்கொண்டு அரைமணி நேரத்தில் கடலோரத்தில் கற்பாறைகளிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தான். அப்போது என்னைக் கீழே வைக்கும்படி நான் அவனுக்குக் கட்டளையிட்டேன். பிறகு நான் என் பெட்டியின் ஜன்னல்களின் சட்டங்களில் ஒன்றைத் தூக்கிக் கடலை நோக்கிக் கருத்துள்ள வருத்தமான பார்வைகள் பல பார்த்தேன். அப்போது எனக்கு ஒன்றும் மனம் சரியாகவில்லை. ஆதலால், நான் சிறிதுநேரம் என் தொட்டியில் துயிலவேண்டுமென்று என் வேலைக்காரப் பையனிடம் கூறினேன். பிறகு நான் என் பெட்டிக்குள் சென்றதும், வேலைக்காரப் பையன் எனக்குக் குளிர் வராமலிருக்கப் பெட்டியின் ஜன்னலை மூடிவிட்டான். பின்னர் நான் விரைவில் துயிலத் தொடங்கினேன். அதன் பின்னர் அப்பையன் எனக்குத் தீமை ஒன்றும் நேரிடாதென்ற கருத்துடன் பட்சிகளின் முட்டைகள் ஏதேனும் தேடிப்பார்க்கக் கற்பாறைகளிருக்குமிடம் சென்றானென்று

எண்ணுகின்றேன். ஒருகால் அவனுக்கு இரண்டொரு முட்டைகள் கிடைத்திருந்தாலும் இருக்கலாம்.

அஃது எவ்வாறு இருந்தாலும் இருக்கட்டும்; என் பெட்டியின்மீது மாட்டப்பட்டுள்ள வளையத்தை ஏதோ ஒன்று வலிவாகத் தூக்கியதுபோல எனக்குத் தோன்றியது. உடனே நான் விழித்துக் கொண்டேன். விழித்துப் பார்க்கையில் என் பெட்டி ஆகாயத்தில் அதிக உயரத்தில் வெகு விரைவாகச் சென்றுகொண்டிருந்தது. அப்போது நான் என் தொட்டியிலிருந்து பூமியில் விழுந்து விடுவேனென்று எனக்கு அதிக பயமாயிருந்தது. ஆனால், முதலில் மாத்திரம் எனக்கு அவ்வாறு இருந்ததேயன்றிப் பின்னர் எனக்குச் சாதாரணமாகவே தோன்றியது. அப்போது நான் அநேகமுறை, 'ஐயோ! தெய்வமே! என் கதி இவ்வாறாயிற்று? எனக்குத் துணை எவருமில்லையா? நான் ஆகாயத்தில் பறக்கின்றேனே?' என்று என்னால் இயன்றவரையில் கூக்குரலிட்டுப் பார்த்தேன். ஆனால், அதனால் எவ்வித பயனும் விளையவில்லை. பிறகு நான் ஜன்னல்களின் வழியாய் என் பார்வையைச் செலுத்தினேன். அப்போது நான் மேகங்களையும் வானத்தையும் அன்றி மற்றெதனையும் பார்ப்பதற்கில்லை. பின்னர் நான் என் தலைக்கு நேராகச் சிறகுகள் அடிக்கின்ற அரவத்தைக் கேட்டேன். அப்போதுதான் நான் எவ்வித வருத்தமுள்ள நிலையில் இருந்தேன் என்பதை உணர்ந்தேன். நடந்த காரியந்தான் ஏதோவென்று யோசிக்குங் காலத்து, ஓர் கூளிப்பட்சி தனது மூக்கினால் என் பெட்டியின் வளையத்தைப் பற்றிக்கொண்டு, ஏதேனும் ஓர் கற்பாறைக்கு அப்பெட்டியைக் கொண்டுபோய் அதனுள்ளிருக்கும்

என்னை ஓர் கூட்டுக் குள்ளிருக்கும் ஆமையைப் புசிப்பது போல் புசிக்கலா மென்ற கருத்துடன் இப்போது அப் பட்சி என் பெட்டியைத் தூக்கிக்கொண்டு செல்கின்றதே யன்றி வேறல்ல என்பதை நான் அறியலானேன். ஏனெனில், ஓர் பொருள் எவ்வளவுதான் மறைவான இடத்தில் இருந்தபோதிலும் அதனை ஆங்குத் தான் உளதென்று அறியும் அதிநுட்ப அறிவு அந்தப் பட்சியினிடத்திலுண்டு.

பிறகு சற்று நேரத்திற்குள் சிறகடிப்பின் அரவம் வரவர மிகுதியாய்க் கொண்டே இருந்தது என் பெட்டியும் மேலும் கீழுமாகச் சுழன்று கொண்டே வந்தது. அதன் பின்னர் அந்தப் பட்சி அநேக குத்துகள் வாங்கிக்கொண்டதுபோல் எனக்குத் தோன்றியது. பிறகு சற்றுநேரத்திற்குள் என் பெட்டி நேர்கீழாக ஒரு நிமிஷத்திற்கு மேல் வெகு விரைவாக வந்து கொண்டிருந்தது. அதன்பிறகு, **நையகாரா** (Niagara) அருவியண்டை கேட்கும் சந்தடியைக் காட்டிலும் அதிக சப்தம் கேட்கவும், என் பெட்டி கீழேவிழாமலிருக்கவும், இந்த வேடிக்கையை நான் பார்க்கவும் நேரிட்டது. பிறகு ஒரு நிமிஷம் வரையில் எனக்கு ஒன்றும் தெரியவேயில்லை. ஆனால், என் பெட்டி மாத்திரம் மூன் இருந்த இடத்தைவிட உயர்ந்த இடத்தில் அப்போது வந்திருந்ததைக் கண்டேன். ஏனென்றால், அப்போது ஜன்னலின் வழியாய் வெளிச்சம் தெரியவாரம்பித்தது. நான் சமுத்திரத்தில் வீழ்ந்திருந்தே னென்பதை அப்போதுதான் நான் அறிந்தேன். என் பெட்டி என் கனத்தினாலும், பெட்டியிலுள்ள சாமான்களின் கனத்தினாலும், அகன்ற இரும்புத்தட்டு நான்கு மூலைகளில் மேலும்

கீழும் நிறுத்தப் பட்டிருந்ததாலும், தண்ணீருக்குள் ஐந் தடி ஆழத்தில் மிதந்து கொண்டிருந்தது. என் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்த பறவை தன் வாயில் ஏதோ வைத்திருந்ததைக் கண்ட வேறு இரண்டு மூன்று பறவைகள், தாமும் அதனைப் புசிக்கலாமென்று அதனுடன் போர் செய்திருக்கலாம் என்றும், அச்சமயம் என் பெட்டி கீழேவிழ நேர்ந்திருக்குமென்றும் நான் எண்ணுகின்றேன். பெட்டியின் அடியிலிருந்த இரும்புத் தட்டுகள் அதிக வலிவா யிருந்தமையால் அப்பெட்டி ஒரே பக்கமாய்ச் சாய்ந்து விடாமலும், அது தண்ணீரில் விழுந்தபோது உடைந்து போகாமலும் இருந்தது. அப் பெட்டி நன்ருக அமைக்கப்பட்டிருந்தது. அதிலுள்ள கதவு, கீல்களை விட்டு அசையாமையால் அப் பெட்டிக்குள் ஜலம் வருவதற்கு ஏதுவில்லை. நான் மிகுந்த கஷ்டத்துடன் என் தொட்டியிலிருந்து கீழே இறங்கினேன். நிற்க, காற்று நுழைவதற்காகப் பெட்டியின் உச்சியில் ஓர் துவாரம் செய்திருந்ததென்று நான் முன்னமே சொன்னேனல்லவா? ஆதலால், எனக்கு அச்சமயம் காற்றில்லாமல் அதிக கஷ்டமாயிருந்ததால் நான் போய் அந்த துவாரத்தைத் திறந்து விட்டேன்.

நான் அச்சமயம் என் செவிலித்தாயுடன் இருக்க எவ்வளவோ ஆசைப்பட்டேன். பட்டும் பயன்யாது? ஒருமணி நேரத்திற்குள் நான் அவ்வாறு பிரிய நேர்ந்தமை எவ்வளவு ஆச்சரியம்? நான் அவ்வித கஷ்டங்களிலிருந்தும் நான் என் பிரியமுள்ள செவிலித்தாயைப் பிரிந்ததையும், அவள் பின்னர் என்னை நினைந்து வருந்துவாளே என்பதையும், மஹாராணியவர்களுக்கு வருத்த முண்டாகுமே

என்பதையும், நான் எண்ணியபோது எனக்கு உண்மையில் எவ்வளவோ மனவருத்தமாயிற்று. எந்தப் பிரயாணியும் என்னைப்போல் கஷ்டம் அடைந்திரானென்பதும், என்போல் ஆபத்திற்குள்ளாயிரான் என்பதும் திண்ணமே. என் பெட்டி எங்கே துண்டுதுண்டாக உடைந்து விடுகின்றதோ, அல்லது பெருங்காற்றினுல் மூழ்கிவிடுகின்றதோ, அல்லது பெரிய அலையினுல் கவிழ்ந்து விடுகின்றதோ, என்று ஒவ்வொரு வினுடியும் நான் அதிக பயங்கொண்டிருந்தேன். என் பெட்டியின் ஏதோ ஒரு பாகத்தில் சற்று பழுதுண்டாயின் நான் என் இன்னுயிரை இழக்க நேரிடுமன்றே? என் பெட்டிக்குள் அதிலுள்ள சிறு வெடிப்புகளின் மூலமாய் ஜலம் நுழைய வாரம்பித்தது. நான் என்னுல் இயன்ற வரையில் அதனைத் தடுக்க முயன்றேன். என் பெட்டியின் மேற்கூரையை என்னுல் தூக்குவதற்கு இயலவில்லை. அவ்வாறு கூடுமாயினும் நான் பெட்டியின் மேலாகிலும் சென்று, அங்கே 4, 5, மணி நேரமாயினும் என்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவேன். அதற்கும் வழி ஏற்படவில்லை. ஒருகால் நான் இரண்டு மூன்று நாட்கள் வரையில் அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டாலும் பிறகு எப்படியும் நான் குளிராலும் பசியாலும் மாய்தல் நிச்சயந்தானே? நான் நான்கு மணி நேரம் வரையில் அத்தகைய கஷ்டத்தையே அடைந்து கொண்டும், அம் மரணம் அடைதற்கே ஆசைகொண்டும் இருந்தேனென்பது நிச்சயமே.

என் பெட்டியின் ஜன்னல் இல்லாத பக்கத்தில் இரண்டு வலிவான வளையங்கள் மாட்டப்பட்டிருந்தனவென்று நான் முன்னரே கூறியிருக்கின்றேன். நான்

பிரயாணஞ் செய்கையில் என்னைத் தூக்கிச் செல்லும் வேலைக்காரன் தனது அரைக் கச்சியில் அவ்வளையங்களை மாட்டிக்கொண்டு செல்வது வழக்கமென்றும் நான் கூறியிருக்கின்றேன் இப்புத்தகத்தை வாசிப்பவர்களே! இப்போது மேற்கூறிய இரண்டு விஷயங்களையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவீர்களாக. நான் அதிக கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கையில், என் பெட்டியில் வளையங்கள் மாட்டப்பட்டுள்ள பக்கமாய் அழுத்துகின்ற சப்தம் ஒன்று எனக்குக் கேட்டது. பிறகு சிறிது நேரத்திற்குள் என் பெட்டி தண்ணீருக்குள் போய்க்கொண்டிருந்தது போல் எனக்குத் தோன்றியது. ஏனெனில், அடிக்கடி என் பெட்டியை யாராகிலும் இழுத்தால் எவ்வித உணர்ச்சியுண்டாகுமோ அதே உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. அச்சமயங்களிலெல்லாம் அலைகள் என் பெட்டியின் ஜன்னல்களின் அருகில் வர ஆரம்பித்தன. ஆனால் அவைகளின் காரணங்கள் யாவையென எனக்குத் தெரியவில்லை. ஆனால் எவ்வாறாயினும் நான் தப்பித்துக் கொள்ள முடியுமென்று எனக்கு அப்போது சிறிது நம்பிக்கையுண்டாயிற்று. பிறகு நான் என் நாற்காலிகளில் ஒன்றை யெடுத்து, என் பெட்டியின் கூரையிலுள்ள சந்திற்கு நேராய் வைத்தேன். பின்னர், நான் அந்த நாற்காலியில் ஏறி நின்றுகொண்டு என் வாயை அந்தத் துவாரத்தின் அருகில் இயன்ற வரையில் கொண்டுபோய், யாராகிலும் எனக்கு உதவிசெய்யுமாறு எனக்குத் தெரிந்த பாஷைகளிலெல்லாம் உரத்த குரலில் கூச்சலிட்டேன். அதற்குப் பின்னர் நான் என் கைக் குட்டையை எடுத்து என்னிடத்தில் வழக்கமாயுள்ள தடியில் கட்டி, கூரையிலுள்ள துவாரத்தில்

நுழைத்து, ஏதேனும் கப்பலாகிலும் படகாகிலும் அருகிலிருக்க நேரிடின் அப்போது மாலுமிகளாகிலும் படகுக்காரர்களாகிலும் ஓர் துரதிர்ஷ்டமுள்ள மனிதன் அப் பெட்டிக்குள் இருக்கிறானென்று அறியும்பொருட்டு நான் கைக்குட்டை கட்டப்பட்டுள்ள அந்தத் தடியை அநேக முறை வீசினேன்.

ஆனால், நான் என்ன செய்தும் ஒன்றும் பயனில்லை இல்லையாயினும், என் பெட்டிமாத்திரம் தண்ணீரில் போய்க் கொண்டே இருந்தது. பிறகு ஒரு மணிநேரத்திற்குள் என் பெட்டியின் வளையங்கள் மாட்டப்பட்டுள்ள பக்கம் ஏதோ கடினமான ஓர் பொருளின் மேல் மோதியது. அச் சமயம் நான் அக் கடினமான பொருள் கற்பாறையாய்த் தான் இருத்தல் வேண்டுமென்று கருதினேன். ஏனெனில், என் பெட்டி மோதியதும் எனக்கு அதிக தள்ளாட்டம் உண்டாயிற்று. அதன் பிறகு என் பெட்டியின் மூடியின்மேல் ஓர் சாமான் இழைகிற சப்தத்தைப்போலவும், அது என் பெட்டியின் வளையத்தில் நுழைவது போலவும், எனக்கு நன்றாய்க் கேட்டது. பிறகு சிறிது சிறிதாக நான் முன்னிருந்ததைவிட மூன்று அடி உயரத்தில் இருப்பதைக் கண்டேன். அதன் மேல் நான் மறுபடியும் கைக்குட்டை கட்டப்பட்டுள்ள தடியை முற்கூறிய துவாரத்தில் நுழைத்து எனக்கு யாராகிலும் உதவி புரியுமாறு என்குரல் கம்மிப்போகும் வரையில் கூச்சலிட்டேன். பின்னர் ஒரு பெரிய சப்தம் மூன்று முறை எனக்குக் கேட்டது. அச்சப்தம் எனக்கு அளவிலா ஆனந்தத்தை விளைவித்தது. அவ்வானந்தம் இத்தகையதென்று அனுபவிப்பர் அறியக் கூடுமேயன்றி ஈண்டு எழுதி விளக்க இயலாது. பிறகு என்

பெட்டியின்மேல் யாரோ நடந்து போவதுபோல் எனக்குச் சப்தம் கேட்டது. பிறகு, சிறிது நேரத்திற்குள் என் பெட்டியின் துவார வழியாய் யாரோ ஒருவர் உரத்த குரலில் ஆங்கில பாஷையில், "உள்ளே யாராகிலும் இருந்தால் இப்போது பேசலாம்" என்று கூறினர். நான் அவருக்குக் கீழ் வருமாறு மறுமொழி சொனனேன். "ஐயா! நான் இங்கிலாந்து தேசத்திலுள்ளவன். என் கெட்ட காலம் நான் இவ்வித தாழ்மையும் பயமுமுள்ள நிலையிலிருக்க நேரிட்டது. என்னைப்போல் இதுவரையில் எவரும் துன்பத்தை அடைந்திராரென்பது சத்தியம். என்னைத் தற்சமயம் இந்த இருட்டறையிலிருந்து காப்பாற்றுவது பேருதவியாகும்."

இதைக் கேட்டு அவர் கூறியதாவது "ஐயா! பயப்படவேண்டாம். உன் பிராணனுக்கு இப்போது ஒன்றும் பயமில்லை. ஏனென்றால், உன் பெட்டி எங்கள் கப்பலில் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது ஓர் தச்சன் வந்து உன்னை மேலே தூக்குவதற்குப் போதுமான ஓர் துவாரம் உன் பெட்டியின் மூடியில் செய்வான்." நான் அதைக்கேட்டுக் கீழ்வருமாறு மறுமொழி சொன்னேன். "ஐயா தாங்கள் அவ்வாறு செய்யவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அதற்கு நெடுநேரமாகும். தங்களுக்கு அத்தகைய கஷ்டம் யாதும் வேண்டாம். என் பெட்டியில் வளையம் மாட்டப்பட்டிருக்கிறது. ஆதலால், தங்கள் கப்பலிலுள்ள யாரையாகிலும் தன் விரலை அவ்வளையத்தில் விட்டு என் பெட்டியை அதிக சுலபமாகத் தூக்கும்படி சொல்லலாம்." இதைக் கேட்டுக் கப்பலிலிருந்த சிலர் என் மதியில்லாப் பேச்சினால் நான் முழு பைத்தியக்காரனென்று எண்ணினார்கள்.

மற்றவர்களெல்லாம் நகைத்தார்கள். ஏனென்றால், நான் அச்சமயம் என்னைப் போன்ற உருவத்தையும், உயரத்தையும் பெற்ற மனிதர்களிடம் வந்திருந்ததை உண்மையில் அறியவேயில்லை. பிறகு தச்சன் வந்து சில நிமிஷங்களுக்குள் நான்கு அடி சதுரமுள்ள ஓர் சந்து என் பெட்டியின் மூடியில் செய்தான். அதன் பிறகு அவன் அச்சந்து வழியாய் ஒரு சிறு ஏணியை விட்டு நிறுத்தினான். நான் அந்த ஏணியின் மீதேறிக கப்பலுக்குள் வலிவற்ற நிலையில் சென்றேன்.

நான் சென்றதும் கப்பலி லிருந்தவர்கள் அனைவரும் என்னை அநேக கேள்விகள் கேட்டார்கள். அவைகளுக்குப் பதிலளிக்க எனக்கு விருப்பமில்லை. நான் வெகு நாளாக பிரமாண்டமான பொருள்களையே பார்த்துக் கொண்டிருந்தமையால், அப்போது அக்கப்பலிலுள்ளார் அனைவரும் எனக்குப் பெருங்குள்ளர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் உருவத்தை அவ்வாறு நான் கண்டபோது எனக்கு அதிக மனக்கலக்கம் உண்டாயிற்று. அப்போது தாமஸ் வில்காக்ஸ் (Thomas Wilcocks) என்னும் பெயரையுடைய கேப்டன் துரையவர்கள், யோக்கியதையும் மதிப்பும் உடையவராதலால், என் மனநிலையை அறிந்தவராய், என்னைத் தம் அறைக்குள் கொண்டுபோய் சுகத்தைத் தரும் ஒருவித மருந்தை எனக்கு அளித்துப் பிறகு அவர் படுக்கையிலேயே என்னைப் படுத்துக் கொள்ளும்படி என்னிடம் கூறினார். எனக்கு அப்போது ஒய்வு அவசியம் வேண்டியதாயிருந்ததால் நானும் அவர் ஏற்பாட்டிற்கு உடன்பட்டேன். நான் தூங்குவதற்குமுன் என் பெட்டிக்குள் விலையுள்ள சாமான்கள் பல இருக்கின்

றனவென்றும், அவை நேர்த்தியான ஓர் தொட்டில், அழகான ஓர் படுக்கை, இரண்டு நாற்காலிகள், ஒரு மேஜை, ஒரு சிறு பெட்டி முதலியவை என்றும், அப்பெட்டிக்குள் இருக்கும் என் தனியறை நான்கு பக்கங்களிலும் பட்டினுலும் பருத்தினுலும் ஜோடிக் கப்பட் டிருக்கிறதென்றும், அவ் வறையை அவர் வேலைக்காரர் யாராகிலும் கப்பலுக்குள் கொண்டு வந்தால், நான் அதைத் திறந்து அதிலுள்ள சாமான்களை யெல்லாம் அவருக்குக் காட்டுகிறேனென்றும், நான் அக் கேப்டன் துரையவர்களிடம் கூறினேன். நான் பேசிய நம்பிக்கை யற்ற வார்த்தைகளைக் கேட்டு அவர் என்னைப் பைத்தியக்கார னென்றே தீர்மானித்தார். எப்படி யிருப் பினும், என்னை அவர் சந்தோஷப்படுத்தும் பொருட்டுத் தன் வேலைக்காரர்களில் சிலரை நான் கூறிய சாமான்களை யெல்லாம் ஒருகால் என் பெட்டியிலிருக்குமாயின் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவ்வேலைக்காரர் கள் அவ்வாறே என் சாமான்களை யெல்லாம் சீக்கிரத்தில் கொண்டுவந்தார்கள். என் நாற்காலிகள், சிறு பெட்டி, படுக்கை, முதலிய இவைகள் தரையில் ஆணிகளால் முடுக் கப்பட்டிருந்ததை அறியாமல் அவ் வேலைக்காரர்கள் அவைகளைக் கையால் வலித்து எடுத்தமையால் அவைகள் அதிக பழுதாய்விட்டன. பிறகு அவர்கள் என் பெட்டி யிலிருந்து அவர்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு பயனில்லாதவற்றைப் பெட்டியோடு சமுத்திரத் தில் போட்டு விட்டார்கள். என் பெட்டி சிறிது நேரத் திற்கெல்லாம் தண்ணீரில் மூழ்கிவிட்டது. அச்செயலைக் காண்பதற்கு எனக்கு மனம் வரவில்லை. ஏனென்றால்,

நான் அப்பெட்டியை மறுபடியும் பார்ப்பேனாயின் எனக்கு என் பழைய எண்ணங்களெல்லாம் வந்துவிடும். ஆனால், நான் அதை முழுமையையும் மறந்து விடுவதற்கே விரும்பினேன். பிறகு நான் சிறிது நேரம் வரையில் தூங்கினேன். ஆனால் நான் முன்னிருந்த இடத்தையும் எனக்கு நேர்ந்த ஆபத்தையும் பற்றியே ஓயாமல் கனவு கண்டுகொண்டிருந்தேன். தூங்கியதால் எனக்கு மிகவும் சௌக்கிய முண்டாயிற்று. சுமார் இரவு 8 மணிக்கெல்லாம் கேப்டன் துரையவர்கள் என் இராப்போஜனத்திற்குத் தயார் செய்தார். நான் அப்போது அதிக பசியாயிருந்தேனென்று அவர் அறிந்தார். அவர் என்னை மிக்க அன்புடன் உபசரணை செய்தார். பிறகு அவர் என்னை வேறு விதமாகத் தோன்றாமலும் பொருத்தமில்லாப் பேச்சைப் பேசாமலும் இருக்குமாறு என்னிடம் உரைத்தார். ஆனால், அவர் என்னிடம் தனிமையாய்ச் சம்பாஷணை புரிய விரும்புவாரானால் நான் அவருக்கு என் பிரயாணத்தின் வரலாறு முழுமையும் விரிவாய்ச் சொல்லுவதாக அவரிடம் கூறினேன். பிறகு அவர் என்னிடம், "பகல் பன்னிரண்டு மணிக்கு நான் என் கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தபோது உன் பெட்டி எனக்கு ஓர் கப்பற்பாய் போல் தோன்றியது. அது மேலும் சமீபத்திலேயே இருப்பதாகவும் காணப்பட்டது. ஆதலால், நான் என்னிடமிருந்த கோதுமை அப்பங்கள் செலவழிந்து போனதை யோசித்து அருகிலிருக்கும் கப்பலில் கொஞ்சம் விலைக்கு வாங்கிக் கொள்ளலாமென்றும் எண்ணினேன். ஆனால், நான் அதனருகில் வந்ததும் நான் எண்ணியது தப்பிதமாயிருந்ததால் அப்பொருள் யாதென்று அறியும் பொருட்டு என்

பெரிய படகில் சில மனிதர்களை யனுப்பினேன். அம்மனி தர்கள் போய் தாங்கள் நீந்திச் செல்லும் ஓர் வீட்டைக் கண்ணுற்று அதிக பயமடைந்ததாக என்னிடம் வந்து உரைத்தார்கள். நான் அவர்களின் பிழையைக் கண்டு நகையாடினேன். பின்னர் நானே என் வேலைக்காரர்க ளோடு ஒரு வலிவுள்ள கயிற்றை எடுத்துக்கொண்டு அப் படகில் சென்றேன். அன்றையதினம் அவ்வளவாக வேனில் இல்லாமையால் நான் உன் பெட்டியைப் பன் முறைச் சுற்றிச் சுற்றிவந்து அதிலுள்ள சாளரங்களையும் இருப்புக் கிராதிகளையும் கண்ணுற்றேன். இவையன்றி உன் பெட்டியின் ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்கள் இருந்ததையும் அதற்குள் வழி ஒன்றும் இல்லாததையும் நான் பின்னர் அறிந்தேன். நான் அதன் பின்னர் உன் பெட்டியில் வளையங்களுள்ள பக்கமாய் எங்கள் படகைச் செலுத்தி நாங்கள் முன்னர் கொண்டு வந்துள்ள கயிற்றை அவ் வளையங்கள் ஒன்றில் நுழைத்து அப்பெட்டியை எங்கள் கப்பலண்டை இழுத்துக்கொண்டு வரும்படி என் வேலையாட்களுக்குக் கட்டளையிட்டேன். பிறகு உன் படகு எங்கள் கப்பலண்டை வந்ததும் மற்றொரு வளையத் திலும் கயிற்றை நுழைத்துக் கப்பிகளின் உதவியால் உன் படகை அடியோடு மேலே தூக்கும்படி நான் ஏற்பாடு செய்தேன். ஆனல் அவர்களால் அதை இரண்டு மூன்று அடி உயரத்திற்கு மேல் எவ்வளவு முயற்சி செய்தும் தூக்கமுடியவில்லை. பிறகு அவர்கள் உன் தடியும் உன் கைக்குட்டையும் உன் பெட்டியில் ஓர் திக்கற்ற மனி தனும் இருப்பதாகத் தாங்கள் தீர்மானிப்பதாகவும் என்னி டம் சொன்னார்கள்" என்று கூறினர். நான் அதன் பிறகு

அவர் என் பெட்டியை முதலில் பார்த்தபோது நாம் அக் காலத்தில் ஏதேனும் பிரமிக்கத் தக்க பறவைகளைக் கண்டதுண்டாவென்று அவரைக் கேட்டேன். அவர் அதற்கு "நீ தூங்குகையில் நான் இவ் விஷயத்தைப் பற்றி என் மனிதர்களிடம் பேசியபோது அவர்களில் ஒருவன் மூன்று கழுகுகள் வடதிசையை நோக்கிப் பறந்து போனதைக் கண்டதாக என்னுடன் உரைத்தான். ஆனால், அவன் அவைகளைப் பற்றி ஒன்றும் வியப்பாக உரைக்கவில்லையே" என்று எனக்கு மறுமொழி கூறினார். அவர் அப் பறவைகளின் பிரமிக்கத் தக்க உருவத்தைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லாமையால் அப்போது அதிக உயரத்தில் பறந்து போயிருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன். இல்லையானால், அவைகள் அதிசயிக்கத் தக்க பறவைகளாக அவ் வேலைக்காரர்களுக்கு அவசியம் தோன்றி யிருத்தல் வேண்டும் கேப்டன் துரையவர்களுக்கு நான் பறவைகளைப்பற்றி ஏன் வினை எழுப்பினே னென்று தெரியவில்லை.

பிறகு கேப்டன் துரையவர்களைக் கப்பலிருக்கு மிடத்திலிருந்து பூமி எவ்வளவு தூரம் இருக்கலாமென்று கேட்டேன். அவர் சுமார் முந்நூறு மைல் இருக்கலாமென்று சொன்னார். நான் அவர் கூறியது தப்பித மென்றும் சுமார் 150 மைல் தான் இருக்கலா மென்றும் அவரிடம் சொன்னேன். ஏனெனில், நான் கடலில் விழுந்தபோது என் பெட்டியைக் கழுகு தூக்கி இரண்டுமணி நேரங்கள் தான் கழிந்திருக்கலாம். அவைகளுக்கு மேலிருக்குமென்று எண்ணச் சிறிதும் ஏதுவில்லை. இக்காரணத்தையும் நான் கேப்டன் துரையவர்களிடம் சொன்னேன்.

ஆனால், அவர் எனக்குப் புத்திமாறி இருக்கிறதென்று என்னைப் பேசாமல் படுத்துக் கொள்ளும்படி சொன்னார். நான் அதற்கு அவ்வாறு ஒன்றுமில்லையே. நான் இப்போது தான் நன்றாய்ச் சாப்பிட்டேனே. என் சுயபுத்தி எனக்குத் தற்சமயம் சரியான நிலையில் தானிருக்கிறதென்று அவரிடம் கூறினேன்.'' இதைக் கேட்டதும் கேப்டன் துரையவர்கள் மிகுந்த கோபங்கொண்டு என்னிடம் கீழ்வருமாறு கூறுவாராயினர் ''நீ செய்யத் தகாத ஒரு பெருங்குற்றம் செய்திருக்க வேண்டுமென்று நான் எண்ணுகின்றேன். இப்போது அக்குற்றஞ் செய்ததற்காக அதிக வருத்த முறுகின்றாயல்லவா? நல்லது உன் குற்றத்திற்காக, எந்த அரசனோ உன்னைப் பெட்டியில் வைத்துக் கடலில் விட்டுவிடும்படி தண்டனை செய்திருப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில், இவ்வாறு அநேக அரசர்கள் பெருங்குற்றவாளிகளைத் தண்டிப்பது வழக்கமே. இத்தகைய கொடிய மனிதனாகிய உன்னை நான் என் கப்பலில் ஏற்றிக் கொண்டதைப் பற்றி எனக்கு அதிக வருத்தமாயிருந்த போதிலும் நாங்கள் செல்லும் முதல் துறைமுகப் பட்டணத்தில் உன்னைப் பத்திரமாய்ச் சேர்த்துவிடுகிறோம். நீ முதலில் என் மனிதர்களிடம் பேசிய அறிவில்லாப் பேச்சினாலும் பின்னர் என்னிடம் உன் பெட்டியைக் குறித்துப் பேசிய மெய்யில்லா வார்த்தைகளாலும் நீ போஜனஞ் செய்கையில் உன் முகம் இயற்கையாய்த் தோன்றாமையாலும் நான் உன்னைப் பற்றி அவ்வாறு ஐயப்பட நேரிட்டது'' என்றார்.

நான் பிறகு அக் கேப்டன் துரை கேட்குமாறு வேண்டினேன். அவரும் ஒருவாறு சம்மதித்தார். அதன்மேல்

நான் முதலில் இங்கிலாந்தை விட்டதிலிருந்து அத் துரையவர்கள் என்னை முதலில் பார்த்தது வரையில் ஒரு விஷயத்தையும் விடாமல் நான் அவரிடம் கூறினேன். பகுத்தறிவுள்ள பிராணிகளுக்கு எப்போதும் உண்மையையே மேலும் மேலும் அறிய விருப்பமாதலால் யோக்கியதையும் மதிப்பும் பெற்ற அத்துரை யவர்களுக்குக் கொஞ்சம் கல்வி ஞானமும் நிரம்பி, இயற்கை ஞானமும் இருந்தமையால் என் வார்த்தைகளை அவா உண்மையாகவே நம்பினார். நான் கூறியவை அனைத்தும் முற்றிலும் சரியென அவருக்கு இன்னும் அதிகமாய் நம்பிக்கை யுண்டாகும் பொருட்டு நான் என் நகைப்பெட்டியை என்னிடம் கொண்டுவரும்படி தம் வேலைக்காரர்களுக்குக் கட்டளை யிடுமாறு நான் அவரை வேண்டினேன். ஏனென்றால், அப்பெட்டி மாத்திரம் பத்திரமாய்க் கப்பலிலிருக்கிற தென்று அவர் என்னிடம் கூறியிருந்தார். பிறகு அந்தப் பெட்டியை வேலைக்காரனொருவன் என்னிடம் கொண்டுவந்தான். நான் அந்தப் பெட்டியைத் துரையவர்கள் முன்னிலையிலேயே திறந்தேன். பிறகு அதிலுள்ள (நான் சென்றிருந்த தேசத்தின்) அதியற்புத சாமான்களை யெல்லாம் எடுத்து அவருக்குக் காட்டினேன். அவைகள் கீழ்வருமாறு: பிராப்டிங்னுக் தேசத்து அரசர் தாடியின் மயிரால் செய்யப்பட்ட சீப்பு ஒன்று, அத்தேசத்து மஹாராணியினது பெருவிரல் நகத்தைப் பின்புறமாகப் பெற்று அவ்வித மயிராலேயே செய்யப்பட்ட சீப்பு மற்றொன்று, ஒரு அடியிலிருந்து 1½ அடி வரையில் நீளமுள்ள ஆணிகளும் குண்டூசிகளும் சில, தச்சன் ஆணிகளைப்போன்ற வண்டுகளின் கொடுக்குகள் நான்கு, மஹாராணி மயிரில் சீவித்தள்ளிய சிக்கான மயிர்கள் சில, ஒரு

நாள் மஹாராணி என்மீது அதிக பிரியத்துடன் தமது சுண்டு விரலிலிருந்த பொன் மோதிரத்தைக் கழற்றி எனக்குக் கழுத்துப் பட்டிகையாய்ப் போட்ட பொன் மோதிரம் ஒன்று.

அப் பொன் மோதிரத்தைக் கேப்டன் துரையவர்கள் எனக்குச் செய்த நன்மைகளுக்குப் பிரதி நன்றியாகத் தாம் பெற்றுக்கொள்ளுமாறு நான் அவரை வேண்டினேன். அவர் அதற்குச் சிறிதும் சம்மதிக்கவே யில்லை. பிறகு நான் அந்தஸ்துள்ள ஓர் பெண்ணின் கால் விரலில் இருந்து என் கையினலேயே அறுத்தெடுத்த காய்ப்பை அவருக்குக் காண்பித்தேன். அந்தக் காய்ப்பை நான் பின்னர் இங்கிலாந்திற்குச் சென்றதும் ஒரு வெள்ளிக் கோப்பையில் நுழைத்து வேடிக்கைப் பொருளாக வைத்துக்கொண்டேன். நான் கடைசியாக அப்போது உபயோகித்திருந்த எலியின் தோலினல் இயற்றப்பட்ட அரைச் சல்லடத்தை அவருக்குக் காட்டினேன். நான் அவருக்கு ஒரு இராணுவ வீரனுடைய பல்லைத்தான் பரிசளிக்கலாமென்று யோசித்தேன். ஏனெனில், அவர் அதைத் தான் வெகு வியப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார். மேலும் அதைப் பெறுவதற்கு அவருக்கு விருப்ப மிருப்பதாகவும் எனக்குத் தோன்றிற்று. ஆதலால், நான் அவரை அப் பல்லைப் பரிசாகப் பெறுமாறு மிகவும் வேண்டினேன். அவரும் அதனைப் பல வந்தனங்களுடன் மிக்க விருப்பமாகப் பெற்றுக்கொண்டார். என் செவிலித் தாயினிடம் ஒப்பித்திருந்த இராணுவ வீரர்களி லொருவனுக்கு ஒரு சமயம் பல்வலி உண்டாயிற்று. அப்போது அவன் ஒரு வைத்தியரை அழைப்பித்தான். அவ்வைத்தியர் அதிக தேர்ச்சி

யில்லாமையால் ஏதோ ஓர் கெட்டுப்போன பல்லினால்தான் அந்நோய் உண்டாயிற்று என்று கூறி நன்றாயிருந்த பல்லைப் பிடுங்கிவிட்டார். நான் அப் பல்லைச் சுத்திசெய்து என் நகைப் பெட்டியில் பத்திரமாய் வைத்துக்கொண்டேன். அந்தப் பல் சுமார் ஒரு அடி நீளமும் நான்கு அங்குல அகலமு மிருந்தது.

கேப்டன் துரையவர்கள் நான் கூறியவற்றை யெல்லாங் கேட்டு மிகச் சந்தோஷ மடைந்து பின்னர் நான் இங்கிலாந்திற்குச் சென்றதும் அவ்விஷயங்களை யெல்லாம் உலக முழுமையும் அறியுமாறு வர்த்தமான பத்திரிகையில் (News Paper) எழுதி வெளிப்படுத்துகிறாயா என்று என்னைக் கேட்டனர்.

நான் அதற்கு அவரிடம் "இக்காலத்தில் பிரயாணங்களைப்பற்றிய புத்தகங்கள் அளவின்றி யிருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் அதிசயிக்கத் தக்க விஷயங்களே அடங்கியுள்ளன. அவைகளின் நூலாசிரியர்களில் அநேகர் உண்மையைக் குறித்து மிகுதியும் நோக்காது, ஞானம் மிகுதியாயில்லாமல் வாசிப்பவர் சந்தோஷ மடையும்படி பல பயனற்ற விஷயங்களையும் பொய்ம்மையான விஷயங்களையும் அப்புத்தகங்களில் எழுதியுள்ளார். ஆனால், என் சரித்திரத்திலேயோ உலகத்தில் நடக்கும் சாதாரண விஷயங்களேயன்றி அத் தேசத்து அற்புத செடிகளையும், மரங்களையும், பறவைகளையும், மிருகங்களைப்பற்றி வேண்டிய மட்டில் அழகுபெறக் கூறும் விஷயம் யாது மில்லை. நாகரீகமற்ற ஜனங்களின் வழக்க ஒழுக்கங்களைப் பற்றிப் பல நூலாசிரியர்கள் விரிவாக வுரைப்பது போலவும் என் சரித்திரத்தில் ஒன்றமில்லை. எவ்வாறாயி

னும் தாங்கள் எனக்குத் தெரிவித்த நல்ல அபிப்பிராயத்திற்காக நான் தங்களுக்கு அதிக வந்தனம் புரிகின்றேன். நான் அவ்விஷயத்தைப் பற்றிப் பின்னர் யோசிக்கின்றேன்" என்று சொன்னேன்.

நான் ஏன் எப்போதும் அதிக உரத்த குரலில் பேசுகிறேனென்றும், ஒருகால் நான் சென்றிருந்த தேசத்தினுள்ள அரசனும் அரசியும் செவிடர்களாவென்றும் என்னை அவர் கேட்டார். நான் அதற்கு அவரிடம் "சென்ற இரண்டு வருடங்களாக நான் இவ்வளவு குரலிலேயே பேசிக்கொண்டு வருகின்றேன். தாங்களும் தங்கள் மனிதர்களும் பேசும்போதெல்லாம் என்னிடத்தில் இரகசியம் சொல்லுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது. ஆயினும், தாங்களும் தங்கள் மனிதர்களும் பேசுபவை எனக்கு நன்றாகவே கேட்கின்றது. நான் அத் தேசத்தில் பேசியபோது வீதியிலுள்ள ஓர் மனிதன் கோபுரத்தின் மீதுள்ள மற்றொரு மனிதனிடம் பேசுவது போலிருந்தது. ஆதலால், நான் எப்போது பேசுவதாயிருந்தாலும் அந்நாட்டார் என்னை ஒரு மேஜையின் மீதாவது தங்கள் கரத்தின் மீதாவது வைத்தே பேசுவர். எனக்கு வேறொரு விஷயம் மிகக் களிப்பாகத் தோன்றுகிறது. அஃதென்னவென்றால் நான் முதலில் தங்கள் கப்பலிற்குள் வந்தபோது என்னைச் சுற்றிலுமிருந்த தங்கள் மனிதர்கள் நான் எச்சமயமும் கண்டிராத அதிக அருவருக்கத்தக்க மிக்க சிறு ஜெந்துக்களாக எனக்குக் காணப்பட்டார்கள்.

ஏனெனில், நான் அத் தேசத்திலிருந்த போதெல்லாம் ஒருபோதும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்ப்பதேயில்லை. அஃதேனெனில் என் கண்கள் மிகுந்த பெருத்த

பொருள்களையே கண்டு வழக்கமாயினமையால் நான் என் சிற்றுருவத்தை நோக்கியபோது எனக்கு அதிக வெறுப்பாகவும் வெட்கமாகவும் இருந்தது என்று கூறினேன். அவர் அதன் மேல் கீழ்வருமாறு என்னிடம் உரைத்தனர். "உண்மையே, நாமெல்லோரும் போஜனஞ் செய்கையில் நீ ஒவ்வொரு பொருளையும் வியப்பாகவே கண்ணுற்றனை. அப்போது உனக்கு அளவில்லாத நகைப்பு உண்டானதாகவும் அதை நீ மிக்க கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டதாகவும் எனக்குத் தோன்றியது. அதற்குக் காரணம் உன் புத்தி உனக்குச் சரியாயில்லாமைதானென்று நான் எண்ணிக் கொண்டேன்."

நான் அதைக் கேட்டு அவரிடம் கீழ்வருமாறு சொல்லலுற்றேன். "தாங்கள் சொல்லுவது மிகவும் உண்மையே. இரண்டு மூன்று இரண்டறை வெள்ளி நாணயங்கள் ஒன்று சேர்ந்தாலிருக்கும் அளவைப் போன்ற தங்களுடைய தட்டுகளையும், ஒரு வாய்க்குப் போதாத பன்றியின் காலையும், விளையாட்டுக் கருவியைப் போல் தோன்றும் கோப்பையையும் கண்டபோது எனக்கு அடக்கக் கூடாத நகைப்பு வந்தது வாய்மையே." நான் இவ்வாறே அவருடைய மற்றச் சாமான்களைப் பற்றியும் வேடிக்கையாகவே பேசிக்கொண்டு போனேன். அத் தேசத்து மஹாராணியவர்கள் எனக்கென்று சில முக்கியமான சாமான்களை செய்வித்திருந்த போதிலும் நான் என்னைச் சுற்றிலுமிருந்த மற்றச் சாமான்களைக் கண்டபோதெல்லாம் மனிதர்கள் தங்கள் தப்பிதத்திற்கு நாணுவதுபோல என் உருவத்தைக் கண்டு நான் மிகவும் நாணமடைந்தேன். கேட்டன் துரையவர்கள் என் வேடிக்கையான பேச்சை நன்குணர்ந்து என்னிடம் கீழ் வருமாறு பேசலுற்றார்.

"உன் வயிற்றைக் காட்டிலும் உன் கண்கள் பெரியனவா யிருக்குமென்று உத்தேசிக்கின்றேன். ஏனெனில், நீ நன்றாகச் சாப்பிட்ட போதிலும் உன் வயிற்றை நான் நன்கு கவனிக்கவில்லை உன் பெட்டியைக் கழுகு தன் அலகில் தூக்கிச் சென்றதையும், பின்னர் பெட்டி ஆகாயத்தில் அதிக உயரத்திலிருந்து கடலில் விழுந்ததையும் பார்க்கக் கூடுமாயின் அவ்வித அற்புதக் காட்சிக்கு நான் நூறு பவுனுகிலும் மிக்க கௌரவத்துடன் அளிப்பேன். அஃது உண்மையில் மகா விசித்திர முள்ள காட்சியாகும். அக்காட்சியின் விநோதத்தைப் பற்றி இனி வரும் நம் சந்ததியாரும் அறியத்தக்க மதிப்பு அதன்பாலுளது"

எனக்குக் களங்கமுள்ள பேச்சில் அதிக விந்தையில்லையாயினும் அவர், அக்கேப்டன் துரையவர்கள், டான்கின் பட்டணத்திற்குச் சென்று அப்போது இங்கிலாந்திற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். நிற்க, எங்கள் கப்பல் இங்கிலாந்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் ஒரு பெருங் காற்று அடித்தது. பிறகு இரண்டு நாட்கள் அவ்வாறிருந்து காற்று நின்றுவிட்டது. நாங்கள் அநேக நாட்களாகத் தென்றிசையாய் சென்றுகொண்டிருந்தோம். பிறகு நியூஆலண்ட் (New Hollend) என்னும் தேசத்திற்குச் சென்று அதன் பிறகு குட்ஹோப்முனை (Cape of Good Hope) வந்தோம். எங்கள் யாத்திரை எல்லா வழியிலும் வெகு சுகமாகவே யிருந்தது. இன்னும் இவ்விஷயத்தைப் பற்றி இன்னும் விரிவாய் எழுதி வாசிப்போர்க்குத் தொல்லை கொடுக்க எனக்கும் பிரியமில்லை. கேப்டன் துரையவர்கள் பின்னர் இரண்டு மூன்று துறைமுகப் பட்டணங்களுக்குக் கப்பலைக் கொண்டுபோனர். அங்கே நல்ல ஜலமும் சில

சாமான்களும் கொண்டுவரும் பொருட்டு அவர் தம்வேலைக் காரர்களில் சிலரைப் பெரிய படகில் அனுப்பினார். ஆனால், நான் மாத்திரம் இங்கிலாந்து தேசம் வரும் வரையில் கப் பலைவிட்டுப் பிரியவேயில்லை. நான் 1706 ஆம் வருஷம் ஜூன்மாதம் 3-ஆந் தேதி என் சுயதேசம் வந்து சேர்ந்தேன். அப்போது நான் பிரயாணப் பட்டு சுமார் ஒன்பது மாதங் களாயின. நான் கப்பலிலேறி வந்ததற்காகச் செலுத்த வேண்டிய தொகையை அளிக்கும் வரையில் என் சாமான் களை யெல்லாம் கப்பலிலேயே வைத்துவிட்டுப் போவதாகக் கேப்டன் துரையவர்களிடம் கூறினேன். ஆனால், அவர் தாம் ஒரு காசும் என்னிடமிருந்து வாங்கமாட்டே னென்று உறுதியாகச் சொல்லிவிட்டார். பிறகு, நான் அவரைச் சில தினங்கள் கழித்து என் வீட்டிற்கு வருமாறு வேண்டிக் கொண்டேன். நாங்கள் அதன் பின்னர் அநேக பிரிய வசனங்களால் பிரியலானோம். நான் அவரிடம் 5 ஷிலிங் கடன் வாங்கி, ஏறிச்செல்வதற்கு ஒரு குதிரை கூலிக்கு வாங்கிக் கொண்டேன்.

நான் பிறகு சாலையில் சென்று கொண்டிருந்த போது அங்கே காணப்பட்ட வீடுகள், மரங்கள், ஆடுமாடுகள், மனி தர்கள் முதலியவற்றின் சிறு உருவங்களைக் கண்டதும் நான் லிலிபுட் தேசத்திலிருந்த கவனம் எனக்கு வந்து விட்டது. என் எதிரில் வந்த எந்தப் பிரயாணியையும் வழியைவிட்டுத் தொலைதூரம் செல்லும்படி முன்ன தாகவே நான் பலமுறை உரத்துக் கூவினேன்.

நான் என் சொந்த வீட்டிற்கு வந்ததும், அங்கே இருந்த ஓர் வேலைக்காரன் வீட்டின் தெருக்கதவைத் திறந் தான். நான் அப்போது என் தலை இடிபடு மென்று பயந்து

ஓர் சிறிய வழியில் எவ்வாறு ஓர் குள்ளவாத்து நுழையு மோ அவ்வாறு மிகக் குனிந்து அவ்வீட்டிற்குள் சென்றேன் நான் உள்ளே சென்றதும், என் மனைவி அளவில்லா ஆர்வத்துடன் என்னைக் கட்டியணைய ஓடிவந் தாள். ஆனால், நான் அப்போது அவள் முழங்கால்களுக் கும் கீழேகுனிந்து கொண்டேன். ஏனென்றால், நான் அவ் வாறு செய்யாமற் போனால் அவள் என் முகத்தைச் சேர்த்து முத்திகொடுக்க இயலாதென்று எண்ணிக் கொண் டேன். என் குமாரத்தி என் ஆசீர்வாதத்தைப்பெற முழங் காலிட்டு வணங்கினாள். ஆனால், அப்போது நான் அவள் செய்ததை யொன்றும் பார்க்கவேயில்லை. ஏனென்றால், எனக்கு வெகு நாளாகச் சுமார் அறுபதடி உயரத்திற்கு மேலேயே நிமிர்ந்து பார்க்கின்ற பழக்கமிருந்தது. நான் பிறகு அவளை ஒரு கரத்தினால் அவள் இடுப்பைப் பிடித்துத் தூக்குவதற்குச் சென்றேன். பின்னர் நான் என் வேலைக்கா ரர்களை மிகுந்த கஷ்டத்துடன் குனிந்து பார்த்தேன். அப் போது என் சிநேகிதர்களில் இரண்டொருவர் என் வீட் டிற்கு வந்திருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தபோது அவர்கள் சித்திரக் குள்ளர்களாகவும் நான் ஒரு இராட்ச தனாகவும் எனக்குத் தோன்றிற்று. நான் என் மனைவியை, "நீ ஏன் அதிக சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி வந்தனை" என்று கேட்டேன். ஏனென்றால், அவளும் என்குமாரத் தியும் அப்போது அதிக மெலிந்து காணப்பட்டார்கள். நான் பலவாறாகப் பேதமையாய்ப் பேசினதைக் கண்டு என் மனைவி மக்கள், முதலாயினோர் நான் முற்கூறிய கேப்டன் த்ரையவர்கள் என்னை முதலில் கண்டதும் எவ்வித அபிப் பிராயங் கொண்டனரோ அவ்வித அப்பிராயமே கொண்

டார்கள். அதன்காரணம் யாதெனில், அதிக பழக்கமுடைமையாலும், தப்பெண்ணங் கொள்ளுதலாலும் எவரும் அவற்றின் வயத்தவராகின்றார் என்பதாம். பின்னர் சற்று நேரத்திற்குள் நானும், என் மனைவி மக்களும், என் பிரிய நண்பர்களும் ஒருவரை யொருவர் இனிது அறியலாயினோம். என் மனைவி என்னை இனியாகிலும் எவ்விதப் பிரயாணமும் செய்யாம லிருக்கும்படி அதிக இரந்துவேண்டிக்கொண்டாள். எப்போதும் பிரயாணஞ் செய்தலே என் தலைவிதியா யிருந்தமையால் அவள் சொல்லை நான் எவ்வளவு தூரம் அங்கீகரித்தே னென்பதை என் பிரயாணங்களின் மூன்றும் பாகத்தை வாசிப்போர் அறிவார்கள். என் துர்ப்பாக்கியமுற்ற பிரயாணங்களின் இரண்டாம் பாகம் இதனோடு முடிவு பெற்றது.

முற்றிற்று.

4184

# தமிழ் நவீன நாவல்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஞானசம்பந்தன் ... ... ... | 1 | 0 | 0 |
| பிருதிவி ராஜன் (நாடகம்) ... ... | 1 | 0 | 0 |
| மனோரஞ்சிதம் (முதற் பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ஜெயசீலன் ... ... ... ... | 1 | 0 | 0 |
| அஞ்சனாக்ஷி முதற்பாகம் ... ... | 1 | 0 | 0 |
| திரிலோக மோஹனாங்கி ... ... | 1 | 0 | 0 |
| சந்திரோதயம் ... ... ... | 1 | 0 | 0 |
| சுகுணதீரன் (முதற்பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) ... | 1 | 4 | 0 |
| கீசகன் (நாடகம்) ... ... ... | 0 | 12 | 0 |
| பத்மலோசனி ... ... ... | 0 | 12 | 0 |
| லீலா ... .. ... ... | 0 | 12 | 0 |
| சுந்தரன் ... ... ... ... | 0 | 12 | 0 |
| ஆனந்த சுந்தரி ... ... .. | 0 | 12 | 0 |
| ஆங்கில சிரோமணிகள் ... ... ... | 0 | 12 | 0 |
| கன்னியின் முத்தம் (முதற்பாகம்) ... | 0 | 12 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) .. | 0 | 12 | 0 |
| நாடகமஞ்சரி ... ... ... | 0 | 12 | 0 |
| மங்கையர்க்கரசி ... ... ... | 0 | 12 | 0 |
| பூபதி ... ... ... ... | 0 | 12 | 0 |
| புருஷோத்தமன் சரித்திரம் ... ... | 0 | 10 | 0 |
| பன்னிரு நீதிக்கதைகள் ... ... | 0 | 10 | 0 |
| மாலிகா-பூஷணி ... ... ... | 0 | 10 | 0 |
| சிவாநந்தன் ... ... ... ... | 0 | 10 | 0 |
| நீலகண்டன் ... ... ... | 0 | 10 | 0 |
| ரஞ்சிதசிங் ... ... ... ... | 0 | 10 | 0 |
| ஸரஸா ... ... ... ... | 0 | 10 | 0 |
| இராமாயண சாரம் ... ... | 0 | 10 | 0 |
| ரம்பை ... ... ... ... | 0 | 10 | 0 |
| சாரதாம்பாள் சரித்திரம் ... ... | 0 | 8 | 0 |


ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

35, சின்னதம்பி தெருவு, சென்னை.

Caxton Press, Madras, E.